# ஞானச்சுடர்




ஆனி 2018

246 ஆவது மலர்

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

**பொருள்:** தனது உடம்பைப் பருக்கச் செய்வதற்குத் தான் வேறு உயிரின் இறைச்சியை உண்கின்றவன் எவ்வாறு மற்றவர்களுக்கு அருள் செய்வான்? (251)

பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.


**பொருள்:** பொருளைக் காப்பாற்றாதவரிடத்தில் பொருளில்லா திருத்தல்போல் ஊன் புசிப்பவரிடத்தில் அருளில்லை யாகும். (252)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### யோகமறியேன்



யோக மறியேன்யான் யோகியரை யும்மறியேன்
ஆகுநெறி மற்றொன் றறியேன்யான் – தேகமிது
வீழ்வதன் முன்னுன் விரையார் மலர்த்தாளைச்
சூழப் பணியாய் தொழுது 01

தொழுது வணங்கிநின் தூநெறியே செல்லும்
முழுமனத்தார் தங்கூட்டம் முன்னி – அழுதே
உருகி யுருகி யுளநைந்து கண்ணீர்
பெருக வரந்தருவாய் பின் 02

பின்ன ரெனக்குப் பிறப்போ டிறப்பென்னும்
மன்னுபெரு வாதைமற் றென்செய்யும் – உன்னைச்
சரணென் றடைந்த தகவுடையார் பாதம்
அரணென் றிருந்தேற் கறி 03

அறிவுக் கறிவாகி யப்பாலுக் கப்பாற்
பிறிவற் றிருக்கும் பெருமான் – நெறிநின்றார்
நீடூழி வாழ்வாரே நீநா னவனென்று
பாடுபட மாட்டார் பரிந்து 04

பரிந்து பணியாற்றிப் பாவமெல்லாந் தீர்த்தேன்
இருந்த படியிருக்கு மெம்மான் – வருந்த
வழியு மினியுண்டோ வாழ்வுடன் தாழ்வோ
செழுமலர்ப் பாதஞ் சிரம் 05

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 246

2018 ஆனி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| உள்ளம் பெருங்கோயில்... | திருமதி ஸ்ரீ வசந்தமலர் | 01 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -07 |
| மனித வாழ்வியல்... | கு. சோமசுந்தரம் | 08 -11 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 12 -15 |
| ஆடலரசனின் ஆனித்... | ஆர்.வீ. கந்தசுவாமி | 16 -17 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 18 -20 |
| ஈரடிபோல் நாலடியும்... | கே.எஸ். சிவஞானராஜா | 21 -24 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 25 -26 |
| படைப்பில் பஞ்சபூதங்கள் | இ. ஜெயபாலன் | 27 -29 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 30 -31 |
| வினைக்கேடர் | முருகவே பரமநாதன் | 32 -34 |
| மண்டூர்க் கந்தசுவாமி கோயில் | மூ. சிவலிங்கம் | 35 -37 |
| மணிவாசகரின் பக்திச்சுவை | பு. கதிரித்தம்பி | 38 -39 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 40 -44 |
| பசுவின் பெருமை | திருமதி பொ. செல்வக்காந்திமதி | 45 -47 |
| இறைவனும் மெய்யடியார்களும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 48 -50 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 51 -54 |
| வைகாசிப் பெருவிழா | வல்வையூர் அப்பாண்ணா | 55 -59 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 60 -62 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 63 -64 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்

# வைகாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் 245ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய கிராம சேவையாளரும், சமயவாதியும், ஆச்சிரமத்தோடு நீண்டகாலமாக பயணிப் பவருமாகிய திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள் மேற்கொண்டார்கள்.

இறைவணக்கத்தோடு அவர் ஆரம்பித்த உரையின் முதற்படியாக ஆச்சிரமம் ஆற்றும் பணிகளை அட்டவணைப்படுத்திக் கூறியதன்பின் இவை அனைத்திலும் மேம்பட்டது ஞானச்சுடர் வெளியீடாகும். கடந்த இருபது வருடங்களாக ஒரு மலர், அதுவும் ஆன்மீகம் சார்ந்ததாகவும், விளம்பரம் அற்றதாகவும் வெளி வருவது என்பது ஒரு மகத்தான விடயம். அச்செயற்பாட்டை ஆச்சிரமம் ஆற்றி வருவதனை இட்டு சைவ மக்களாகிய நாம் பெருமைகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அவரது வெளியீட்டுரை அமைந்திருந்தது.

வருடா வருடம் மலர் வெளியீட்டில் பங்குபற்ற வைக்கும் வேலவனது தாள் பணிந்து வணங்கி வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

ஞானச்சுடர் வைகாசி மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பை வழங்கி வருபவரும் யாழ்/ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி யின் ஆசிரியருமாகிய திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தமது உரையின்மூலம் ஆச்சிரமம் ஆரம்பித்த காலம் தொடக்கம் இற்றைவரை அதன் வளர்ச்சி பற்றியும் தாங்கள் எவ்விதத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு இணைந்தமை பற்றியும் விரிவாக சபையில் இருந்தோர்க்கு உணர்வு பூர்வமாக எடுத்துக் கூறினார்.

இறுதியாக குறிப்பிட்ட நேரத்திற்கு அமைவாக மதிப்பீட்டுரை ஆற்றவேண்டிய அவசியத்தை முன்னிட்டு மலரில் இடம்பெற்ற ஒருசில கட்டுரைகளில் வெளிவந்த கருத்துக்களைக் கூறித் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

தென்முகக் கடவுளுக்கு ஒரு திருமனை. அதுதான் திருவாசக அரண்மனை. யாழ் நகரின் எல்லையில் - பழமை வாய்ந்த நாவற்குழி மண்ணில் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்திற்கு ஒரு அரண்மனை தோற்றம் பெற்றிருப்பது சைவ உலகம் பெருமை கொள்ளும் விடயமாகும். இந்தப் பெருமைக்குரிய நற்பணியை முன்னின்று நிறைவு செய்த சிவபூமி அறக்கட்டளை நிறுவனமும் - அதன் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் போற்றப்பட வேண்டியவர்கள். அத்துடன் திருவாசக அரண்மனை அமைவதற்கு நிலமும் நிதியும் கொடுத்து உதவிய இலங்கையைப் பிறப்பிடமாகவும் தற்போது அவுஸ்திரேலியாவை வசிப்பிட மாகவும் கொண்ட வைத்திய நிபுணர் வை. மனோமோகன் - சிவகௌரி தம்பதியரை சைவ உலகம் கைகூப்பித் தொழுகிறது. வாழ்க அவர்கள் பணி. வளர்க அவர்கள் தொண்டு.

இலங்கையில் எங்கும் இல்லாதபடி தெட்சணாமூர்த்திக்குத் தனிக்கோவில், கருவறைக்கு நேர் எதிரே தனிக் கருங்கல்லினாலான இரதம், கருவறையைச் சுற்றிலும் 108 சிவலிங்கங்கள், சுற்று மண்டபங்களில் திருவாசகத்தின் 658 பாடல்களும் உளிகொண்டு கருங்கல்லில் செதுக்கப்பட்டிருப்பதும் திருவாசக அரண்மனைக்குச் சிறப்புச் சேர்க்கிறது.





நாமும் ஒருமுறை அரண்மனை சென்று தென்முகக் கடவுளைக் கரம்கூப்பித் தொழுது பயன் பெறுவோமாக.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 07. பொருகளத் தலகை வகுப்பு

துதிக்கை மலைகளை யடுக்கி யலகைகள்
துதிக்க அவைமிசை யிருக்கு மரசின
துளக்க முறுசுடர் விளக்கை யனையன
சுழித்து வெகுவர விழித்த விழியின
துதித்து வழிபட நடத்தல் குறையன
சுகித்து வெளிபட நகைத்து வருவன
துணித்த கரியுட றிணைத்த மிடறிடை
துவக்கி யவசமொ டுவிக்கி நிமிர்வன
தொலைத்த முடிநிரை பரப்பி வயிரவர்
சுழற்றி நடமிடு துருத்தி யிடுவன
துணுக்க முளவவர் துணுக்க மிலையென
எடுத்த கழிநெடில் படித்து வருவன
சுரர்க்கு மகபதி தனக்கு மினியொரு
துளக்க மிலையென மகிழ்ச்சி புகல்வன
தொகுக்கு தொகுதொகு தொகுக்கு தொகுதொகு
தொகுக்கு தொகுவென நடித்து வருவன:,

எதிர்த்து மலைவன முடித்து வெளிமுக
டிடித்து விழுமிடி யிடித்த குரலின
இரட்டை யிளமதி யுதித்த வெனவெளி
றெயிற்றி னிலவெழு மிருட்டு வடிவின
இயக்க முறுபல ரதத்தி னுருளைக
ளிருத்தி யணிதரு பெருத்த குழையின
இடக்கை குடமுழ வுடுக்கை துடிபறை
யெடுத்து முகிலென முழக்கி வருவன
இதத்த கயிசிக மினித்த பயிரவி
யெழுப்பி யெழுவகை நிருத்த மிடுவன
இறப்பும் வருமெழு பிறப்பு மறவினி
திருத்து மெளனமயில் விருத்த மொழிவன
இடக்க ரியிலொரு செருத்த ணியிலினி
திருக்கு மறுமுக னொருத்த னிலையவன்
இளைத்து நிசிசரர் பதைத்து மடியவொ
ரிமைப்பி லமர்பொரு களத்தி னலகையே.

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

அ. பரமநாதன்
(அளவெட்டி மத்தி)
Dr க. சிவநேசன்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
பொ. வியாகேஸ்
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)
ம. ஸ்ரீகாந்தன்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி
(விதானையார் வளவு, காங்கேசந்துறை)
கந்தையா ஏகாம்பரம்
(புறாடிலேன், அரியாலை)
சி. நடேசமூர்த்தி J.P
(வங்கி ஊழியர், அச்சுவேலி)
சி. கதிரவேலு
(தொண்டைமானாறு)
ஐ. சிவநாதன்
(மருதம், நெல்லியடி)
திருமதி ஐடா
(புலோலி தெற்கு, புலோலி)
க. இராசதுரை
(நீர்வேலி)
வ.சி. கணபதிப்பிள்ளை
(ஆவரங்கால், புத்தூர்)
செல்வி செ. தவமணி
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)
உரிமையாளர்
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
Dr V. கணேசவேல்
(சுந்தரவேல் வைத்தியசாலை, உரும்பராய்)
பரமேஸ்வரன் தயாரூபன்
(கல்வியங்காடு)

தலைவர் / செயலாளர்
(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)
ஐ. கணேசலிங்கம்
(யாழ்ப்பாணம்)
ஆ. ஜெயக்குமாரன்
(கப்பூது, கரவெட்டி)
உரிமையாளர்
(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
கு. சோதிராசா
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)
ஆனந்தராசா மணிமாறன்
(அராலி மத்தி, அராலி)
உரிமையாளர்
(பேபி போட்டோ, கந்தர்மடம்)
T. மணிவண்ணன்
(மிருசுவில்)
மு. வைகுந்தநாதன்
(இலங்கை வங்கி, அச்சுவேலி)
S. விக்னேஸ்வரராசா
(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)
K. சுப்பிரமணியம்
(கல்லூரி வீதி, இளவாலை)
மு. இராசேந்திரா
(தும்பளை, பருத்தித்துறை)
பொ. வெங்கடேஸ்வரன்
(வல்வெட்டித்துறை)
ம. ஸ்ரீஸ்கந்தராசா
(தேசிய சேமிப்பு வங்கி- சிறுப்பிட்டி, நீர்வேலி)
இ. சரவணபவன்
(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)
சு. சிவனேசன்
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
செல்லத்துரை தங்கராசா
(அன்னை இல்லம், உரும்பராய்)
ச. வடிவேலு
(ஊரெழு, சுண்ணாகம்)

**வே. கணபதிப்பிள்ளை**

(குலானை, கரவெட்டி)

**திருமதி அகிலன் அருந்ததி**

(போதராமடம், துன்னாலை)

**க. பூலோகரட்ணம்**

(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)

**சு. கிருபானந்தன்**

(கே.கே.எஸ் றோட், இணுவில்)

**ச.சிவனேசன்**

(கேணியடி, திருநெல்வேலி)

**திருமதி அ. வினிதா**

(நல்லூர், யாழ்ப்பாணம்)

**கு. நித்தியானந்தன்**

(பலாலிவீதி, யாழ்ப்பாணம்)

**S. ராகவன்**

(பிரம்படி, கொக்குவில்)

**உரிமையாளர்**

(அம்பிகாபதி பான்ஸ்கூட், யாழ்ப்பாணம்)

**கோ. யோகலிங்கம்**

(கிளை. முகாமையாளர், புத்தூர்)

**சி. நவரெத்தினம்**

(துவாரகை, கரணவாய்)

**திருமதி அ. குணநாயகம்**

(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

**ப. சிவராசா**

(தூதாவளை, கரணவாய்)

**திருமதி தங்கராசா ஈஸ்வரி**

(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)

**கு. லோகேந்திரன்**

(மில் ஒழுங்கை, மல்லாகம்)

**சோ. கருணாகரன்**

(சுண்ணாகம்)

உ. செந்தூரன்
(பிரதான வீதி, அச்சுவேலி)
வை. கமலநாதன்
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)
கு. சிவபாலராஜா
(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)
இ. கதிர்காமநாதன்
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)
க. ஆனந்தராசா
(நெல்லியடி, கரவெட்டி)
இரா. அருட்செல்வம்
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)
சி. துரைராசா
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
செ. முருகதாஸ்
(சாந்தை, பண்டத்தரிப்பு)
திருமதி ப. பூமாவதி
(முருகன் கோவில்வீதி, நெல்லியடி)
வசந்தன் சிவஞானம்
(அல்வாய் மேற்கு, திக்கம்)
திருமதி திருத்தேவி ஏகாந்தன்
(வல்வெட்டித்துறை)
T. நாகராசா
(நல்லூர் யாழ்ப்பாணம்)
கா. தெட்சணாமூர்த்தி
(பண்டத்தரிப்பு)
திருமதி ப. இராஜேஸ்வரன்
(கோண்டாவில்)
பா. துவாரகன்
(ஏழாலை தெற்கு, சுன்னாகம்)
ம. பேரின்பநாயகி
(நீர்வேலி)


# உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

– திருமதி ஸ்ரீ. வசந்தமலர் அவர்கள் –

அவரவரும் தம்முள் இருந்து விளங்கும் தலைவனை உணர்ந்த நிலையில், தமது உள்ளம் பெருங்கோயிலாகவும், உடம்பு ஆலயமாகவும் திகழ்வதாகக் கண்டு, குறிப்பேற்றுவர். இறைவன் வெளிப்பட்டுத் தோன்றும் இடம் ஆலயமாகத்தான் விளங்கும். எனவேதான், உள்ளம் பெருங்கோயிலாகவும், உடம்பு ஆலயமாகவும் திகழ்கின்றன. ஊருள், நகருள் இறைவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திகழ்வது போன்று உயிருள் வெளிப்பட்டுத் தோன்றும் இறைவனும் பெருங்கோயில் கொண்டு திகழ்கின்றார். "தேஹோ தேவாலயஹ:" "உடலே கோயில்" என்று ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள்.

ஊர்தோறும் அமைந்துள்ள திருக்கோயில்களில், இரண்டு வகையான அமைப்புடைய திருக்கோயில்கள் அமைந்து விளங்கக் காணலாம். அவை: உடல் அமைப்பைப் போன்று அமைந்த கோயில்களும், இருதயக் கமலம் போன்று அமைந்த கோயில்களுமாகும்.

உடம்பாகிய கோயிலுள் ஊரிலுள்ள திருக்கோயிலின் அமைப்பினை இனிதுணரலாகும். திருக்கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நீராட்டு மண்டபம், கொடிமர மண்டபம், நிருத்த மண்டபம் முதலியனவும், பிரகாரங்களும், யாகசாலை, நந்தி, பலிபீடம் முதலியவைகளும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.



அறிவுக்காகச் செய்யப்படும் முதலீடு எப்போதும் கொடுத்த வட்டியைத் தரும்.

உடம்பாகிய கோயிலுள்ளும் மூலா தாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநா கதம், விசுத்தி, ஆக்கினை என்ற ஆறு ஆதாரங்கள் உள்ளன. இவை ஆறும் யாக மண்டபம், அலங்கார மண்டபம், கல்யாண மண்டபம், நிருத்தமண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் என்ற ஆறு மண்டபங்களை யும் உணர்த்துகின்றன.

உடம்பில் தலை, கழுத்து, மார்பு, நாபி, பாதம் என்ற ஐந்து பிரிவுகள் உள்ளன. இவையும் முறையே தலை கருவறையை யும், கழுத்து அர்த்த மண்டபத்தையும், மார்பு மகாமண்டபத்தையும், நாபி யாகமண்டபத்தை யும், பாதம் கோபுரத்தையும் உணர்த்துகின் றன என்றும் சான்றோர் கூறுவர்.

திருக்கோயில் ஐந்து பிரகாரங்களுடன் அமைந்து விளங்குகின்றது. உடம்பில் அன்ன மயகோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமய கோசம் என்று ஐந்து கோசங்கள் உள்ளன. கோசம் என்றால் சட்டை என்று பொருள். ஐந்து கோசங்களும் உடம்பாலயத்தின் ஐந்து பிரகாரங்களாக உள்ளன.

உடம்பில் 32 கட்டுக்களோடு முது குத் தண்டு உள்ளது. திருக்கோயிலில் உள்ள கொடிமரம் போன்று, இம்முதுகுத் தண்டு உடம்பாலயத்தின் கொடிமரமாக விளங்குகின்றது. கொடிமரத்தில் கொடி ஏறிய வுடன் இறைவன் வெளியே வந்து காட்சி தருதலைப்போன்று, முதுகெலும்பாகிய வீணா தண்டத்தில் வளைந்து செல்லுகின்ற சுழு முனை என்ற வெள்ளை நரம்பின் வழியாகப் பிராணவாயு ஆறு ஆதாரங்களையும் கடந்து, பிரமரந்தியத்தைத் தாண்டி ஸஹஸ்ரார வெளியிலே சென்றவுடன் சிவஜோதி காணப் படும்.

திருக்கோயில் முன் கோபுரம் முதல் கருவறை வரையுள்ள முழுபாகம், மனிதன் மேற்கே தலைவைத்துக் கிழக்கே கால்நீட்டி மல்லாந்து படுத்திருப்பதை உணர்த்துவது. திருக்கோயிலுக்கு முக்கியமாக விளங்கும் கருவறைபோல், எண் சாண் உடம்பாலயத் திற்கு தலை அமைந்து விளங்குகின்றது. கழுத்து அர்த்தமண்டபம் என்பதை முன்பே கூறப்பட்டுள்ளது. திருக்கோயிலில் துவார பாலகர் காவல் புரிந்து நிற்றல் போன்று, இரு தோள்களும் துவார பாலகர்களாக உள் ளன. திருக்கோயிலின் முன் கோபுரம் உயர்ந்து நிற்றல் போன்று, பாதங்கள் உயர்ந்து உள் ளன என்றெல்லாம் ஆகமங்களில் உணர்த்தப் பெறுகின்றன. இவ்வுண்மைகள் காரணமாகவே பண்டைய ஞானிகள் உடம்பையும், உயிரை யும் ஓம்பவேண்டிய அவசியத்தையும், உபா யங்களையும் உரைத்துச் சென்றுள்ளனர்.

### திருமூலர் அனுபவம்:

உடம்பை இறைவனின் உறைவிடமாகக் கண்டார்கள் ஞானிகள். அப்பெரியவர்களுள் திருமூலர் குறிப்பிடத்தக்க பெரியவராவார்.

இவர், மனித உடம்பைப் பேணவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். மனித உடம்பு மகாதேவனின் ஆலயமாகத் திகழும் வகையினையும், தாம் உடம்பை வளர்த்து, அவ்வுடம்பாலயத்துள் உத்தமனைக் கண்டு மகிழ்ந்ததனையும் தெளிவாக மொழிந்துள்ளார்.

### உடம்பைப் பேணும் உபாயம்:

முறை தெரிந்து வழுவாது பேணுதல் வேண்டும். இந்த உடம்பு நெடுநாள் இருத்தல் வேண்டும். உடம்பு இருந்தால்த்தான் உயிர் அவ்வுடம்புள் நிலவ இயலும். உடம்பு அழிந்தால்

*கௌரவமும் தாழ்மையும் பணசக்தியைப் பொறுத்தே இருக்கிறது.*

உயிர் அகலும். உயிர் அகன்றால் ஞானமுறுவது எவ்வாறு? ஞானமுறவில்லையெனில் தன்னுள் விளங்கும் தலைவனைக் காண்பது எவ்வாறு? தலைவனைக் கண்டு அருள்பெற வில்லையெனில் பிறவித் துயரைப் போக்குதல் எவ்வாறு? எனவே, இம்மனித உடம்பை நெடுநாள் பேணி, அதனுள் உயிரை நிலவச் செய்து, ஞானத்தை எய்துதல் வேண்டும் என்பதை "சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய வேண்டும்" என்னும் முதுமொழியும் வலியுறுத்துகின்றது. இக்காரணத்தை உணர்ந்து திருமூலர் தமது உடம்பை வளர்த்தார் என்பதையும், உடம்பை வளர்த்ததன் வாயிலாக உயிரையும் பேணினார் என்பதையும் அறிகிறோம்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே"

என்னும் திருமந்திரப் பாடல் இக்கருத்தை உணர்த்துகின்றது.

உடம்பை வளர்த்ததன் வாயிலாக உயிர் வளர்த்த திருமூலர், இறைவனைத் தியானித்துத் துதித்தால், அவ்வாறு தியானிப்போர் அப்பெருமானின் அடியாராவர். "அவ்வடி யாரின் உடம்பு, இறைவன் வெளிப்பட்டுத் தோன்றி விளங்கும் ஆலயமாகும்" என்ற உண்மையையும் உள் வைத்து,

"நடமாடும் கோயில் நம்பர்க்கு ஈயின்
படமாடும் கோயில் பகவற்க தாமே"

எனக் கூறியுள்ளார். நடமாடும் கோயில் என்பது அடியாரைக் குறிக்கும். இந்த உடம்பு மகாதேவன் குடிகொள்ளும் கோயிலாக விளங்குவதால் உள்ளப் பூஜை செய்தல் வேண்டும் என்பதையும் திருமூலர் தெளிவுபடுத்தியுள்ளார். உள்ளப் பூஜை செய்ய வேண்டு வதைக் கூறும்போது, உடம்பாலயத்தைப்பற்றி தெளிவாகக் கூறியுள்ளார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

இப்பாடலில் உள்ளத்தினைக் கருவறையாகவும், உடம்பினை ஆலயமாகவும், வாயி னைக் கோபுர வாயிலாகவும், உயிரைச் சிவலிங்கமாகவும், ஐம்புலனைப் பெரிய மணி விளக்காகவும் கூறியுள்ளார் திருமூலர்.

இவ்வாறெல்லாம் உடம்பாலயத்தை விரித்துரைத்த திருமூலர், உடம்பை இறைவன் கோயிலாகக் கொண்டு எழுந்தருளியுள்ளான் என்பதையும் அவ்வாறு எழுந்தருளிய பரம்பொருளை நான் உடம்பினுள் கண்டேன். அதனால் யான் இந்த உடம்பை ஓம்புகின்றேன் என்பதையும்,

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே"

என்னும் பாடலால் தெளிவுபடுத்தியுள்ளார்.

*சரியான நேரத்தைத் தேர்ந்தெடுப்பது நேரத்தை மிச்சப்படுத்துவதாகும்.*

கற்றதனாலாய பயன் கடவுளின் திருவடி தொழுதல், உடம்பைப் பெற்றதனாலாய பயன் உடம்பினுள் உத்தமனைக் காண்டல் என்பது நம் நாட்டு ஞானிகளின் கருத்து.

"உடம்பினாலாய பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்"

## மனங்களில் நிறைந்தவன்!

வணங்கிடும் அடியவர்க்கு
வற்றாத அருள் வழங்கும்
வள்ளல் எங்கள்
சந்நிதி வேல் முருகன்!
வாழ்வில் வளங் கொழிக்க,
வரும் பிணி, பசி நீங்க
வந்து துயர் களைவானே
எங்கள் குகன்!!

ஆற்றங் கரையினிலே
அமைந்தது அவன் கோவில்!
அண்டி வந்து தொழுவோர்க்கு,
அதுவே இன்ப வாயில்!
போற்றுவர் பக்தரெல்லாம்
அவன் திருப் புகழ் பாடி!
பொற் பதங்கள் வேண்டி நிற்பர்,
அற்புதனைத் தினம் நாடி!

கோவில் மணியோசை
"ஓம் - ஓம்" என்றொலிக்கும்!
குமரன் கை வேல் என்றும்
அபயந்தனை அளிக்கும்!
பாவெடுத்து அவன் புகழை
பாடிடுவார் பண்ணோடு!
பைந்தமிழில் பாடிடுவார்!
வந்து மிகக் கனிவோடு!

அன்னதானக் கந்தன், எங்கள்
அனைவர்க்கும் சொந்தமவன்!
ஆறுபடை வீடமர்ந்த
அழகன்! திருக்குமரன்!
மன்னு புகழ் சந்நிதியில்
மகிழ்ந்து வந்து உறைந்தவன்!
மனமாரத் துதிப்போரின்
மனங்களில் நிறைந்தவன்!!

- கி. குலசேகரன் -

நடந்ததற்காக வருந்தாமல் முடிந்ததற்காக மகிழ்ச்சிகொள்ள வேண்டும்.

# திருச்சதகம் (தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
–சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்–
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 06. அநுபோக சுத்தி

61. முடித்தவாறும் என்றனக்கே தக்க தேமுன் அடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலுறையே சோர்ந்த வாறும் முகங்குறுவேர்
பொடித்த வாறும் இவையுணர்ந்து கேடென் றனக்கே சூழ்ந்தேனே.

**ப-ரை:**

என் தனக்கு முடித்தவாறும் தக்கதே- எனக்குப் புழுக்கூடு இது காத்திங்கிருப்பதாக முடிபு செய்ததும் பொருந்துவதே. முன் அடியாரைச் சோராமல் பிடித்தவாறும் தக்கதே- முன்னர் உன்னை நாடிய மெய்யடியாரைச் சோரம் போகாமல் நீ பிடித்துக்கொண்ட விதமும் தக்கதே. சோரனேன்- மாயாசத்தியால் கவரப்பட்டவனாகிய யான், இங்கு ஒருத்தி வாய் துடித்தவாறும்- இவ்வுலகத்திலுள்ள மாயையாகிய ஒருத்தியின் வாய் இதழ் துடித்த விதமும், துகில் இறையே சோர்ந்த வாறும்- அவள் அணிந்திருந்த ஆடை சிறிது வழுவிய விதமும், முகம் குறுவேர் பொடித்த வாறும்- முகத்திற் சிறிய வியர்வை அரும்பிய விதமுமாகிய, இவை உணர்ந்து என தனக்கே கேடு சூழ்ந்தேன்- இவைகளை உணர்தலால் எனக்கு யானே கேட்டினைக் கருதுவேனாயினேன்.

எனக்குப் புழுக்கூடிது காத்திங்குருக்க முடித்தவாறும் பொருந்துவதே; முன் மெய் அடியாரைச் சோராமற் பிடித்தவாறும் தக்கதே, சோரனேன் இவ்வுலகத்திலுள்ள மாயையாகிய ஒருத்தியின் வாயிதழ் துடித்தவாறும், அவள் அணிந்த துகில் சிறிது வழுவிய விதமும், முகத்திற் சிறிய வியர்வை அரும்பிய விதமுமாகிய இவைகளை உணர்தலால் எனக்கு யானே கேட்டினைக் கருதுவேனாயினேன் என்பதாம்.

முடித்தவாறும் என்றது முன் திருப்பாட்டில் "முடையார் புழுக்கூடிங்கிதுகாத்திங்கிருப்பதாக முடித்தாயே" என்பதைச் சுட்டியது. அங்கே இது தகுமோ என எண்ணிய அடிகள், இங்கே என் நிலைமைக்கு இது தக்கதே என உடம்பாட்டாற் கூறி இரங்குகின்றார்.

முன் என்றது இறைவன் பரமாசாரியனாக எழுந்தருளி அடிகளை அடிமை கொண்ட நாளைக் குறித்தது. அடியாரைச் சோராமற் பிடித்தல்- மெய்யடியாரை மாயா சத்தி கவராமல் திருவருட் சத்தியால் தம்பால் இயைவித்தல். "தக்கதே" என்பதை, "முடித்தவாறுந் தக்கதே" பிடித்தவாறுந்

தக்கதே என ஈரிடத்தும் கூட்டுக. சோரனேன் என்றது மாயாசத்தியால் கவரப்பட்டேனாகிய யான் என்றவாறு. ஒருத்தி என்றது மாயையை. வாய் துடித்தவாறும்- வாயிதழ் துடித்த விதமும் வாய்பவளந் துடித்தவா" எனத் திருக்கோவையாரில் (32) வருதலுங் காண்க. இறை- சிறிது. "மற்று இறைகுறையுண்டு" (திருக்கோவை 94) என்புழியும் இப்பொருட் டாதல் காண்க. குறுவேர்- அச்சம் முதலிய வற்றாற் சிறிதாகத் தோன்றும் வியர்வை. பொடித்தல்- அரும்புதல்; தோன்றுதல் "முலை பொடியா" திருக்கோவை 104. வாயிதழ் துடித்தலும் துகில் இறை சோர்தலும் முகம் குறுவியர் கொள்ளுதலும் மாயையின் ஆற்றல்கள். வாய் இதழ் துடித்தலால் மொழியும், துகில் சோர்தலால் மெய்யும், ஆசையின் வெப்பத்தால் முகம் வியர் பொடித்தலால் மனமும் காமவயப்பட்டமை கூறினார்.

இவை உணர்ந்து என்றது பிராரத்த வினையுடன் உலகில் வாழ்ந்திருந்து வினைப் பயன்களை அனுபவிக்கும்போது கடவுள் தியானம் இடையீடுபடுதலான் மாயையின் ஆற்றல்கள் புலப்படுதல் பற்றியாகும். உணர்ந்து என்னும் செய்தனெச்சம் உணர்தலால் என ஏதுப்பொருளில் வந்தது. சூழ்ந்தேனே என்றது இறைவன் அருள்வழிப்பட்டோர் இவ்வுலகில் வாழுங் காலத்து மாயையின் சக்திகளால் தாக்குண்டு கேடடைவர் என்பதனை அடிகள் தம்மேலட்டுக் கூறியவாறு.

இதன்கண், "ஒருத்தி வாய் துடித்த வாறும்" என்பது முதலியவற்றாற் குறிக்கப் பட்ட அநுபோகங்களைச் சுத்திசெய்ய வேண்டு மென வேண்டிக் கொள்ளுதல் புலப்படுதலின் அநுபோகசுத்தியென்னும் ஆறாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 57.

62. தேனைப் பாலைக் கன்னலின் தெளியை யொளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை உம்ப ரானை வம்பனேன்
நானின் அடியேன் நீயென்னை ஆண்டாயென்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் தன்மையே.

**ப-ரை:**

தேனைப் பாலைக் கன்னலின் தெளியை- தன்னைப் பாவிப்பவர்களுக்குத் தேனும் பாலும் கரும்பின் தெளிந்த சாறும் போல இனிமையைச் செய்பவனும், ஒளியை- பேரொளியுருவினனும், தெளிந்தார் தம் ஊனை உருக்கும் உடையானை- தன்னைப் பரம் பொருள் எனத் தெளிந்த மெய்யன்பர்களின் ஊனுடலை உருகச் செய்யும் ஆண்டவனும், உம்பரானை- வானோர்க்குயர்ந்தவுலகமாகிய சிவபுரத்தரசனுமாகிய இறைவனை நோக்கி வம்பனேன்- நிலையான அன்பில்லாதவனாகிய யான் நான் நின் அடியேன் நீ என்னை ஆண்டாய் என்றால்- நான் நினக்கு அடியவன்; நீ என்னை ஆட்கொண்டவன் என்று கூறினால், என் தன்மை- எனது தன்மை. அடியேற்குத் தானும் சிரித்து அருளலாம் தன்மையே ஆம்- அங்ஙனம் கூறும் அடியேன் பொருட்டு அவ்விறைவன் தானும் எள்ளி நகைத்தருளலாம் தன்மையளவினதேயாகும்.

தன்னைப் பாவிப்பவர்களுக்குத் தேனும் பாலும் கரும்பின் தெளிந்த சாறும்போல் இனிமையைச் செய்பவனும் பேரொளியுருவினனும் தன்னைப் பரம்பொருள் எனத் தெளிந்த மெய்யன்பர்களது ஊனுடலை உருகச் செய்யும் ஆண்டவனும் சிவலோகத் தரசனுமாகிய இறைவனை நோக்கி வம்பனாகிய

யான் "நான் நின் அடியேன்; நீ என்னை ஆண்டாய்" என்றால் எனது தன்மை அங்ஙனம் கூறும் அடியேன் பொருட்டு அவ்விறைவன் தானும் எள்ளி நகைத்தருளலாம் தன்மையள வினதேயாகும் என்பதாம்.

கன்னலின் தெளி- கரும்பினின்றெடுக்கப்பட்ட சாற்றின் தெளிவு. தன்னைப் பாவிப்பார்க்கு இறைவன் தேனும் பாலும் கரும்பின் தெளிவும்போல இனிமையைச் செய்தலின், தேனைப் பாலைக் கன்னலின் தெளியை" என்றார்.

"ஞானக் கரும்பின் தெளியைப் பாகை"

பொற். 15.

"தேறலைத் தெளியைத் தெளிவாய்த்ததோர், ஊறலை"

தே. நாவு. 212:1

"தித்திக்குந் தேனைப் பாலைத் தீங்கரும்பி னின்சுவையைத்
தெளிந்ததேறற் குருமணியை"

தே. நாவு. 243:1

"பாவிப்பார் மனத்தூ றுமத் தேனைக் கட்டியைக்
கரும்பின் தெளிதன்னை" தே. சுந். 59:10

என்னும் திருவாக்குகளும் காண்க.

இறைவன் பேரொளி யுருவினனாத லின் "ஒளியை" என்றார். தெளிந்தார் என்றது இறைவனைப் பரம்பொருள் என ஐயந்திரி பறத் தெளிந்த மெய்யன்பர்களை, ஊன் என்றது ஊனுடலை உணர்த்தியது. ஊனை உருக்கும் என்றார். இறைவனருளால் உள் ளொளியாகிய ஞானம் பெருகுந்தோறும் ஊனுடல் சுருங்குதல்பற்றி. "ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி" (பிடித்த9) என மேல்வருதலுங் காண்க. உடையான்- ஆட்கொண்டவன். உம்பர் என்றது எல்லா உலகங்களுக்கும் மேலாகிய சிவபுரத்தை உணர்த்தியது. வம்பனேன்- நிலையான அன் பில்லாத யான். "வம்பனேன் வினைக் கிறுதியில்லையே" (சத93) "வம்பனேன் றன்னை யாண்டமா மணியே" (வாழாப்2) என வருவன காண்க. வம்பு- நிலையின்மை. "வம்பு நிலையின்மை" என்பது தொல் காப்பியம் (உரி21)

நான் நின் அடியேன் நீயென்னை ஆண்டாய் என்றால் சிரித்தேயருளாம் தன்மை யென்றது, அடியனாதற்கும் ஆட்கொள்ளப்படு தற்கும் தகுதியில்லாதவனாகிய யான் "நின் அடியேன்" என்றும் "நீ என்னை ஆண்டாய்" என்றும் கூறினால் அது இறைவன் நகைத்தே யருளலாம் தன் மைத்து என்றவாறு. தான் என்னும் படர்க்கையொருமைப் பெயர் இறை வனை உணர்த்தியது. உம்மை, இறந்தது தழீஇய எச்சவும்மை, சிரித்தே என்பதில் ஏகா ரத்தைப் பிரித்து தன்மையே யாம் எனக் கூட்டுக.

இதன்கண், என் தன்மை தானும் சிரித்து அருளலாம் தன்மையேயாம் என்ற தனால் அங்ஙனம் இறைவன் சிரித்தருளுத லாகிய பேறுகிடைக்கப்பெறின் அதனால் என் உலக அனுபவங்கள் சுத்தியடையுமே என் னும் விழைவு புலப்படுதலின் அநுபோகசுத்தி யென்னும் ஆறாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 57.

(தொடரும்...

*ஒரு மனிதனை தெரிந்து கொள்வது என்பது அவன் முகத்தை அல்ல, அவன் இதயத்தை.*

# மனித வாழ்வியல் விழுமியங்கள்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

பண்டைய காலத்தில் மாணவர்கள் குருகுலக் கல்வி கற்று, ஆச்சிரமத்தை விட்டு நீங்கி தத்தம் இல்லங்களுக்குச் செல்வதற்குமுன்; ஆசிரியப் பெருந்தகைகள் அவர்களை அழைத்துப் பின்வருமாறு அறிவுரைகள், அறவுரைகள்கூறி அன்புடன் ஆசீர்வதித்து அனுப்பி வைப்பது அக்காலத்து உயர்ந்தோர் மரபாகப் பேணப்பட்டு வந்தது.

"உண்மையே பேசு; தர்மம் கடைப்பிடி.
தாயைத் தெய்வமாக மதித்து, அவளுக்குப் பணிவிடை செய்.
தந்தையைத் தெய்வமாக மதித்து, அவருக்குச் சேவை செய்.
ஆசிரியரைத் தெய்வமாகப் போற்றி அவருக்கு ஏவல்புரி.
விருந்தினரை உபசரித்து, அவருக்கு உதவி செய்.
கடமையை நிறைவேற்றுவதில் எப்பொழுதும் கருத்தாயிரு.
பெரியோருக்கு மரியாதை அளி.
கர்வம், செருக்கு கொள்ள வேண்டாம்.

ஆசிரியப் பெருமக்களின், தர்மம் சார்ந்த வாழ்வியல் விழுமியங்களை ஏற்றுப் போற்றி, அவற்றைத் தம் வாழ்நாட்கள் முழுவதும் மாணவர்கள் கடைப்பிடித்தனர். மனித "வாழ்க்கைக்கு உறுதுணையாக வருவது, தூய நற்கல்வி" என்பது திருமூலரின் திருமந்திர வாக்கு. "கல்வியே கருந்தனம்", அதனால் "இளமையிற் கல்" என்றனர் நம் முன்னோர். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"ப் போன்று, கல்வி கற்றவர் மனதில் நன்கு பதிந்துவிடும். "கற்க மறுப்பவன், வாழ மறுக்கிறான்" என்கிறார் பகவான் இராமகிருஷ்ணர். மனிதன் மனிதத் தன்மைகள், மனிதப் பெறுமதிகளுடைய மனிதனாவது, பெற்ற பிறப்பினால் அன்று; அவன் கற்ற கல்விச் சிறப்பினால் ஆகும்.

"கேடில் விழுச் செல்வம்" கல்விச் செல்வம் என்கிறார் வள்ளுவப் பெருமான். தூய நற்கல்வியைப் பெற்றுக்கொள்ளாத மனிதர்கள் விலங்குகளுக்குச் சமமாவர். கற்ற விழுமியஞ்சார் கல்வியினாலேயே; மனிதன் விலங்குத் தன்மை நீங்கப்பெற்றவனாய்; மிண்டு மனம் அழிக்கப் பெற்றவனாய்; மனிதத் தன்மைகள், பண்புகள் அடையப் பெற்றவனாய்; தொண்டுமனம் மீளப்பெற்றவனாய் விளங்குகிறான்.

தற்காலத்தில் வழங்கப்படுகின்ற கல்வி மாணவர்களுக்கு எத்துணை மனித மேம்பாட்டைத் தருகின்றது. ஒழுக்க வாழ்வுக்கு ஆதாரமாக உள்ளது; என்பது சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. "கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை" என்பர்.

இன்றைய கணக்கற்ற ஒழுங்கீனங்களும்; அலங்கோலங்களும்; முறைதவறிய மனித நடத்தைகளும் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளும்; சமூகத்தில் தாராளமயமாக்கப்பட்டுள்ளமைபற்றி ஆராய்ந்து; அவற்றிற்கான காரணங்களை அறிந்து, கல்வி மறுசீரமைப்புச் செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். விழுமியஞ்சார் கல்வியின்

*நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவருடன் விவாதிப்பது சிறப்பாகும்.*

இன்றைய தேவை உணரப்படவேண்டியது, உடனடித் தேவையாகும். தாமதித்தால் தவிக்கநேரிடும்.

"மனிதன் எந்த அளவு அறிவைப் பெருக்குகிறானோ, அந்த அளவு, அறநெஞ் சத்தை வளர்த்துக்கொள்ளவில்லையெனில், அந்த அறிவுப் பெருக்கம் துன்பப் பெருக்கத் தில் போய் முடியும்". இவ்வாறு பேரறிஞர் பேர்ட்ரண்ட் ரஸ்ஸெல்ஸ் முன்னர் கூறியதை இன்று நிதர்சனமாகக் காண்கிறோம். விஞ் ஞான, தொழில்நுட்ப அறிவு, அழிவுக்கே பெரிதும் துணைபோவதற்குக் காரணம்; அற நெறி மற்றும் மனித விழுமியப் பண்புகள், தற்காலக் கல்வி முறைமையில் இடம்பெறா மையேயாகும்.

"நம் கல்வி ஒரு மனிதனை ஒரு மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ, ஆசிரியராகவோ உருவாக்குகிறது. ஆனால், மனிதனை உண்மையான மனிதனாக, மனி தத் தன்மைகளுடைய மனிதனாக உரு வாக்குவதில்லை". இவ்வாறு திறமையான; ஆனால் பண்பாடு ஒழுக்க விழுமியங்கள் என்ப வற்றின் நலம்பேணாத மனிதர்களை, உரு வாக்குகிற தொழிற்சாலைகளாக, நமது இன் றைய கல்விச்சாலைகள்; மற்றும் கல்வி முறைமைகள் மாறிவருகின்றமை கண்டு ஐக் கிய நாடுகள் சபையின் முன்னைநாள் பொதுச் செயலாளர், ஊதாண்ட் அவர்கள் கூறியதை நாம் இன்று புறக்கணித்து விடமுடியாது.

எங்கும் என்றென்றும் எல்லா மனிதர் களின் நல்வாழ்வுக்கும்; தனிமனித அமைதிக் கும்; குடும்ப அமைதிக்கும், சமூக மற்றும் நாட் டின் அமைதிக்கும்; அனைத்துலக அமைதிக் கும் பொருந்துகின்ற நீதி, நேர்மை, உண்மை, பொறுமை, பணிவு, அடக்கம், அன்பு, கருணை, மனிதநேயம், ஆன்மநேயம், தியாகம், விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை போன்ற மனித விழுமியங்களையும் "எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" என்ற ஆன்மீக மற்றும் சமுதாய நோக்கத்தையும் கொண்டிராத; எழுத்தில் கொண்டிருந்தும், அதனை நிறை வேற்றாத கல்விமுறைமை பயனற்றது மட்டு மல்ல, ஆபத்தானதும் ஆகும்.

"உடல், உள்ளம் இரண்டின் வளர்ச் சிக்கும் ஓயாது உழைப்பதே உண்மைக் கல்விப்பயன். மாணவர் மனங்களில் ஒழுக் கத்தை வளர்ப்பதே, கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும்" என்றார் மகாத்மா காந்தியடிகள்.

முன்னர்க் காலங்களில், பெற்றோர், பெரியோர், மூத்தோர், ஆசிரியர்கள், சமய சமூகத் தலைவர்கள் ஆகியோர் இளைய தலைமுறையினருக்கு நல்ல அறிவுரைகளை யும் கூறி, அவர்களை நல்லவர்களாக, வழிப் படுத்தி வந்தார்கள். தற்காலத்திலும் அத் தகைய ஒருசிலரேனும் இருக்கத்தான் செய் கிறார்கள்.

ஒரு கரிசனையுள்ள தந்தை; தன் மகன் பொறுப்புவாய்ந்த பதவியொன்றினைப் பெற்று, அதனைப் பொறுப்பேற்கச் சென்ற வேளை; மகனை வாழ்த்திக், கூறிய நல்ல வார்த்தைகள், எத்துணை சமூக நலன்களை யும், வாழ்வியல் நன்மைகளையும் கொண் டுள்ளன என்பதை நோக்குங்கள்; தந்தையின் அறிவுரை பின்வருமாறு அமைகின்றது.

"மகனே! நீ பொறுப்புமிக்க பதவி யைப்பெற்று, அதனைப் பொறுப்பேற்கச் செல்கின்றாய். உனக்கு எனது நல்லாசி களை வழங்கி மகிழ்கின்றேன். "ஈன்ற பொழு தில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்னும் பழந்தமிழ்ப் பாடல் வரிகளை உனக்கு நினைவூட்ட விரும்புகிறேன். நீ பதவியை வகிப்பதற்காக, அங்கு செல்கின்றாய்; பதவியில் அமரவதற் காக அன்று என்பதைத் தெரிந்துகொள்.

*ஆலோசனைக்குப் பின்னரே எல்லாச் செயல்களையும் தொடங்க வேண்டும்.*

நான் கூறும் இந்த ஐந்து அறிவுரைகளைக் கேட்டு நட. நீ நல்லாய் இருப்பாய். யாவருக்கும் இதம் தருபவனாய்; யாவராலும் மதிக்கப்படுபவனாய் வாழ்வாயாக. வாழ்க நலமுடன்; வாழ்க வையகம்''

**அறிவுரை ஒன்று:**

"உன்னுள் உள்ள மனச்சாட்சி, நீ செய்வது சரி, பிழை என்று எப்பொழுதும் சொல்லிக்கொண்டேயிருக்கும். மனச்சாட்சி கூறுவதைக் கேள்; அலட்சியம் செய்யாமல் உணர்ந்து சரியானதை நல்லபடி செய். மனச்சாட்சிதான் தெய்வம். தெய்வத்தின் குரலை மதித்து; உற்றுக் கேட்டுக் கருமங்களை ஆற்று. ஒரு பொல்லாப்பும் இல்லை. அதில் இருந்து கிடைக்கப்பெறும் நிம்மதி, உன்னை உலகில் தைரியமாகத் தலைநிமிர்ந்து; நடமாடச் செய்யும்.''

**அறிவுரை இரண்டு:**

"உன் பதவியோடு கூடவே அதிகாரங்களும் கிடைக்கப்பெறுவாய். வகிக்கும் பதவிக்குக் கிடைத்த அதிகாரங்கள் அவை. அந்த அதிகாரங்களை மறந்தும் துர்ப்பிரயோகம் செய்யாதே. உனது; உனது குடும்பத்தினரது; நன்மைக்காகப் பயன்படுத்தாதே. அவ்வாறு சுயநலங்கருதி, அதிகாரங்களைப் பயன்படுத்தினால், உன்னுடைய வருங்காலச் சந்ததியினருக்கு அவலங்களைத் தேடி வைத்த குற்றத்திற்கு ஆளாவாய். உன் அதிகாரங்களை நல்வழியில் பிறருக்கு நன்மைகள் பயக்கும் வண்ணம், விதிமுறைகளை அநுசரித்து, உபயோகிக்க வேண்டும்.

**அறிவுரை மூன்று:**

"உனக்குரிய வருவாய்க்குள், உனது வாழ்க்கையை அமைத்துக்கொள். நியாயப்படியான வருமானம்; நியாயப்படிக்குப் புறம்பான வருமானம் என்று இரண்டு வகை வருமானம் தற்காலத்தில் உண்டு. ஒரு காலமும் தவறான வழியில் பிறர் தருகின்ற அல்லது கேட்டுப் பெறுகின்ற இலஞ்சத்தையோ கைக்கூலியையோ, சன்மானங்களையோ, கேட்டோ, கேட்காமலோ எந்த உருவத்திலும் எவரிடமும் வாங்குவதில்லை என்று சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள். வருவாய்க்கு விஞ்சிய செலவு செய்வதில்லை என்பதில் உறுதியாயிரு. ஒரு காலமும் கடன் வாங்கிச் செலவு செய்யாதே. வட்டி பல குட்டிகளைப் போடும் தன்மையுடையது. வாழ்க்கையில் அமைதி கெட்டுவிடும். "கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்பது இராமாயணப் பாடலடி. தேவைகள் அதிகம் இருக்கலாம். ஆனால், நியாயப்படி நீ பெறுகின்ற ஊதியத்திற்கு ஏற்றாற்போலச் செலவு செய். "விரலுக்குத்தக்க வீக்கம்" என்பதன் கருத்தைப் புரிந்துகொள்.''

**அறிவுரை நான்கு:**

உனது பதவியுயர்வுக்கும், இடமாற்றத்துக்கும் யாருடைய தயவையும் நாடி, அவர்கள் முன் மண்டியிடாதே. அவ்வாறு செய்தால், நீ உன் சுதந்திரத்தை இழப்பதோடு; உனக்கு உதவியவருக்கு மீளா அடிமையாக வேண்டி வரும். நியாயம், நீதி என்பவற்றைப் பேணமுடியாத நிலைமை ஏற்படும். "நக்குண்டான் நாவிழந்தான்" என்பது முதுமொழி. பின்னர் அவர் சொல்வதற்கெல்லாம், "ஆமாம் சுவாமி" போடவேண்டிவரும். மனச்சாட்சியை அடகுவைத்து விடாதே.''

**அறிவுரை ஐந்து:**

"உன் சுயநலத்தை விடப் பொது நலத்தைப் பெரிதும் பேணி உன் கடமைகளைக் கண்ணியத்துடன் செய். நீதி, நேர்மை, உண்மை, இவற்றைக் கடைப்பிடி.

*பொறுமையாக இருக்க முடியுமானால் உலகில் உள்ள அனைத்தையும் பெறமுடியும்.*

கடமை தவறாதே. கண்ணியம் கட்டுப்பாடு, சேவை என்பவற்றைப் பொன்போல் போற்றி வாழ். தற்பற்று, பொருட்பற்று என்பவற்றைக் கட்டுப்படுத்திக்கொள். எவர்க்கும் எவ்வித பாகுபாடும் காட்டாதே. எந்தப் பிரதிபலனும் கருதாது பணிசெய். நேரத்தை வீணாக்காதே. பொதுச் சொத்துக்களுக்குத் தர்ம கர்த்தா வாக விளங்கி, அவற்றைப் பேணிப் பரா மரித்து வரவேண்டும். அவற்றைத் துர்ப்பிர யோகம் செய்தல் ஆகாது. சட்ட விதிமுறை களை நன்கு அநுசரித்துக் கடமையைச் செய். ஏனைய அதிகாரிகள், பணியாளர் களுக்கு முன்மாதிரியாக நடந்து காட்டு. உதவியைச் செய்துவிட்டு, மறுகணமே மறந்துவிடு. மனத்தை எதற்கும் வீணே அலைக்காதே. கடவுளை நம்பு. கடவுள் நம்பிக்கை வீண்போகாது. எஞ்ஞான்றும் இன் பம் பெறுவாய். இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்று உயரிய நிலையை அடை யப்பெறுவாய்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல் எனும் சொல்"

-திருக்குறள்-

---

## கலாநிதி சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள்

சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் ஐயா அவர்கள் அபிதான சிந்தாமணியில் கூறப்பட்டுள்ள 32 வகை அறங்களைத் தன் வாழ்நாளில் கடைப்பிடித்து ஒழுகுதலைப் பெரும் பேறெனக் கருதினார். பறவைகள், விலங்குகள் போன்ற வாயில்லா சீவராசிகள் தாகம் தீர்த்துக்கொள்ள பாத்திரங்களில் நீர் நிரப்பி வைத்தார். வட்டுக்கோட்டையில் வசித்தபோது பாடசாலைக்குச் செல்கின்ற பிள்ளைகள் மற்றும் வழிப்போக்கர்கள் தாகம் தீர்த்துக்கொள்ள முற்றத்திலே வாளியில் தண்ணீர் நிரப்பி வைத்தார். எப்போதும் விருந்தினரை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

எல்லா மனிதர்களிலும் அன்புபூண்டு ஒழுகி, தன்னிடம் நூல்கள் கேட்டு வருவோருக்கும் சந்தேகம் கேட்டு வருவோருக்கும் அறிவுப் பசியையும் வயிற்றுப் பசியையும் தீர்த்து உவகையடைந்தார்.

ஈழத்துச் சிதம்பர புராணத்தைப் பதிப்பித்து, அதனைக் காரைநகரில் உள்ள வீடுகளுக்கு மாட்டு வண்டியிலே எடுத்துச்சென்று கொடுத்தார். ஈழத்துச் சிதம்பரத்திற்கு தமிழக அறிஞர்களை வரவழைத்து திருவாசக விழா என்ற பெருவிழா நடாத்துகின்றபோது அறிஞர்க்கெல்லாம் உணவும் தேநீரும் கொடுத்து உபசரித்து பேருரை களைக் கேட்டு மகிழ்ந்து காரைநகருக்குப் பெருவாழ்வு தந்தார்.

சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் என்ற மகானது தரிசனம் பெறும் பாக்கியம் உற்றிலேன். அவரது பொன்னுடல் காணும் பேற்றினால் இவ்வுலகில் உயிர்பெற்றேன். அவர் தம் அன்பினால் ஆட்கொள்ளப்பட்டேன். உடம்போடு உயிர் உறவற்று அறிவு மயங்கும்போதும் வைத்தீசுவரக்குருக்கள் ஐயா சிவனே சிவனே என்னும் திருநாமத்தை மறந்திலர்.

விருப்பும் வெறுப்பும் விலக்கிய நடுநிலையுடன் விளங்கி ஆசைகள் விட்டவராய் மாயையும் மோகமும் அணுகாதவராய் மனத்தினில் திடமுள வைராக்கியராய் மாயப் பிறப்பறுக்கும் மன்னனாகிய சிவபெருமானது திருநாமம் கேட்டதும் மெய்மறந்து போய், அதில் பரவசம் அடைகின்ற அவருடைய பொன்னுடல், புண்ணிய தீர்த்தங்கள் ஆயன யாவையும் அடங்கிய புண்ணியதலம். அந்த உயர்ந்த ஆத்மாவின் தரிசனத்தைக் காண விரும்புகின்றேன்.

-பா. துவாரகன்-

*உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் உங்கள் சரித்திரத்தில் ஒரு பக்கமாகும்.*

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம்

அருளிய

# திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 77. தன்செயல் அறுதல்

பேய் ஒன்றும் தன்மை பிறக்கும் அளவும் இனி
நீ ஒன்றும் செய்யாது நில்.

**பொருள்:**

மாணவனே, பேய் வசப்பட்டாரது தன்மைபோல அருள் வயப்பட்டு நிற்கும் தன்மை உனக்கு உண்டாகும்வரையும் நீ தன் முனைப்போடு யாதொரு செயலும் செய்யாமல் நிற்பாயாக.

**சொற்பொருள்:**

நீ- மாணவனே நீ, பேய் ஒன்றும் தன்மை- பேய் பிடிக்கப்பட்டாரது தன்மைபோல அருள் வயப்பட்டு நிற்கும் தன்மை, பிறக்கும் அளவும்- உனக்கு உண்டாகும் வரையும், இனி- இனிமேல், ஒன்றும் செய்யாது- தன்முனைப்போடு யாதொரு செயலும் செய்யாமல்- நில்- நிற்பாயாக.

**விளக்கம்:**

**செய்யாமை செய்தல்:**

செய்யும் செயல் எதுவும் சிவனால் அன்றி நிகழ்வதில்லை. சிவனால் அன்றிப் பயன் கொடுத்தல் இல்லை. "நீயே உள் நின்றும் செய்வித்தும் செய்கின்றாய்" என்றும், "நிலவுவதோர் செயல் எனக்கு இன்று; உன் செயலே" என்றும் நினைத்து ஒழுகுவர் ஞானிகள்.

தற்போதம் இழந்து, தம் செயலற்று நிற்கும் அவர்கள் தம்மில் விளங்கும் சிவத்துடன் ஒன்றித்து நிற்கும் தன்மையால் தம்மால் நிகழவரும் எச்செயலையும் சிவன் செயல் என வைத்து இயற்றுவர். ஆதலால், அச்செயலால் அவர்க்குப் புண்ணியமோ பாவமோ விளைதல் இல்லை.

பாம்பு கடித்து இறந்த வணிகன் ஒருவனை உயிர் பெற்றெழச்செய்து வணிகக் கன்னி ஒருத்திக்கு வாழ்வளித்தார் ஞானசம்பந்தர். அப்பூதியடிகளின் மகனை விடம்நீங்கி எழும்படியாகச் செய்து அப்பெற்றோர்களுக்குப் பெரு நலம் செய்தார் அப்பர். முதலைவாயில்

அகப்பட்டு இறந்த அந்தணச் சிறுவனை அவனது வளர்ச்சியோடு மீட்டுக்கொடுத்துதவினார் சுந்தரர். இப்பெரு மக்களுக்கு இச்செயல்களால் யாதொரு புண்ணியமும் விளையாமையை அறியலாம். தந்தையினது காலைவெட்டிய சண்டேசுரருக்கு அதனால் யாதொரு பாவமும் விளையாமையையும் அறியலாம்.

இவ்வாறு ஞானிகள் செயல் செய்தும் புண்ணிய பாவங்கள் பொருந்தாமல், வினையால் சிறிதும் பற்றப்படாமல் இருப்பர். அவரது செயல் "செய்யாமை செய்தல்" எனப்படும்.

செய்யாமை செய்தல் என்பதனைச் சிறிது விளக்குவோம். கற்றிருந்தும் அதன் பயனாய் அறிவு ஏற்படாத நிலை கற்றும் கல்லாமை எனப்படும். உண்டும் அதன் பயனாகிய நிறைவு ஏற்படாத நிலை உண்டும் உண்ணாமை எனப்படும். அதுபோலச் செயல் செய்தும் அதன் பயனாகிய வினைத்தாக்கம் ஏற்படாத நிலை செய்தும் செய்யாமை எனப்படும். இதனையே செய்யாமை செய்தல் என்றும் குறிப்பிடலாம் அல்லவா? திருக்களிற்றுப்படியார் என்னும் அனுபவநூல் இப்படித்தான் குறிப்பிடுகின்றது.

"ஐயோ நாம் செய்யாமை செய்து செயலறுக்கலாயிருக்கச் செய்யாமை செய்யாத வாறு" என்று அந்நூல் உலகர் நிலைக்கு இரங்கிக் கூறுகிறது.

எச்செயலையும் தன்னோடு இயைபுபடுத்திக்கொள்ளாது, தன்செயல் சிவன் செயலாகும்படி சிவனோடு ஒற்றித்து நின்று செய்தலே செய்யாமை செய்தலாகும் என்பது இதனால் நன்கு விளங்கும்.

**பேய் ஒன்றும் தன்மை:**

பேய் ஒன்றும் தன்மையாகிய உவமையில் வைத்து இந்நிலையை இங்கு விளக்குகிறார் நம் ஆசிரியர். பேய் பிடித்த ஒருவன் தன் உணர்விழந்து நிற்பான் என்பது கண்கூடு. அவனுக்குத் தன்னறிவும் இல்லை; தன் செயலும் இல்லை. பேயினுடைய அறிவும் செயலுமே அவன்பால் நிகழ்கின்றன. அதுபோலத் தன் செயல் ஒன்றுமின்றித் திருவருளின் வசப்பட்டு நிற்றலே துரியம் என்னும் அருள்நிலையாகும்.

இந்நிலையை அடைய அவாவும் மாணவனை வழிப்படுத்துகிறார் ஆசிரியர். தன் செயலறுதலே துரியமாகிய அருள்நிலை வருவதற்கு வழியாகும். அருள் நிலையைத் தலைப்பட்ட பின்னர் துரியாதீத நிலையாகிய இன்புறு நிலையைத் தலைப்படுதல் எளிது என்பது கருத்தாகும்.

### 78. உறங்குபவன் கைப் பொருள்

ஒண்பொருட்கண் உற்றார்க்கு உறுபயனே அல்லாத
கண்படுப்போர் கைப் பொருள்போல் காண்.

**பொருள்:**

மெய்ப்பொருளாகிய சிவத்தில் அழுந்தினவர்களுக்கு அதனால் வரும் பேரின்பம் ஒன்று தவிர ஏனையவெல்லாம், உறங்கிப் போனவனது கையிலுள்ள பொருள் தானே நழுவுவது போலத் தாமே நீங்கிவிடும்.

*மனிதன் முடிந்ததைச் செய்கிறான். கடவுள் விரும்பியதைச் செய்கிறார்.*

**சொற்பொருள்:**

ஒண்பொருட்கண்- அறிவே வடிவான மெய்ப்பொருளாகிய சிவத்தில், உற்றார்க்கு- அழுந்தினவர்களுக்கு, உறுபயனே அல்லாத- அதனால் வரும் பேரின்ப நுகர்ச்சியாகிய பயன் ஒன்று தவிர, ஏனைய உலக ஒழுக்கங்களும் சரியை முதலிய தவவொழுக்கங்களும் ஆகிய எல்லாம், கண்படுப்போர்- உறங்குவோர், கைப்பொருள் போல்- கையிலுள்ள பொருள் அவரறியாதவாறு நழுவி விழுவதுபோல அவரை விட்டுத் தாமே நீங்குவனவாம், காண்- இதனை அறிவாயாக.

**விளக்கம்:**

**ஒண் பொருட்கண் உற்றார்:**

ஞானத்தில் ஞானமாம் அசைவிலா நிட்டை நிலையை எய்தினோர் அன்பினால் தம்மைச் சிவத்தில் ஆழ்த்தி வைத்திருப்பர். மதுவுண்ட வண்டு அந்த மது மயக்கத்திலே தன்னையும் அறியாது கிடத்தல்போலச் சிவானந்தத்தை நுகர்ந்து அந்த நுகர்ச்சியில் தம்மையும் மறந்திருப்பார்கள்.

"ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு
என் உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ?

என்னும் திருவாசகம் இவ்வனுபவத்தை உணர்த்தி நிற்கிறது. தோற்றத்தில் அவர் உலகர்போலக் காணப்படினும் உண்மையில் அவரது நிலை முற்றிலும் வேறானது என்பது இதனால் விளங்கும்.

சிவபெருமானுக்குப் பித்தன் என்ற பெயருண்டு. அ.்.து அவனது பேரருள் உடைமை பற்றி வழங்கும் பெயராகும். "இறைவன் என்னை மதி மயக்கி ஆண்டுகொண்டான்" என்று மணிவாசகர் குறிப்பிடுகிறார். "நாயேன் தனையாண்ட பேதாய்" என்கிறார். "பெண்பால் உகந்தான் பெரும்பித்தன்" என்று பழிக்கிறார். மதிமயங்கி, பேதை, பித்தன் என்பனவெல்லாம் பழிப்புரை போலத் தோன்றினாலும் கருத்து வகையால் அவையெல்லாம் புகழுரைகளாய் அமைதல் காணலாம். ஆட்கொள்ளுதற்குரிய தகுதி ஒன்றேனும் இல்லாதிருக்கவும், இறைவன் தன் பேரருள் ஒன்றே காரணமாக என்னையும் ஆட்கொண்டருளினான் என அவனது கருணையின் மிகுதியை இவ்வாறு புலப்படுத்துகிறார் மணிவாசகர்.

அந்தப் பெரும் பித்தனுக்கு ஆட்பட்ட ஞானிகள் எப்படியிருப்பார்கள்? அவர்களும் பித்தராகத்தானே இருப்பார்கள்.

பித்தர் செயல் ஒரு நெறிப்பட்டதாக இருக்காது. அவர் வேண்டியதொன்றனைச் செய்யாதொழிவர். வேண்டாத ஒன்றைச் செய்வர். ஞானிகள் செயலிலும் இவ்வாறே ஒரு நெறிமுறை அமையாது. கவலையற்றிருப்பதால் அவர்களது செயல் சில வேளைகளில் இளஞ்சிறுவர்களது செயல் போலவும், பித்துக் கொண்டவர் செயல்போலவும் நிகழும். நிட்டையில் நின்றோர் பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணம் மருவி, உலகியல் உணர்வு கெட்டிருப்பர். ஆதலால், தற்போதம் இழந்த நிலையில் அவரிடத்து நிகழும் செயல் எவ்வாறும் இருக்கும்.

*பிறர் பணத்தை விரும்புகிறவனுக்கு கடவுள் நண்பராக இருக்கமாட்டார்.*

"ஞாலமதில் ஞானநிட்டை உடையோருக்கு
நன்மையிலை; தீமையிலை; நாடுவதொன்றில்லை;
சீலமில்லை; தவமில்லை; விரதமொடு ஆச்சிரமச்
செயலில்லை; தியானமில்லை" என்று அவரைப் பற்றிக் கூறுவர்.

**உறங்கினவன் கைப்பொருள்:**

உலகியல் ஒழுக்கங்களும், யோகம், கிரியை, சரியை முதலிய தவ ஒழுக்கங்களும், உறங்கினவன் கையிலுள்ள பொருள் தானே நழுவி விழுவதுபோல அவரிடமிருந்து தாமாகவே நழுவிவிடும்.

உறங்காத வரையில் ஒருவன் தன் கையிலுள்ள பொருளை விடாது பற்றியிருப்பான். உறக்கம் வந்து அவனை ஆட்கொண்டுவிட்டால் அவன் தன்னை மறந்து விடுகிறான். வெளியுலகை மறந்து விடுகிறான். அதனால் அவனது நினைப்பு இன்றியே அவனது கைப்பொருள் மெல்ல நழுவுகிறது. அதுபோல நிட்டை எய்திப் பேரின்பத்தில் அழுந்தியவர் உலகவுணர்வு தோன்றப்பெறாமல், "நான்" என்ற உணர்வுகெட்டு நிற்பதனால் "ஞானம் பெற்று விட்ட நமக்கு இந்த நியமங்களெல்லாம் இனிச் செய்யவேண்டுவதில்லை" என்று தன் முனைப்போடு அவற்றை விட்டுவிடுவதும் இல்லை; செய்துவரவேண்டும் என நியமித்துச் செய்வதும் இல்லை. அவர்களையறியாமல் அவைதாமே நீங்கும் என்பது கருத்து.

இன்புறு நிலையில் உயிர்க்கு அவ்வின்ப நுகர்ச்சி ஒன்றே உண்டு என்பது இச்செய்யுளில் கூறப்பட்டது. (தொடரும்...

---

## சுகதேவர் பெற்ற ஞானம்

சுகதேவரை அழைத்த வியாசர், "மகனே! நீ ஞானிதான். இருந்தாலும் குருவின் அருள் உன்மீது இன்னும் விழவில்லை" என்றார்.

"தந்தையே! நான் என்ன செய்யவேண்டும்?" என்று பணிவுடன் கேட்டார் அவர். "மகனே! நீ மிதிலை மாநகருக்குச் செல். பேரரசர் சனகரைக் குருவாக ஏற்று அவரிடம் *அருளுரை பெற்று வா" என்றார் வியாசர்.

அதன்படியே சுகர் பல நாட்கள் பயணத்திற்குப்பின் மிதிலை நகரை அடைந்தார். அங்கிருந்த மாட மாளிகைகள் அவருக்கு வியப்பைத் தந்தன.

அரண்மனையை அடைந்தார் அவர். பேரரசர் சனகரை வணங்கி நின்றார். "ஐயா! நீர் யார்? இங்கு எதற்காக வந்தீர்?" என்று கேட்டார் சனகர்.

"குருவாகிய தங்களிடம் ஞானோபதேசம் பெற வந்துள்ளேன்". "நான் குரு என்று சொல்லி யார் உம்மை இங்கே அனுப்பி வைத்தார்கள்?" "என் தந்தை வியாச தேவர்".

"அப்படியா? எங்கிருந்து வருகிறீர்?" காட்டில் உள்ள ஆசிரமத்திலிருந்து". "இந்த மிதிலை நகரில் நீர் என்னென்ன காட்சிகளைப் பார்த்தீர்? சொல்லும்." "வழியில் சர்க்கரையால் செய்யப்பட்ட உருவங்கள் எங்கும் இருக்கக் கண்டேன்". "அப்புறம் என்ன பார்த்தாய்?" "இந்த அரண்மனைக்குள் வர சர்க்கரையால் செய்யப்பட்ட மெத்தைப் படிகளிருப்பதைப் பார்த்தேன்." "ம்...ம்... இப்பொழுது என்ன பார்க்கிறீர்?" "ஒரு சர்க்கரைச் சிலை மற்றொரு சிலையுடன் பேசிக்கொண்டிருக்கிறது". இதைக்கேட்ட சனகர், "நீர் போகலாம். உமக்கு எல்லா ஞானமும் வந்துவிட்டது" என்றார்.

*தளராத இதயத்தை உடையவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவுமில்லை.*

# ஆடலரசனின் ஆனித் திருமஞ்சனம்

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

ஊனில் உளத்தில் உணர்வில் உயிரில் உயிருக்குயிராம்
வானில் மொழியில் கலந்து நின்றாலும் மலர்க்கொடியே!
ஞானிகள் தேடும் பரம் சுடரே! உன்னைநான் பணிந்தேன்
ஆனி மாதத்தில் அருள் புரிவாய்! ஜகதாம்பிகையே!

ஆனிமாதம் உத்தராயணப் புண்ணிய காலத்தின் கடைசிப்பருவமாகும். தைமுதல் ஆனி வரையில் சூரியன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நகர்வதை "உத்தராயணம்" எனவும் ஆடிமுதல் மார்கழிவரை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நகர்வதை "தட்சிணாயனம்" எனவும் கூறுவர். இதில் சூரியன் மிதுன ராசியில் இருக்கும் மாதம் ஆனி எனச் சொல்லப்படுகின்றது. தேவர்கள் மாலை நேரப் பூசைகள் செய்யும் நேரம் ஆனி என்பதால் இம்மாதம் தேவர்களுக்கு மாலைநேரம் என்றும் வழங்கப்படுகின்றது. நாமும் அவ்வேளையில் பூசைகள், திருமஞ்சனம் செய்தால் இறைவன் நல்ல அருள் புரிவார்.

ஆனி மாதத்தில் பல முக்கியமான நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. பலவிதமான வழிபாடுகள், திருமஞ்சனங்கள் செய்து நாம் இறைவனை வணங்கத் தகுந்த மாதமாக ஆனி சொல்லப்படுகின்றது. அபிஷேகம் என்பதன் தமிழ்ச் சொற்கள் திருமஞ்சனம், திருமுழுக்கு என்பதாகும்.

இறைவனே உருகும் வண்ணம் திருவாசகம் இயற்றிய மாணிக்கவாசக சுவாமி கட்கு குருந்த மரத்தடியில் இறைவன் ஞானோபதேசம் செய்தது ஆனி மாதத்தின் அனுச நட்சத்திரத்தில் ஆகும். அதே போன்ற ஓர் ஆனிமாதத்தில்த்தான் மாணிக்கவாசகர் இறைவனோடு இரண்டறக் கலந்தார். முருகனின் வேண்டுகோளுக்கிணங்க சிவாம்சமே அருணகிரியாராகப் பிறந்தது ஆனி மாதம் ஒன்றில்தான். விஷ்ணு சித்தர் எனப்படும் பெரியாழ்வார் பிறந்தது ஆனிமாத சுவாதி நட்சத்திரத்தில் ஆகும். தொலைந்த நமது பக்திப் பொக்கிஷங்களான திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவரும், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்முறையில் வழிபாடுகள் செய்ய வகை செய்தவருமான நாதமுனிகள் அவதரித்தது ஆனிமாத அனுச நட்சத்திரத்திலாகும்.

ஆனி மாதத்தில் சிவபெருமானுக்கு மட்டுமல்லாமல் பெருமாளுக்கும் திருமஞ்சனம் நடத்தப்படுகின்றது. பெருமாளது அங்கி முதலான ஆடையாபரணங்களைக் களைந்து அவருக்குக் களைப்பு நீங்க காவிரி நீரால் அபிஷேகம் செய்வதால் இதனை "ஏகாந்த திருமஞ்சன சேவை" எனச் சொல்வார்கள்.

இந்த அபிஷேகத்தைக் கண்ணாரக் கண்டால் அன்னை லட்சுமி தேவியின் அருள் கடாட்சம் கிடைக்கும் எனப் புராணங்கள் கூறுகின்றன.

சிதம்பரத்தில் வீற்றிருக்கும் நடராசப் பெருமானுக்குச் செய்யப்படுவதுதான் ஆனித் திருமஞ்சனம், அனைவராலும் சிதம்பரத்திற்கு நினைத்தபோது செல்ல முடியாததல்லவா? அதனால் நாம் கவலை கொள்ளத்தேவை இல்லை. நடராசர் சன்னதி உள்ள எல்லாச் சிவாலயங்களிலும் ஆனித் திருமஞ்சனம் சிறப்பாக நடைபெறும். அதனைக் கண்டாலே

*பிறவித் திறமையை வளர்ப்பதற்காகவே கல்வித் திறமை பயன்பட வேண்டும்.*

நாம் செய்த பாவங்கள் அனைத்தும் அக லும்.

விஷ்ணுவை அலங்காரப் பிரியராக வும் சிவனை அபிஷேகப் பிரியராகவும் சொல்லுவார்கள். ஏன் சிவன் அபிஷேகத்தை விரும்ப வேண்டும்? காரணம் நட்சத்திரங் களில் சிவனுக்கு உரியது திருவாதிரை நட்சத்திரம். இது மிகவும் வெம்மை உடை யது. அத்தோடு சிவனது கழுத்தில் ஆல கால விஷம் வேறு தங்கி இருக்க அதன் வெம்மையும் அவரைத் தாக்கும். போதா தென்று மயானத்தில் சுடலைச் சாம்பலை உடல் முழுவதும் பூசி அதன் வெப்பம் வேறு. இந்த நிலையில் சிவன் குளிர்ந்த அபிஷேகத்தை விரும்புவதில் வியப்பென்ன?

சிதம்பரத்தில் பத்துநாட்கள் விழா வாக ஆனித் திருமஞ்சனம் நடைபெறு கின்றது. இங்கு நடராசருக்கும் சிவகாமி அம்மைக்கும் அபிஷேகங்கள் செய்யப்படு கின்றன. பலவகையான பொருட்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்படுவதே ஆனித் திருமஞ்சனம் எனப்படுகின்றது.

அபிஷேகங்களைக் கண்ணாரக் கண்டு மனமாரத் தொழுதாலே நல்ல பலன் கிடைக்கும் என்று ஞான நூல்கள் சொல் கின்றன.

அபிஷேகங்களைக் காணும்போது மனம் இறைவனோடு ஒன்றவேண்டும். மன முருகிப் பிரார்த்திக்க வேண்டும். அப்படிச் செய்தால் நற்பலன்கள் கிடைப்பதை நாம் விரைவில் உணரலாம்.

ஆனித் திருமஞ்சன தரிசனம் செய் தால் கிடைக்கக்கூடிய சில பொதுப்பலன் கள்; திருமணம், நல் ஆரோக்கியம், மன உறுதி, அறியாமல் செய்த தவறுகளால் ஏற்பட்ட பாவங்கள் அனைத்தும் தொலை யும். ஆனித் திருமஞ்சன உற்சவம் நடை பெறும் சிவாலயங்கட்குச் சென்று அபிஷே கங்களைக் கண்டு நாமும் இறைவன் அரு ளைப் பெறுவோம்.

## அவனன்றி அணுவும் அசையாது

ஒரு சமயம் தேவர்கள் அனைவரும் "தாங்களே பேராற்றல் வாய்ந்தவர்கள். தங்களுக்கு இணையாக யாரும் இல்லை" என்று ஆணவம் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் ஆணவத்தை அடக்கி உண்மையை உணர்த்த விரும்பினார் சிவபெருமான்.

அவர்கள் முன் தோன்றிய அவர் தன் கையிலிருந்த ஒரு துரும்பை எடுத்துக் கீழே போட்டார்.

"உங்களில் யாராவது இந்தத் துரும்பை அசைத்துக் காட்டுங்கள்" என்றார்.

கேலியாகச் சிரித்த தேவர்கள், "இந்தச் சிறு துரும்பை எங்களால் அசைக்க முடியாதா? எங்கள் வலிமை உங்களுக்குத் தெரியாது" என்றபடி அந்தத் துரும்பை எடுக்கக் கீழே குனிந்தார்கள்.

அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் அவர்களால் அந்தத் துரும்பைச் சிறிதுகூட அசைக்க முடியவில்லை.

ஆணவம் அடங்கிய அவர்கள், "இறைவா!! எங்களை மன்னியுங்கள். இறைவன் அருளின்றிச் சிறு துரும்பும் அசையாது என்ற உண்மையைப் புரிந்து கொண்டோம்" என்றார்கள்.

*அகிம்சை மாபெரும் நல்லொழுக்கம், கோழைத்தனம் மாபெரும் கேடு.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

–திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்–

## கிருஷ்ணாவதாரம்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா நின் செவ்வடி செவ்வி

-திருக்காப்பு.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா நல்லோரைக் காத்து, தீயவர்களை அழித்து, தர்மத்தை நிலைநாட்ட அவதரித்த தினம் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி. மகா விஷ்ணு தீமைகளை ஒழித்து, தர்மத்தை நிலைநாட்டுவதன் பொருட்டு யுகங்கள்தோறும் அவதரித்தார்.

பரித்ராணாய ஸாதூனாம் வினாசாய சதுஷ்க்ருதாம் தர்ம
ஸம்ஸ்த் தாபனார்த் தாய ஸம்பவாமி யுகே யுகே.

மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரஸிம்ம அவதாரம், வாமன அவதாரம், பரசுராம அவதாரம், ராம அவதாரம், பலராம அவதாரம், கண்ணன் அவதாரம் பத்தாவது அவதாரமாகிய கல்கி அவதாரம் அதர்மத்தை அழித்துப் புவியைக் காக்க இனி எடுக்க இருக்கும் அவதாரம். கிருஷ்ண அவதாரம் கடைசியாக நடந்தது. ராம அவதாரமும், கிருஷ்ண அவதாரமும் பூரணமானவை. உலகம் போற்றும் உத்தம அவதாரம் கிருஷ்ணாவதாரம். அசுரர்களின் கொடுமையையும், அட்டூழியங்களையும் பொறுக்கமுடியாத பூமித்தாயின் கண்ணீர் துடைக்க் ஆதி பரம புருஷர், பகவான் கிருஷ்ணர் தானே நேரில் பரிபூரண அவதாரமாகப் பூமிக்கு வந்தார்.



யாதவ மன்னன் சூரசேனன் மதுராபுரியை ஆண்டு வந்தார். அவருடைய மகன் வசுதேவர். வசுதேவர் தேவகனுடைய மகள் தேவகியை மணந்தார். உக்கிரசேனனின் மகனாகிய கம்சன் தன் சகோதரியான தேவகியின்பால் மட்டற்ற அன்பு பூண்டவன். (உக்கிரசேனனும் தேவகனும் சகோதரர்கள்) மணமக்களான வசுதேவரும், தேவகியும் ஏறிய ரதத்தைக் கம்சனே ஓட்டினான். அப்போது அசரீரி வாக்கு ஒன்று கேட்டது.

*தியாகமே உருவானவள் பெண், அவள் முறையாகச் செய்தால் மலையையும் நகர்த்தி விடுவாள்.*

"ஏ! கம்சனே, மூடனே, நீ யாரிடம் அன்பு வைத்து தேர் ஓட்டுகிறாயோ, அவளு டைய எட்டாவது மகனே உன்னைக் கொல் லப்போகிறான்" என்ற அசரீரியைக் கேட்ட தும், தேவகியின் தலைமுடியை பற்றி இழுத்து கத்தியை ஓங்கிக் கொல்ல முயன் றான். வசுதேவர் கம்சனைத் தடுத்து, "இவள் உன் சகோதரி, வயதில் சிறியவள். இவ ளைக் கொல்வது சரியன்று. இவளுடைய பிள்ளையால்த்தானே உனக்குப் பயம். பிறக் கும் பிள்ளைகளை உன்னிடமே கொடுத்து விடுகிறேன். இவளை விட்டுவிடு" என்றார். கம்சனும் அவர் வார்த்தைக்கு செவிமடுத்து, அவர்களைச் சிறையிலே அடைத்து குழந் தைகள் பிறக்கப் பிறக்க அறுவரைக் கல் லில் மோதிக் கொன்றான். எட்டாவது கர்ப்பம் பெருமான் கட்டளைப்படி மாயையினால் மாற் றப்பட்டது. யசோதை வயிற்றில் பெண் குழந் தையும், தேவகியின் வயிற்றில் ஆண் குழந் தையும் தரித்தன. கம்சனுக்குப் பயம் தொடங் கியது. கம்சன் வயிற்றில் நெருப்பென நின் றார் நெடுமால்.

தேவகி பெருமானைத் தன் வயிற் றில் சுமக்கும் பேரருளைப் பெற்றாள். ஐயிரு திங்கள் அந்தப் பேரானந்தத்தில் லயித்தாள். கண்ணன் திரு அவதாரஞ் செய்யும் திருநாள் வந்தது. ஆவணிப் பெருநாளில் ரோகிணித் திருநாளில், அஷ்டமித் திதியிலே, இருளின் நடுவே பேரொளியாக சங்கு சக்கரதாரியாக பீதாம்பரமணிந்து, கார்மேகம்போல் ஒளிவீசி வைர வைடூரிய மகுடமும், பிற ஆபரணங் களுமணிந்து சர்வாலங்கார பூஜிதராக, நான்கு திருக்கரங்களுடன், அற்புதமான குழந்தையாகத் தோன்றினார். பிரபுவாகிய கிருஷ்ணர் தோன்றிவிட்டாரென எண்ணி வசு தேவர் பரவசமானார். தம் மனத்தால் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்தார். பின் குழந்தை யைப் பார்த்து வசுதேவரும், தேவகியும் கரங்கூப்பித் தொழுதனர். பகவான் என்று தெரிந்தும்கூட தேவகி தாய்மையின் பாசம் மேலோங்க பிறப்பும் இறப்பும் கடந்தவரான பரமாத்மாவை தன்குழந்தை என்ற பாசத் தால்; கம்சன் பார்த்தால் கொன்றுவிடுவானே என்று பயந்து பலவாறு துதித்து, சாதாரண குழந்தையாக வடிவத்தை மேற்கொள்ளு மாறு வேண்டினாள். பிரபுவும் அவர்கள் வேண்டுகோளை ஏற்று தனது பூர்வ விருத் தாக்கங்களையெல்லாம் கூறி, என்னை கோகிலத்துக்கு உடனே எடுத்துச் சென்று யசோதைக்குப் பிறந்த பெண் குழந்தைக்குப் பதிலாக வைத்துவிட்டு, அந்தப் பெண் குழந் தையை எடுத்துவரும்படி கூறி, பெற்றோருக் குப் பணிந்து, அன்றலர்ந்த நீலத் தாமரை மலர்போல குழந்தையாக மாறி மௌனமாகி விட்டார்.

உலகம் போற்றும் உத்தமன், மாயன், அற்புதபாலன், பகவான் கிருஷ்ணர் அவதா ரஞ் செய்தபோது வானவர் பூமழை பொழிந் தனர். எல்லாம் சுபமாய் அமையும் வகையில் கிரகங்கள் தம்மைத் தாமே நிலைப்படுத்திக் கொண்டன. தென்றல் வீசியது. சுகந்தமான பூக்கள் மலர்ந்து நறுமணம் வீசியது. பல நல்ல நிமித்தங்கள் தோன்றின. விண்ணும் மண்ணும் மகிழ்ந்தது.

எம்பெருமான் கட்டளைப்படி வசு தேவர் குழந்தையைக் கூடையிலே வைத் துத் தலையிலே தூக்கிக்கொண்டு நந்த கோபனிடம் போகிறார். தலையிலே குழந் தையை வைத்ததும் சிறைக்கதவுகளின் பூட்டுக்கள் தாமே கழன்று விடுகின்றன. தலை புத்திக்குரிய இடம். புத்திக்கு இறை வன் தொடர்புண்டானதும், சம்சாரபந்தனம் என்ற கட்டு அறுந்து போகிறது. பகவானைத் தலையில் கொண்டவர்க்கு மோட்ச வாயில் திறந்து விடுகிறது. மழை பொழிகிறது. யமுனை நதி பெருக்கெடுத்தோடியது.

*நம்மை நாமே திருத்திக்கொள்வதுதான் தலையாய கடமை.*

ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளால் பக வானுக்குக் குடைபிடித்து மழையில் நனை யாது காக்கின்றான். வசுதேவர் யமுனையில் இறங்கியதுமே, ஸ்ரீ ராமருக்கு சமுத்திரராஜன் வழிவிட்டதுபோல யமுனாநதி வழி கொடுத் தது. வசுதேவர் கோகுலத்திலே யசோதை யின் பஞ்சணையில் குழந்தையை வைத்து விட்டு, அவளுக்குப் பிறந்த பெண் குழந் தையைக் கொண்டுவந்து தேவகியின் படுக்கையில் வைத்தார். சிறைக் கதவுகள் தாமே மூடிக்கொண்டன. குழந்தை அழத் தொடங்கியது. காவலர்கள் விழித்தெழுந்து கம்சனிடம் செய்தியைச் சொன்னார்கள்.

கம்சன் பதைபதைப்புடன் ஓடிவரு கிறான். பெண் குழந்தையைக் கண்டு வெறி யோடு வந்தவனிடம் தேவகி அழுது புலம்பி இந்தப் பெண் குழந்தையையாவது உயி ரோடு விட்டுவிடு என்று மன்றாடினாள். அவன், அவள் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கி இரு கால்களையும் பிடித்து உயரத் தூக்கி சுவரின்மீது அடிக்க ஓங்கினான். குழந்தை மேலே எழுந்து எட்டுத் திருக்கரங்கள் கொண்ட தேவியாக ஆகாயத்தில் தோன்றி யது. "மூடனே! உன்னைக் கொல்ல தேவகி மைந்தன் ஏற்கனவே பிறந்துவிட்டான். வேறு இடத்தில் வாழுகின்றான்" என எச்சரித்து மறைந்துவிட்டாள். அந்தத் தேவியை துர்க்கை, பத்ரகாளி, நாராயணி, சாரதை, அம்பிகை என்றெல்லாம் பல நாமங்களால் மக்கள் வணங்குகிறார்கள்.

இங்கு கண்ணன் பிறந்த செய்தி அறிந்து கோகுலமே கொண்டாடியது. ஆயர் கள் ஆடிப்பாடி மகிழ்ந்து கண்ணன் பிறந்த தினத்தைக் கொண்டாடினர்.

ஓடுவார் விழுவார் உகந்தளிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குற் றானென்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்டநின்று
ஆடுவார் களுமாயிற்று ஆயப்பாடியே.

"ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்து கம்சன் வயிற்றில் நெருப்பென நின்ற நெடுமாலே போற்றி போற்றி" (தொடரும்...

**நல்லவர் பெரியவர் வணங்கி இறங்கும் தேனாறு**

செல்வச் சந்நிதி ஆற்றில் இறங்கி நீ நீராடு
செல்வம் கொழிக்கும் வாழ்வினில் பார் அது தேனாறு
நல்லவர் பெரியவர் வந்து வணங்கி இறங்கும் பேராறு
வேண்டுதல் செய்து துதித்து இறங்குபவர்கள் மகிழ்வோடு
இன்றும் மனதினில் நினைக்கிறார்களே இது கடலோடு
சங்கம மாகி கலப்பது போல எம் மனதோடு
என்றென்றும் நினைக்க இனிக்குதுபார் மிக மகிழ்வோடு
வேண்டுதல் செய்து வேலனை நினைத்திரு நினைவோடு.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

தன் வலிமையைக் கணித்த பின்னரே செயலில் ஈடுபட வேண்டும்.

# ஈரடிபோல் நாலடியும் எம்மவரைக் காக்குமடி

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

ஈரடி என்பது திருக்குறள். நாலடி என்பது நாலடியார்.

இவையிரண்டும் மனித வாழ்வைச் செப்பனிடும் புனிதமான நூல்களாகும். இன்னும் சொல்வதானால், ஒவ்வொரு மனித மனங்களையும் துப்பரவு செய்யும் ஒப்புரவு நூல்களாகும். அறிவுப் பொக்கிஷங்கள். காலக்கண்ணாடிகள். ஒளி விளக்குகள். இத்தகு கருத்துக்களையுடைய இந்நூல்கள் இரண்டும் அறம் பொருள் இன்பத்தை அள்ளி வழங்குபவன.

திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்ட 1330 குறள்களினால் பேறளிப்பது போல, நாலடியாரும் (40) நாற்பது அதிகாரங்கள் கொண்ட (400) நானூறு பாடல்களினால் நாம் வாழ நம்மைக் காக்கிறது.

இதனைத் தனியாக ஒரு புலவர் பாடியதில்லை. பல புலவர்கள் செய்தார்கள் என்றும், "பதுமனார்" இதனைத் தொகுத்தார் என்றும், தருமர் உரை கண்டார் என்றும் அறியமுடிகிறது.

அடியார்க்கு நல்லார், இளம்பூரணர், பரிமேலழகர் மூவரும் நாலடியாரை மேற்கோள் காட்டியிருப்பது நூலுக்கு அழகு சேர்க்கிறது மட்டுமல்ல, மகிமையும் கிடைக்கிறது.

"எண் பொருள் குன்றத்து எண்ணாயிரம் இருடி
பண் பொருந்தப் பாடியபா நானூறு"

வறுமை காரணமாகப் பாண்டி நாட்டில் தஞ்சமடைந்த எண்ணாயிரம் சமணர்கள் தத்தம் நாடு திரும்ப முன்பாக, இரவோடு இரவாக பாடிய எண்ணாயிரம் பாடல்களில் காலத்தால் அழியாத எஞ்சியவையே இந்த நானூறு பாடல்களுமாகும் என்பது வரலாறு.

இதன் சாராம்சமாக இக்கட்டுரை இனிது வாலாயமாகிறது.

**சிறப்பு**

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"

நாலடியாரும், திருக்குறளும் சொன்னபடி வாழ்வோமாக இருந்தால் அதுவே வாழ்வின் பேறாகும். பாமர மக்களிடம் கொண்டு செல்லப்படவேண்டிய தேவையைத் தற்காலம் சுமந்துகொண்டே வருகிறது. பண்டிதர்களின் துணையின்றி எளிமையாகப் புரிந்துகொள்ள ஆவனசெய்யும்போது ஈரடியும், நாலடியும் இந்த மண்ணில் பொன்போல விளையும் என்பதைப் பெரும் பெரும் பட்டங்களை முன்னுக்குப் பின் சுமப்பவர்கள் புரிந்துகொள்வது தமிழுக்கும், தமிழர்க்கும் விடிவைத் தரும்.

**பேறு**

நான்கடிகளையுடைய நேரிசை வெண்பாவும், இன்னிசை வெண்பாவும் கொண்டதாக, கி.பி. 250இல் இயற்றப்பட்டதே நாலடியார். மேலும், அறம் 13 அதிகாரங்கள், பொருள் 26 அதிகாரங்கள், காமம் 01

*சகோதர வளர்ச்சி தோன்றாதவரை வேற்றுமை உணர்ச்சி இருந்துகொண்டேதான் இருக்கும்.*

அதிகாரம் என மொத்தம் 40 அதிகாரங்கள் 400 பாடல்கள் உண்டு. வானவில் போன்ற இவ்வுலக வாழ்க்கை, தோன்றி மறையும் தன்மையது. எனவே பரம்பொருளை வணங்கி, வாழ்த்தி வாழ்வாங்கு வாழ்தலே இப்பிறவியின் நோக்கமாகும் என்பதை நாளும் பொழுதும் வரமாக்குவோமாக.

## அறத்துப்பால்

செல்வம் யாருக்கும் நிலையாக இருப்பதில்லை. நீடித்து இருப்பதுமில்லை. வண்டியின் சக்கரம்போல சுழன்று செல்லக் கூடியது.

"யார் மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்"

எனவே இயமன் வருவதற்கு முன்னதாக இல்லாதவர்களுக்குச் செல்வம் பயன்பட வேண்டும். இலங்கையில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட கணவனை இழந்த குடும்பங்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும், நோயாளிகளுக்கும் செல்வம் பயன்படும்படியாக எம் மனத்தில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். வசதியுள்ளவர்களுக்கே பெரும்பாலும் தானம் செறிவதாக இந்தமண் வருத்தம் தெரிவிக்கிறது. கௌரவமானவர்களும், கொழுத்த சம்பளம் எடுப்பவர்களும் கௌரவமாக வந்து கலந்து சிறப்பித்து உண்டு மகிழ்வதும், உண்டியளிப்பதும் புகழுக்கும் இகழுக்கும் உரியதொன்றாகும். வறுமையில் வாடுபவர்களுக்கே தருமம் பேறாக வேண்டும். சிந்தனை செய் மனமே!

மாதாந்த சம்பளம் எடுப்பவர்களுக்கு வேதாந்தம் சொல்லிக்கொடுக்க வேண்டுமா? வீட்டிலே குசினி அடுக்களை உண்டு. மனைவி உண்டு. பிள்ளைகள் உண்டு. எல்லாப் பொருட்களும் உண்டு. உருப்படியாக உடம்பும் புஷ்டியாக உண்டு. மருந்துகளும் உண்டு. வங்கியில் பணமும் உண்டு. பொறுமையாக இருந்து சமைக்கப் பொறுமை இல்லாமல் வீட்டையும், படலையும் பூட்டி, வாகனத்தையும் பூட்டி பொதுப்பசி ஆறவேண்டுமா? இது அறமல்ல. முதலில் இல்லாதவனை வரையறை செய்யவேண்டும். பாத்திரமறிந்து பிச்சை கொடுங்கள். இது தான் தர்மம். அன்னத்தை அளந்து பக்குவமாக இடுங்கள். அவசரப்பட்டு அள்ளிக் கொட்டிச் சிந்தி அநியாயம் செய்யாதீர்கள். வாழை இலையில் படைக்கப் போடுவதாக இல்லாமல் அளவாக, வயது தெரிந்து பேறாக இடுவதே தர்மமாகும்.

உல்லாசப் பயணிகளையும், பொழுது போக்க வந்தவர்களையும், கண் கடை தெரியாதவர்களையும், காதல் ஜோடிகளையும், போதையில் நிறைந்தவர்களையும் வில்லங்கமாகக் கூப்பிட்டு அன்னதானம் செய்வது அதர்மமாகும். உண்மையாகவே தொண்டு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தர்மத்தின் கரங்கள் அவர்களுக்காய் நீள நெருங்கி உதவுவதாக.

## இளமை நிலையாமை

செல்வம் நிலையாமையை அடுத்து இளமையும் நில்லாது. இளமையை வென்று முதுமையும் நெருங்கி வந்துவிடும். பிறகென்ன? கோல் ஊன்றி தள்ளாடி சோபை இழந்து இறைவனிடம் மன்றாடுவர். இளமையில் கண்கடை தெரியாமல் தானே உலகமென்று முனைப்புடன் செயற்படுவர். பின்னர் பையப் பைய தளர்ந்து ஒதுங்குவர். முன் வரிசையில் இருக்க ஆசைப்பட்டவர்கள் தாமாகவே பின்வரிசையில் இருக்க உடலும் உள்ளமும் கெஞ்சிக்கொள்ளும்.

"சொல் தளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பல் கழன்று பண்டம் பழிகாறும் - இல்செறிந்து
காம நெறிபடரும் கண்ணினார்க் கில்லையே
ஏம நெறிபடரும் ஆறு"

சுயமரியாதை இல்லாமல் வாழ்வதும், வாழ நினைப்பதும் மிகப்பெரிய அவமானமாகும்.

தத்தம் மனைவியுடன் சேர்ந்து சிற்றின்பம் அனுபவிப்பதையே கண்ணாக இருக்கும் கயவர்களுக்கு முதுமையின் தாக்கம் எப்படியாகும் என்று உணரமுடிவதில்லையே. எனவே இப்போது முதற்கொண்டு பேரின்ப வாழ்க்கை நெறியில் பயணிக்க முயற்சிப்போமாக. இதற்கு அற வாழ்வொன்றுதான் தக்க பரிகாரமாகும்.

## யாக்கை நிலையாமை

முடியுடை மன்னர்களும் காலப்போக்கில் மாண்டுபோவார்கள். திருமணம் நடக்கும்போது மங்கல வாத்தியம் முழுங்கும். சில காலம் சென்றபின் அமங்கல ஒலி கேட்கும். இதனைப் புரிந்து இளமையிலேயே இயன்ற அறம் செய்ய வேண்டும்.

உயிரானது உடலிலிருந்து விடுபட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்னர், அலங்காரம் செய்தென்ன? அடக்கம் செய்தாலென்ன? எரித்தால் என்ன? நிலப்பாவாடை விரித்தென்ன? விளம்பரம் செய்தாலென்ன? இதனால் உடலுக்குப் பெருமையும் இல்லை. சிறுமையும் இல்லை. நெருப்பும், மண்ணும் தாமே அனுபவித்துண்ணும்.

தம்மையொருவர் இகழ்ந்து உரைத்தபோது பொறுத்துக்கொள்வது மட்டுமல்ல, அவ்வாறு இகழ்ந்தவர் தனது யாக்கை நிலையாமையை உணராத நிலையில், அடுத்த பிறவியிலும் வருந்தப்போகும் நிலைகண்டு பெரியோர்கள் தமது நிலையாமையின் அறிவினால் உயர்ந்து நிற்பர்.

## துறவு

மனிதனானவன் ஐம்பொறிகளினூடாக வரும் ஆசையை அடக்கி, நல்ல புலன்வழி பயணிப்பதற்கு வழிபுரிவதே துறவின் பக்குவமாகும். துறவின் வழிநின்று வெளிப்படையாக இயங்க மறுப்பவர்கள் உறவைத் தேடுவதிலும் பின்னிற்க மாட்டார்கள். இடையூறுகள் எது வந்தபோதும், துறவு நிலை ஒருபோதுமே தடைபோவதில்லை. காமம், மோகம், தாகம், பிறர்மனை இவையெதுவுமே துறவிகளைத் தீண்டுவதில்லை. மாறாகத் துறவிகள் இவற்றைத் தீண்டினாலொழிய அவை தூர விலகி துறவுக்கு தகவு சேர்க்கும்.

## சினமின்மை

கோபம் கொண்ட ஒருவன் நாவடக்கம் கெட்டு வெடுக்கென்று கூறிய கோபச் சொல், எக்காலத்திலும் அது சொன்ன அவனை வருத்தியே தீரும். எனவே ஞானமுடையவர்கள் எத்தகைய குறுக்கீடுகள் வந்தாலும் சினந்து எரிந்து கோப மொழிகளைக் கூறவேமாட்டார்கள்.

நாகபாம்பு ஆனது, மந்திரவாதிக்குக் கட்டுப்பட்டு இருப்பதுபோல, பெரியோர்களும் ஏதுவான கட்டுப்பாட்டினால், மனித விழுமியங்களைப் பாதுகாத்து வாழ்வார்கள்.

**நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி**
**கெடுங்காலம் இன்றிப் பரக்கும் - அடுங்காலை**
**நீர் கொண்ட வெப்பம் போல்தானே தணியுமே**
**சீர் கொண்ட சான்றோர் சினம்.**

**சான்றோர் கொண்ட கோபம் தணிந்துவிடும்.**

மிகுந்த கோபத்துடன் தம்மைக் கடித்த நாயைக்கூடப் பதிலுக்குக் கடிப்பார் யாரும் இல்லையே! அதுபோல இழி சொற்களைப் பேசித் திட்டியவர்களைக்கூட உயர்ந்தவர்கள் பதிலுக்கு இழிவான சொற்களைப் பேசித் திட்டமாட்டார்கள்.

**"அபகாரம் ஆற்றினும் உபகாரம் செய்வாய்"**

பொறையுடைமையே ஞாலத்தில் மிகப் பெரிதாகும். அறிவில்லாதவன் முறை தவறிப் பேசுவான். ஆதலால் நீ விலகியிருப்பாயாக. அதுவே உனக்குப் பெருமை. அன்புடையவர் கூறும் கடுஞ்சொல்லும் நன்மை பயக்குமே. தான் கெட்டாலும் சான்றோர்

*ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை, நாம் வாழும் முறையில் உள்ளது.*

கெடுமாறு எண்ணவே கூடாது.

பந்தம் பிடித்துப் பதவிக்கு வந்தவர்கள்
தத்தம் வாயால் தாமே கெட்டுக் கொள்வார்கள்.

### பிறர்மனை நயவாமை

அறம் புகழ் கேண்மை பெருமை இந்நான்கும்
பிறன் தாரம் நச்சுவார்ச் சேரா - பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம் என்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்.

அறிஞர்களிடம் காம நோயானது பரவாது. அறிஞர்கள்போல் பாஷாங்கு செய்பவர்களிடம் இந்நோய் மறைந்துள்ளது. நெருப்பிலிருந்து கூடத் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் காமநோயோ அதனை நீ மறைத்தாலும் அது உன்னைக் கணம் கணம் வாட்டிக் கொண்டே இருக்கும். எனவே, பட்டது போதும். அதிலிருந்து விடுபடுவாயாக. நாலடியார் கட்டாயமாக பாடத்திட்டங்களில் புகுத்தப்படவேண்டும்.

மேலும் நாலடியாரில், ஈகை, பழவினை, மெய்ம்மை, தீவினையச்சம், கல்வி, குடிப்பிறப்பு, மேன்மக்கள், பெரியாரைப் பிழையாமை, நல்லினம் சேர்தல், பெருமை, தாளாண்மை, சுற்றம் தாழல், நட்பாராய்தல், நட்பில் பிழை பொறுத்தல், கூடா நட்பு, அறிவுடைமை, அறிவின்மை, நன்றியில் செல்வம், ஈயாமை, இன்மை, மானம், இரவச்சம், அவையறிதல், புல்லறிவாண்மை, பேதைமை, கீழ்மை, கயமை, பன்னெறி, பொதுமகளிர், கற்புடை மகளிர், காம நுதலியல் ஆகிய அதிகாரங்கள் படிக்குந்தோறும் எம்மையும், எம் வாழ்வையும், எம் குடும்பத்தவரையும், எம் உறவுகளையும் என்றும் பாதுகாப்பன வாய் உள்ளன.

### நிறைவு

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலையாமையால்
கல்வி யழகே அழகு"

எனவே இந்த உலகின் மூலம் கல்வியேயாகும். இந்த ஒரு பாடலுக்காக வாவது நாலடியார் என்ற நூல் அறம் செய்ய உதவுகிறது. இந்த நானூறு பாடல்களையும் பல்கலைக்கழகம் பேறாக்க வேண்டும்.

## முருகா அருள் தருக

சந்தோசம் தேடி அலைந்தேன்
சந்நிதியில் கண்டேன் ஐயா
சாபங்கள் போகக் கண்டேன்
சரவணா உந்தன் அடியில்

நித்திய அன்னம் தந்தடியார் பசி
நிதமும் போக்கும் கந்தா
நிதமுனை நினைக்கும் நெஞ்சம் - பாவ
வினைகள் தீர்ப்பாய் முருகா

தொண்டைமா னாற்றங்கரை
தொண்டனாய் வந்தேன் ஐயா
தொடரும் என் பாவவினை நீக்கி
தொழுதழும் எந்தன் குறை தீர்ப்பாய்

முருகா என்றழைத்தால் ஐயா நீ
ஓடிவா முருகா எந்தன் வாசல்
தேடிஉனை சரணடைந்தேன் - எனை
தேடி வருவார் யாருளார் உனைவிட

-எஸ். வாகீசன்-

*நாணயமாக இருப்பவர்கள் ஒளிக்கும் இருளுக்கும் அஞ்சுவதில்லை.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | | |
|---|---|---|---|
| S. சற்குணேந்திரராஜா | | கொக்குவில் | 1000. 00 |
| வின்ரல் நெற் வேக்ஸ் | | கொக்குவில் | 2000. 00 |
| மு. ராஜாராம் | | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | | யாழ்ப்பாணம் | 3 புட்டி பருப்பு |
| திருமதி கௌசலா லோகானந்தன் | | கோண்டாவில் | 80k அரிசி, 25k பருப்பு 2000. 00 |
| M. இந்துசேகரம் | | அவுஸ்திரேலியா | 80000. 00 |
| வீ. அமிர்தலிங்கம் | அரசடி | தொண்டைமானாறு | 6500. 00 |
| K. சிவஞானசுந்தரம் | | கொழும்பு-6 | 1000. 00 |
| அப்பாத்துரை செல்வராஜன் நினைவாக | | தேங்காய், அரிசி | 25000. 00 |
| S. பரமேஸ்வரன் | | இணுவில் | 3000. 00 |
| கோ. மார்க்கண்டன் | | கனடா | 25000. 00 |
| ரகுபதி தணிகைமதி | | பரந்தன் | 5000. 00 |
| சி. சிவகுமார் | | சுண்ணாகம் | 2000. 00 |
| சா. ரனுஜன் | | கைதடி | 2000. 00 |
| திரு துவாரகன் | | புத்தூர் | 1500. 00 |
| R.V. கந்தசாமி | | கொழும்பு | 1000. 00 |
| நி. அக்ஷயா | | கனடா | 2000. 00 |
| ஞா. செல்வநாயகி | | கரவெட்டி | 2000. 00 |
| சி. கணபதிப்பிள்ளை | கரணவாய் | கரவெட்டி | 1000. 00 |
| ஆ. அங்கஜன் | | அளவெட்டி | 5000. 00 |
| மு. திலகநாதன் நினைவாக | | சுவிஸ்லாந்து | 15000. 00 |
| திருமதி K. நேசரத்தினம் நினைவாக | | கொழும்பு-6 | 5000. 00 |
| இந்துஷா கருணானந்தன் | | கொட்டாஞ்சேனை | 10000. 00 |
| A. விக்னேஸ்வரன் குடும்பம் | | சங்கானை | 3000. 00 |
| S. பத்மநாதன் குடும்பம் | | நோர்வே | 8500. 00 |
| ச. சொக்கலிங்கம் | | இணுவில் | 1000. 00 |
| சு. பிரபாகரன் | | விசுவமடு | 5000. 00 |
| வசந்தகுமார் மகிழன் | | கனடா | 5000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | | பருத்தித்துறை | 6000. 00 |
| திருமதி கா. ஸ்ரீரட்ணகுமார் | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| நி. சம்பூரணி | | இணுவில் | 10000. 00 |
| தி. ரவி | | அச்சுவேலி | மரக்கறி வகை |
| சபா ரேடேர்ஸ் | | அச்சுவேலி | 1000. 00 |

*ஒருவரது செயலை வைத்தே அவரது தரத்தை நிர்ணயிக்க வேண்டும்.*

| | | |
|---|---|---|
| ராஜினி | கரவெட்டி | 1000. 00 |
| க. பாலேந்திரன் | வல்வெட்டி | 3000. 00 |
| K. முருகானந்தம் | மானிப்பாய் | 2000. 00 |
| ம. ஶ்ரீதரன் | வல்வெட்டி | 12000. 00 |
| Dr மகிழ்நங்கை | கொழும்பு | 4000. 00 |
| ச. சாருணிஜா | சுவிஸ் | 2000. 00 |
| சி. ராசதுரை | அச்சுவேலி | 2000. 00 |
| வீ. ஜெயந்தன் | இமையாணன் | 5000. 00 |
| சி. சிவராஜா | தம்பாலை | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| கலைமகள் விலாஸ் | சங்கானை | 2மூடை அரிசி |
| S. லிதுஷன் | ஊரெழு | 500. 00 |
| சத்தியேந்திரன் ராஜேந்திரா | கனடா | 800 டொலர் |
| மாலினி ஶ்ரீனிவாசன் | லண்டன் | 1000. 00 |
| திரு சுரேந்திரன் | கொழும்பு | 1000. 00 |
| அ. தருமராசா | லண்டன் | 5000. 00 |
| T. கணாதீபன் | தெகிவளை | 5000. 00 |
| தீபிகா சுரேந்திரன் | மன்னார் | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுண்ணாகம் | 2000. 00 |
| அ. செல்வரத்தினம் நினைவாக | காரைநகர் | 5000. 00 |
| அ. குமாரவேல் ஆசிரியர் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| S. ராஜேஸ்வரி | அச்சுவேலி | 1000. 00 |
| க. ரவீந்திரராஜா | லண்டன் | 10000. 00 |
| இ. சிவலோகநாதன் மூலம் இராசையா சின்னப்பிள்ளை நினைவாக | பிரான்ஸ் | 10000. 00 |
| R. யோகானந்தன் | அச்சுவேலி | 5000. 00 |
| லோ. தனுரா | வவுனியா | 1000. 00 |
| ஜெயபாலன் பவானி குடும்பம் | பிரான்ஸ் | 5000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 1000. 00 |
| த. ஆதிசக்தி குடும்பம் | கனடா | 10000. 00 |
| சே. ஆருத்திரன், சே. ஆதித்தியன் | கனடா | 5000. 00 |
| க. ரட்ணகுமார் | திருகோணமலை | 500. 00 |
| திரு நடராஜா | நீர்வேலி | 5000. 00 |
| ப. சிவமைந்தன் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| செ. திருச்செல்வம் | மட்டுவில் வடக்கு | 500. 00 |
| கு. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| து. சண்முகவரதன் | தொண்டைமானாறு | 15000. 00 |

(தொடரும்...

*சமுதாயத் தொண்டர்கள் நேர்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.*

# படைப்பில் பஞ்ச பூதங்கள்

– திரு இராமலிங்கம் ஜெயபாலன் அவர்கள் –

மனித அறிவுக்கு அப்பாற்பட்டவைகளையே கடவுள் செயலாக நம்புவது மனித இயல்பு. தவிர, மனித அறிவுக்கு உட்பட்டவைகளை இயற்கையாகப் பார்க்கின்ற பண்பும், இன்று நேற்றல்ல- மனித நாகரீக காலத்தில் இருந்தே வருகின்ற ஒன்றே. இருப்பினும் மனித அறிவு வளர்ச்சியடைய, அவை மனித அறிவுக்கு அப்பாற்பட்ட, கடவுள் செயல் என்ற நம்பிக்கையில் இருந்தும் விடுபட்டும் வந்துள்ளது. தவிர, மனித அறிவு மிகக் கூர்மையடைந்து, பல்வேறு விடுவிக்க முடியாத புதிர்களையும் விடுவித்தும் உள்ளது.

இந்தவகையில் மனித அறிவுக்கு உட்பட்டவை, அப்பாற்பட்டவை என இரு வேறு தளங்கள் எப்போதும், வேறுபட்டதாய் இருப்பதாக வேதங்களோ தத்துவங்களோ புராண இதிகாசங்களோ காட்டவில்லை. ஆனால் இவை மனித மனங்களில் மட்டுமே ஆழப் பதிந்திருந்தன, வேறுபட்டிருந்தன. இந்தவகையில் உதாரணமாக நெருப்பு சுடும் என்று சொன்னால் அறிவுக்கு உட்பட்டது. சுடாது என்று சொன்னால் அறிவுக்கு அப்பாற்பட்டது. சில ஆலயங்களில் தீ மிதிப்பு வைபவம் இடம்பெறுவதைப் பலர் அறிந்தும் சிலர் அதை அனுபவித்தும் இருப்பார்கள். அதாவது பல தூக்கு விறகுகளை தீமூட்டி எரித்து, தணலாக்கி, அதில் ஏறி தீ மிதிப்பார்கள்.

இவ்வாறு பல அற்புதங்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டு, மனிதன் தனது ஆன்மீக பலத்தால் அறிவுக்கு அப்பாற்பட்ட விதத்தில் செய்தாலும், இயற்கையை அறிந்து இறைவனை அறிந்து இயற்கைக்குள்ளேயே இருக்கும் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவைகளை மட்டுமல்ல உட்பட்டவையையும் இணைத்தே, பல்வேறு கற்பனைகளைக் கலந்து ஆனால் ஆழமான கருத்துக்கள் நிறைந்ததாகவே, வேதங்களையும் தத்துவங்களையும் புராண இதிகாசங்களையும் படைத்துள்ளனர்.

இந்தவகையில் படைப்பில் பஞ்ச பூதங்கள் என்ற தலைப்பில் அறிவியல் உண்மைகளை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம். அதாவது பஞ்சபூதங்கள் ஆவன முறையே நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகும்.

## 01) நிலம்:

இது ஆரம்ப காலத்தில் நெய்தல் பூப்பூக்கும், மீனும் ஆமையும் வாழும் கடல் சார்ந்த நிலத்தையும், பாலைப் பூப்பூக்கும் சிங்கம் புலியுள்ள அடர்ந்த காட்டைச் சார்ந்த நிலத்தையும், பறவைகள் பறக்கின்ற உயர்ந்த நிலையைக் காட்டும் குறிஞ்சி பூப்பூக்கும் மலை சார்ந்த நிலத்தையும் உள்ளடக்கிய முதன்மைபெற்ற நிலங்களே மனித நாகரீகத்துக்கு முன் நிலங்களாக மனிதன் கண்டு கொண்டான். பின்னர் காட்டை அழித்து புல்லை வளரவிட்டு விலங்குகளை வளர்ப்பதற்கு பெரும் காட்டை சிறுகாடு ஆக்கினான். அடுத்த கட்டமாக வயல் நிலங்களை உருவாக்கி தானியங்களை வளர்த்து உணவாக்கினான். இங்கே மூன்று பிரதான நிலங்களும் இரண்டு துணை நிலங்களும் உருவாக்கினாலும் காலப்போக்கில், மனித நாகரீக வளர்ச்சியின் பயனாக வயல் நிலங்கள் பிரதான நிலமாக மாறியது. எவ்வாறாயினும்

*நீங்கள் கடமையைச் செய்யும்போதே உங்கள் தகுதி தெரிந்துவிடும்.*

நிலங்களின் பரிணாமம் மூன்று நான்கு ஐந் தாகவே இடம்பெற்றது. ஈற்றில் பூமியையே நிலமாக பொதுவாகக் கருதும் அறிவியல் விருத்தியும் ஏற்பட்டது. இது உயிரின வாழ் வுக்கு நிலம் அல்லது பூமி பஞ்சபூதங்களில் இன்றியமையாத ஒன்று என்பதை அறிவியல் ரீதியாக கண்டுகொண்டு தெய்வீகத் தன்மை யைக் கொடுத்துள்ளான்.

### 02) நீர்:

உயிரின் பரிணாமத்தில் தாவரம் முதன்மையான உயிரினமாகவும் மற்ற உயிரினங்கள் தாவரத்தில் தங்கியும் வாழ் கின்றன. அதாவது ஊன் உண்ணிகூட தாவ ரத்தை உணவாகக் கொள்ளும் உயிரினங் களையே உண்ணுகின்றன. இந்தவகையில் ஒரு உயிரினம்தான் இன்னுமோர் உயிரினத் துக்கு உணவாகிறது. இயற்கையிடம் இருந்து உயிரினம் அல்லாத தனித்துவ மாகப் பெறும் ஆகாரம் நீர் மட்டும்தான், தவிர பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் இன்றி எந்த உயிரினமும் உயிர் வாழவும் முடியாது.

### 03) நெருப்பு:

மனிதன் கல்லைக் கல்லால் உரசும் போது நெருப்பு உண்டானது. இந்த நெருப்பு சடப்பொருள் அல்ல. தோன்றி மறையும் இயல்புடைய சத்தியாகும். இதுவே சகல தோற்றத்துக்கும் மாற்றங்களுக்கும் காரணம் என்பது முடிபு. தவிர, சூரியன், திண்மம், திரவம், வாயு நிறைந்த நெருப்புக் குளம்பு ஆகும். இது தனித்துவமான சக்தியை குறிக் கும். நெருப்பு என்று சொல்ல முடியாவிட்டா லும், சூரியனின் நெருப்புத்தான் சகல இயக் கங்களுக்கும் காரணமாக அமைகின்றது.

### 04) காற்று:

உயர்ந்த மலைகளில் ஏறுகின்ற போதும், மலைக் குகைக்குள் செல்கின்ற போதும் நீராடுகின்றபோதும், மற்றும் உடல் இயக்கங்களை அவதானித்தும் காற்றின் அவசியத்தை மனிதன் கண்டுகொண்டான். படைப்பில் ஒவ்வொரு பஞ்சபூதங்களும் எவ் வாறு பங்காற்றுகின்றன என்ற உண்மையை நவீன விஞ்ஞானங்களும் எடுத்துரைக்கின்றன, பஞ்சபூதங்களின் தேவைகள் இறைவன் படைப்பில் வியக்கத்தக்க வகையில் நுட்ப மாகத் தீர்மானிக்கப்பட்டும் இருக்கிறது. உதா ரணம் நீர்வாழ் உயிரினங்களின் சுவாசம், நிலத்தில் வாழும் உயிரினங்களின் சுவாசம், இரண்டிலும் வாழும் உயிரினங்களின் சுவா சம். மேலும் உயிர் உற்பத்தியாகும்போது, காற்று இன்றியமையாதது. முட்டையில்கூட இறைவன் காற்றை வைத்துள்ளான். கருப் பையில் தாயிடம் இருந்து காற்று கிடைக்க வசதியும் செய்துள்ளான். மேலும் இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சிகள்கூட வேற்றுக் கிர கங்களில் உயிரினங்கள் வாழக் காற்று அங்கு இருக்கின்றனவா? என்ற ஆராய்ச்சியில்த்தான் முதலில் ஈடுபடுகின்றனர் என்பது முக்கிய மாகும்.

### 05) ஆகாயம்:

'ஆ' என்றால் திறந்தது, 'காயம்' என்றால் உடல். எனவே திறந்த உடல் எனப் பொருள்கொள்ளும். மேலும் மனித அறிவின் ஆரம்பத்தில் ஆகாயம் என்றால் மழை மற்றும் வெயில் போன்றவற்றுக்கு இடமாக அமையும் வானமாகவும் ஆகாயம் கருதப்பட்டது. பின்னர் அறிவு வளர்ச்சியின் பயனாக, ஆகாயம் என்றால் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பிரபஞ்சம் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இவ்வாறு பஞ்சபூதங்களைத் தனித் தனியாகப் பார்க்கும்போது படைப்பின் தோற் றத்துக்கும் மாற்றத்துக்கும் இயக்கத்துக்கும்

*பயமும் தயக்கமும் உள்ளவனை தோல்வி தொடர்ந்துகொண்டே இருக்கும்.*

காரணமாகின்றன. தவிர பஞ்சபூதங்களின் நிலம். நீர். காற்று என்கின்ற மூன்றும் திண் மம். திரவம். வாயு என்று சொல்லப்படுகின்ற சடப்பொருள் ஆகும். மற்றும் நெருப்பு சக்தி யாகவும் இவை இரண்டும் இணைந்து இயங்க வசதியாக பிரபஞ்சத்தையும் மேலும் சுருக்கி அறிந்துகொள்ள முடியும்.

பஞ்சபூதங்களை சித்தர்கள் தமது மெய்ஞான அறிவினால் வென்று வாழும் ஆற்றலைக் கொண்டிருந்தாலும், எல்லா மனிதராலுமே அது முடியக்கூடியதல்ல. இவ் வாறு பஞ்சபூதங்களை வென்றவர்கள் படைத்த இறைவனையே வென்றவர் ஆகி விடுவார்கள். இதனால் அதர்மங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக புராண இதிகாசங்களும் எமக்குப் பல செய்திகளைச் சொல்கின்றன.

எவ்வாறாயினும் சித்தர்கள் காலத் தைக் கணித்து காற்றுள்ள போதே தூற்றிக் கொண்டனர். இயற்கை மருத்துவத்துறை யிலும் பஞ்சபூதங்களின் நுணுக்கமான இயல்பு களை மனித உடலிலும் கண்டுபிடித்து புனிதமிக்க பல்வேறு கலைகளைக்கூடத் தந்திருக்கிறார்கள்.

இந்தவகையில் இறைவனை பஞ்ச பூதங்களாகக் கருதி, பஞ்சபூதத் தலங்களை நிறுவி ஆன்மீக வழிபாடு இயற்றி வருதலும் இந்து மதத்தில் முக்கிய சான்றாகும்.

## குறள் வெண்பாக்கள்

தொண்டைமா னாறுதனில் தாழ்ந்தெழுந்து நீராட
உண்டு மருந்துஉன் நோய்க்கு.

தேன்பாயும் சந்நிதியில் தந்திடுவான் வேலனருள்
மீன்பாயும் ஆற்றின்கண் ணிருந்து.

கோலெடுத்து மாந்தர்க் கிடர்தரும் வீணரை
வேலெடுத்து வீழ்த்தி விடு.

சந்நிதி யானைச் சரணடைந்தார் வாழுவார்
பந்தபாசம் பற்றும் பறந்து.

அன்னதானக் கந்த னருகிருந் தருள்கையில்
என்னகுறை வந்துகூடும் எமக்கு.

சந்நிதியான் பாதம் பணிந்து வணங்குவார்க்கு
எந்நிதியும் ஈவான் இரந்து.

அன்னக் கலைகளையும் ஆச்சிரம டாக்டரவர்க்
கின்னுமருள் தொண்டாற்றக் கிடந்து.

-சீ. சாந்தநாதன்-

# வழித்துணை 12

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 மாற்றுவழி ஒன்றினைநாம் மற்றவர்க்குக் காட்டாமல்
சாற்றுபணி பிழையென்று சாடிடுதல் நன்றன்று
ஏற்றவழி எல்லோர்க்கும் நல்வழியாய் இருப்பதனால்
போற்றியே அவ்வழியில் புகுந்துநாம் உயர்வுறுவோம்.

02 தேவையின்றி உம்மிடத்தில் இருக்கின்ற ஒன்று
மற்றவர்கு மிகமிகத் தேவையாயும் இருந்திடலாம்
தேவை அறிந்துநீர் சேவைதனைச் செய்திடுவீர்
உம்மை அறிந்திறைவன் மேன்மேலும் உதவிடுவான்.

03 பண்பாடு என்பது தன்பாட்டில் வருவதன்று
ஒன்றினை ஒன்று புரிந்திட எழுவதாம்
அன்போடு அதைநாங்கள் அனைவருமே புரிந்திட்டால்
தென்படும் அன்றோதான் மனிதஇனம் இங்கேயாம்.

04 மண்ணுக்குள் வைரமுண்டு விண்ணுக்குள் மீன்களுண்டு
நீருக்குள் முத்துண்டு நாகத்துள் இரத்தினமுண்டு
உன்னுக்குள் எதுண்டு என்றுநீ ஏங்கிடாதே
மனிதத்துள் நீயிருந்தால் உன்னுள்ளும் மாணிக்கமுண்டு.

05 நீருற்று வருமென்றெண்ணி நிலத்தைநாம் தோண்டும்போது
ஊற்றுநீர் வருதல்கண்டே உளம்மகிழ்ந்து பொங்குதல்போல்
மாற்றமே இல்லைமனத்துள் ஆழமாய்ப் பக்திகொள்ள
தோற்றியே வருவான் இறைவன் தொழுதுநாம் பொங்கிடவே.

06 கொள்ளிக்கும் குடத்திற்கும் காத்திருத்தல் கடமையன்று
அள்ளியே பொன்வெள்ளி சேர்த்துவைத்தல் கடமையன்று
கடமையெனப் படுவது மாந்தர்க்கு யாதெனில்
இறைபடைப்பு அனைத்திற்கும் பணிசெய்து கிடப்பதேயாம்.

*வெற்றியின் அடிப்படை எடுத்த செயலில் நிலையாக நிற்பதே.*

07 எல்லோர்க்கும் கல்வியது இணையில்லா ஒன்றுதான்
ஆனாலும் கல்லாதோர் கல்லாக இல்லை
நல்லோராய் வாழ்வதற்கு கல்விமட்டும் போதாது
எல்லோரும் மாந்தரென்ற எண்ணமும் வேண்டும்.

08 தயிருள்ள வரையில்தான் வெண்ணையும் மோரும்போல்
பயிருள்ள வரையில்தான் கதிர்களும் புதிர்களும்
உயிருள்ள வரையில்தான் உறவுகளும் உடமையும்போல்
இறையுள்ள வரையில்தான் உலகென்றும் உணர்ந்திடுவீர்.

09 அணிகளில் போலிகள் அணிவதில் உண்டுதான்
மணிகளில் போலியும் மாலையில் உண்டுதான்
துணிகளில் போலிகள் வணிகத்தில் உண்டுதான்
மனிதத்தில் போலிகள் மானிடத்தில் வேண்டுமோ.

10 வறுமையெனப் படுவது வெறுமைநிலை மட்டுமன்று
சிறுமைக்கு உதவாத சிந்தனையுமாகும்
நிறுவை நிறுவையாக செல்வங்கள் இருந்தாலும்
கருமியென வாழ்ந்திட்டால் வறுமைநிலை அதுவேயாம்.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 16 | ஆனி | 32 | திங்கள் | மாணிக்கவாசகர் |
| யூலை | 20 | ஆடி | 04 | வெள்ளி | மயில்வாகனம் சுவாமிகள் |
| யூலை | 21 | ஆடி | 05 | சனி | சுந்தரமூர்த்தி நாயனார் |
| யூலை | 27 | ஆடி | 11 | வெள்ளி | பட்டினத்தடிகள் |
| ஆகஸ்ட் | 21 | ஆவணி | 05 | செவ்வாய் | குங்கிலியக்கலயர் |
| செப்ரெம்பர் | 07 | ஆவணி | 22 | வெள்ளி | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப்ரெம்பர் | 24 | புரட்டாதி | 08 | திங்கள் | கடையிற்சுவாமி |

ஒவ்வொருவரும் கட்டளையிடவே விரும்புகின்றனர். யாரும் கீழ்ப்படிவதற்குத் தயாராக இல்லை. முதலில் நல்ல வேலைக்காரனாக இருக்கக் கற்றுக்கொள். பின் எஜமானாகும் தகுதி உனக்கு வந்துவிடும்.

-சுவாமி விவேகானந்தர்-

*வாய்ப்பை எதிர்பார்க்காமல் அதை உண்டாக்குபவன்தான் அறிஞன்.*

# வினைக்கேடர்

– முருகவே பரமநாதன் அவர்கள் –

"காலமறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலமறிந்து விளைவறிந்து மேலும்தான்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆழ்வினை ஆளப் படும்"

வினை, கருமம், செயல் பொதுவாய் ஒத்தன. வினையிலே நல்வினை, தீவினை என்றிரண்டுண்டு. நல்லதற்கும், அல்லாததற்கும் செய்பவனே பொறுப்பாளி. தமிழிலே பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகையென இலக்கணம் பேசும். தாம்தாம் செய்தவினை தாமே அனுபவிப்பர். அவரவர் வினைவழி அவரவர் வந்தனர். அவரவர் வினைவழி அவரவர் அனுபவம். வினை விதைத்தவர் வினையறுப்பர். தினை விதைத் தவர் தினையறுப்பர். வினைப்போகமே இத்தேகம். வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் தரியாது என்பது பட்டினத்தார் கூற்று. சைவ, வைணவத்திலே வினைத்தொகுதி மூன்றென எழுதி வைத்துள்ளனர். பழைய பிறவிகளில் செய்த வினைகளுள் இப்பிறப்பில் அனுபவிப்பதற் கென்று அளந்துகொண்ட வினைத்தொகுதி பிராரத்துவம். இதில் எஞ்சிய வினைத்தொகுதி சஞ்சிதம். (மிச்சம்- எச்சம்) இப்பிறவியிற் செய்வது ஆகாமியம் செய்தீவினை இருக்கத் தெய்வத்தை நோகலாமா? செய்வன திருந்தச் செய்ய வேண்டும். கைநேர்த்தி செய்நேர்த்தி முக்கியம். வள்ளுவனார் வினை செயல் வகை வினைத்திட்பம், வினைத்தூய்மையென மூன்று அதிகாரங்கள் செய்துள்ளார்.

"துணை நலம் ஆக்கந் தருஉம் வினை நலம்
வேண்டிய எல்லாந் தரும்" குறள் 651.

நல்லதுணை ஒருவனுக்கு வாய்க்கப்பெற்றால் அஃது அவனுக்குச் செல்வம் ஒன்றை மட்டும் தரும். ஆனால் அவன் மேற்கொண்ட செயலின் தூய்மையோ அவன் விரும்புவன எல்லாந்தரும். எனவே பெற்றாள் பசியால் வாடிவருந்தக் கண்டும், அதற்காக அறிவுடையார் பழிக்கக்கூடிய (தூற்றும்) தூய்மையற்ற எந்த ஒரு செயலையும் செய்யாதே என வள்ளுவம் அறிவுறுத்துகிறது.

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" மேலது 656.

அடுத்த பாடல் வினைத்திட்பத்தில் வருகிறது.

"எனைத் திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு" மேலது 670.

வேறு எத்தகைய உறுதி உடையவராக இருந்தாலும், செய்யும் தொழிலில் உறுதி இல்லாதவரை உலகம் விரும்பிப் போற்றாது.

*சிறிய காரியத்தையும் ஒருவன் மிகுந்த மரியாதையுடன் செய்ய வேண்டும்.*

நாம் எவ்வளவு வல்லமை வாய்ந்தவர்களாய் இருப்பினும் ஒரு கருமத்தைத் தொடங்கும்போது அத்துறையிலே நல்ல அனுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனைகளையும் பெற்று உன் முயற்சியை மேற்கொள்வாயாக.

"செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல்" மேலது 677.

ஒரு செயலைச் செய்யத் துவங்கும்போது செயல் முறையாதெனில், அச் செயலைச் செய்து வெற்றிபெற்றவரின்மூலம் அதன் உண்மை இயல்புகளை அறிந்துகொள்வதாகும். இதுவரை வள்ளுவம் தரும் அறவுரைகள் கண்டோம்.

இந்த வினையைச் சீரதூக்கிச் செயற்படும் ஒவ்வொரு மனிதனும் வீணே நாட்களைக் கழித்தல் பொருந்தாது. வீணே கருமத்தைச் சிதைக்காமற் சிந்தாமல் சிறப்பான வாழ்வை முன்னெடுக்க வேண்டும். காலம் போகாமல், காலத்தைப் போக்காமல் தர்மம் செய். அதுதான் வழியடைக்கும் கல் என்றார். இப்பிறவி மேலானது, வாய்த்தது நந்தமத்தீதோர் பிறவி மதித்திடுமின் என்றார் அப்பர். காலம்காலமாக தவப்பொழுதை அவப்பொழுதாக்கி வாழ்கின்றோம். இதைப் பல இடங்களிலும் மணிமொழியார் அழுத்தம் திருத்தமாகக் கன்மேலெழுத்தாகப் பொறித்துப் போனார்.

"வினைக் கேடரும் உளரோபிறர் சொல்லீர்விய னுலகில்
எனைத்தான் புகுந்து ஆண்டான் எனது என்பின்புரை உருக்கி
பினைத்தான் புகுந் தெல்லே பெருந்துறையில் உறைபெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான் மறுமாற்றத் திடையானே"

திருவாசகம், உயிருண்ணிப்பத்து 4.

**கருத்து:**

பெருந்துறையில் வீற்றிருந்த பெருமான், தானே வலிதில் வந்து, எனது எலும்பின் உட்துளைப் பகுதிகளை உருகச் செய்து, அவற்றினூடாகப் பின்புறமும் சென்று ஐயோ! (என்னை முற்றிலும் வியாபகமாகி) என்னை ஆட்கொண்டு அருளினன். அவன் என் உள்ளத்தில் உள்ளான். கண்களுள் இருக்கின்றான். தவிரவும் எனது சொல்லின் இடையேயும் உள்ளான். அவனைப்போல் வினையை ஒழிப்பவர் யாருள்ளார். அகன்ற இவ்வுலகில் உளர்? சொல்வீராக. இறைவன் ஒருவனே நம் வினையைத் துடைப்பவன். எனினும் நாம் தொடர்ந்து வினைகளைச் செய்யலாமோ. ஒவ்வொரு மணித்துளிகளையும் வீணாக்குகிறோமே. எப்போதேனும் சிந்தித்தோமா. சினிமாப் பாட்டிலும், சினிமாவிலும், அபத்தமான நாடகம் பார்ப்பதிலும், நேயர் விருப்பத்திலும் காலத்தைக் கழிக்கிறோமே. பிறவியின் நோக்கத்தை உணராது காலத்தை வீணாக்குகிறோமே. அதுவும் ஒருவகையில் வினைக்கேடுதான். ஒரு ஊரிலே இந்தச் சோம்பேறிகள், பொறுப்புணர்வில்லாதோர், கூடிக் கதைத்து நேரத்தைப் போக்க ஒரு வேப்பமர நிழலைப் பயன்படுத்தினர். எனவே அதற்கு வினைக்கெட்டான் வேம்படியென்ற (அவப்) பெயர் வந்தது. இந்த வினைக்கெட்டான் என்ற தொடர் மினைக்கெட்டான் என மருவி "மினைக்" கெட்டான் வேம்படியென அழைக்கப்பட்டது. நாம் பொன்னான நேரத்தை மண்ணாக்கக் கூடாது.

இதனாலேதான் திருநாவுக்கரசு சுவாமிகள் இப்பிறவியும், வாழ்நாளும், சீவனமும் வீணாய்ப் போய்விட்டதே என மெய்யுருகிப் பாடினார்.

*பணத்தினால் அன்பையோ ஆரோக்கியத்தையோ வாங்க முடியாது.*

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும்விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனை நினைய வல்லோர்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

6:1.5.

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமுந் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீ யெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே 6:54.8.

வேளூரானைப் போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே. வேளூரிற் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் போற்றி வணங்காது வாழ்நாட்களை வீணாக்கினேனே என்பது பொருள்.

உயர்ந்த பரம்பொருளுக்கும் நமக்கும் இடைவெளி அகன்றுகொண்டே இருக்கிறது. ஆழ்வார் ஒருவர் உணவு உண்ணாத நாட்கள் எனக்குப் பட்டினி நாளாகாது ஆனால் எம் பெருமானது "நமோ நாராயணா" என்ற மந்திரத்தைச் சொல்லாத நாட்கள் எனக்குப் பட்டினி நாளெனப் (பெரியாழ்வார்) பாடியுள்ளார்.

"கண்ணா! நான்முகனைப் படைத்தானே
காரணா! கரியாய்! அடியேன் நான்
உண்ணா நாள்பசி யாவ தொன்றில்லை
ஓவாதே 'நமோ நாரணா' என்று
எண்ணா நாளும் இருக்கு யசுர், சாம
வேத நாண்மலர் கொண்டுன் பாதம்
நண்ணா நாள், அவை தத்துறு மாகில்
அன்றெ னக்கவை பட்டினி நாளே"

பெரியாழ்வார் திருமொழி 1:5.6.

இருக்கு வேதம், யசுர் வேதம், சாமவேதம், நாண்மலர்- புதுமலர், தத்துறு நாள்- வீணே கழியும் நாள்.

"இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு"

குறள் 5.

புரிதல்- எப்பொழுதும் சொல்லல்.

*கடவுள் சம்பளத்தை வாழ்க்கையின் முடிவில்த்தான் தருகிறார்.*

(தொடர்ச்சி...

# மண்டூர்க் கந்தசுவாமி கோயில்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

## ஆலய வளர்ச்சி

கி.பி 1107ஆம் ஆண்டில் மண்டூர் பிரதேசத்தில் சிற்றரசனாக இருந்த மண்டுநாகன் என்பவன் மண்டூரில் பெருஞ்சாலை அமைத்து சிறப்பான அரண்மனையையும் கட்டினான். மேலும் தனது ஆன்மீக நோக்கில் மண்டூர் முருகன் ஆலயத்தையும் கட்டுவித்தான். மேலும் இவ்வாலயஞ் சிறப்புடன் இயங்குவதன் பேரில் வேண்டிய நன்கொடைகளையும் வழங்கினான். மண்டுநாகனின் மறைவின்பின் மதிசுதன் என்பவன் அரசாண்ட காலத்தில் இவ்வாலயத்தைப் புனர்நிர்மாணஞ் செய்து சிறப்புடன் இயங்க வைத்தான்.

தொடர்ந்து கலிங்க நாட்டிலிருந்து வந்த கலிங்க மாகோன் என்பவன் மட்டக்களப்பு மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களிலும் அரசாண்டான். இவனின் காலத்தில் அனைத்துக் கோயில்களும் சிறப்புடன் இயங்கப் பல திட்டங்களை வகுத்தான். சகல ஆலயங்களுக்கும் நல்ல விளைவு தரும் நெல் வயல்கள் சீர்வரிசைகளை வழங்கினான். ஆலய நிர்வாகக் கட்டமைப்பின் பேரில் நிர்வாகப் பொறுப்பாக ஊர் மக்களை நியமிக்கவும் வழிவகுத்தான்.

## ஆலய நடைமுறைகள்

இதற்கமைவாக மண்டூர் கந்தசுவாமி கோயிலைப் புனரமைத்தான். எதிர்காலத்திலும் ஆலயம் குன்றாத வசதியுடன் சிறப்புற இயங்குவதன் பேரில் இருபோகமும் விளைவிக்கக்கூடிய வளமான நெற்காணிகள் உட்பட 280 ஏக்கர் நிலத்தை மானியமாக வழங்கினான். மேலும் பல உதவிகளையும் செய்தான். மண்டூர் பிரதேசத்தில் ஆலய நிர்வாகத்திற்கென்றே பெரிய கவுத்தன்குடி வேளாளர் குடியமர்த்தப்பட்டனர். கலிங்க மாகோனின் ஆட்சிக்கு முன் ஆலய நிர்வாகம் சீராக அமையாததால் சகல ஆலயங்களுக்கும் அமைவான ஆலய நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி பட்டயங்களையும் எழுதி வைத்தான்.

## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் நிர்வாகப்பணி

ஏற்கெனவே குடியமர்த்தப்பட்டு மண்டூரில் வாழும் வேளாளர் தமக்குள்ளே நேர்மையும் திறமையும் தகைமையும் கொண்ட ஒருவரை ஆலய நிர்வாகத் தலைவராக நியமிப்பார். இத் தலைவர் அப்பிரதேச வழக்கப்படி "வண்ணக்கர்" என அழைக்கப்பட்டார். இவரே ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பாளராவார். அயலூர்களான துறை நீலாவணை, பெரிய கல்லாறு, கோட்டைக்கல்லாறு, குறுமண்வெளி ஆகிய நான்கு திருவூர்களின் தெரிவு செய்யப்பெற்ற நால்வர் இவ்வாலயத்திற்கான வரவு செலவுகளைச் செவ்வனே மதிப்பிட்டுப் பேணி வருவர். இவர்கள் கணக்கப்பிள்ளைமார் என நியமனம் பெற்றனர்.

பூசைப் பொறுப்பினை ஆரம்ப காலம் முதல் பணிபுரிந்த வேடுவரின் தலைமுறையினர் நடாத்தி வருகின்றனர். இவர்களுள் பெருவிழாக்கள், கந்தசஷ்டி, திருக்கார்த்திகை போன்ற விசேடகாலப் பணிகளைச் செய்பவர்கள் பெரிய கப்புகனார் எனவும் நித்தியபூசை செய்யவென

*உடல்நலம் என்பது ஒரு வரப்பிரசாதம். திருப்தி என்பது மிகப்பெரிய சொத்து.*

பூசைக் கப்புகனார் எனவும் நியமனம் பெற்று தம்பணியைச் சிறப்புடன் செய்கின்றனர். மேலும் கவுடாக்காரன், கோயிலார், கங்காணி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய ஆலய பணியாளர்கள் எவருக்கும் சம்பளம் ஏதும் வழங்குவதில்லை. இப்பணியாளர்கள் சந்ததி சந்ததியாகப் பணிபுரிவதன் பேரில் ஏற்கெனவே இருபோக நெல்வயல் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காணியை அவ்வவ் பணியாளர்கள் வேளாண்மை செய்து விளைவை எடுப்பர். மேலும் வருடாந்தம் கைவிசேடம், பெருவிழாவுக்கான கொடுப்பனவு, அர்ச்சனையில் பங்குவீதம் (பின்னர் குறிப்பிடுவதுபோல்) வழங்கப்படுகிறது. வண்ணக்கர் ஆலயத்தின் சகல பொறுப்புக்களுக்கும் உரித்தாவார். இவருக்கு மானியமாக நிலமும் மேற்குறிப்பிட்டபடி கொடுப்பனவுகளும் வழங்கப்படும். நான்கு ஊரைச் சேர்ந்த கணக்குப்பிள்ளைமார் வருடாந்த விழாக்களின் வரவு செலவினங்களை மிகத் திறமையுடன் வகுத்து நடாத்தி வருகின்றனர்.

## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் பூசைகள்

இவ்வாலயம் அமைந்த காலந்தொட்டு இன்றுவரை அன்று பூசை தொடக்கிய வேடுவர் பரம்பரையினரே பூசைகள் விழாக்கள் பெருவிழாக்கள் யாவற்றையும் செய்து வருகின்றனர்.

இன்றைய ஆலயச் சிறப்பிற்கேற்ப நித்திய பூசைகளுக்கென நால்வர் சுழற்சி முறையில் பணியாற்றுகின்றனர். இவர்கள் "கப்புகனார்" என அழைக்கப்படுகின்றனர். விசேட விழாக்காலங்களில் அனுபவம் வாய்ந்த "பெரிய கப்புகனார்" என்னும் பூசகர் பணியாற்றுவார். யாவரும் தத்தம் கடமைகளைச் செவ்வனே இறைபணியாகச் செய்வதால் பூசை வழிபாட்டுச் சிறப்பும் ஆலயத்தின் அருள்வளமும் வழிபடுவோரின் மனநிறைவும் முருகனின் பெருமையை அணிசெய்கின்றன.

இவ்வாலயத்தில் பணியாற்றும் அரிய பணியுடன் தினமும் நாள்நேரம் தவறாத மூன்று காலப்பூசை நடைபெறுகின்றது. வருடம் முழுவதும் மூன்றுநேரப் பூசை நடைபெறும் நியதியில் பெருவிழாக்காலத் தீர்த்த விழா அன்றைய பகல்நேரப் பூசையும், மார்கழி மாத திருவாதிரை அன்று அதிகாலைப் பூசையும் அவ்விரு விழாக்களின் அதிசிறப்பின் காரணமாக நடைபெறுவதில்லை. தவறவிட்ட இருவேளைப் பூசைகளையும் தைப்பொங்கலன்றும் புதுவருடப் பிறப்பன்றும் மேலதிக பூசையாகச் செய்து நிவர்த்தி செய்யப்படுகிறது.

## நித்திய பூசைகள்

அதிகாலை 04.00 - 04.30 மணியிலும்
பகல் மதியம் 12.00 - 12.30 மணியிலும்
மாலை 06.00 - 06.30 மணியிலும் நடைபெறுகிறது.

பூசைக் கப்புகனார் பூசை தொடங்கும் முன்னரே தமது பணியாகப் பூசைக்கான திருவமுதை இதற்கென அமைக்கப்பெற்ற ஒதுக்கிடமான பாகசாலையில் எவரும் காணாதவாறு திருவமுதைச் செய்து முடிந்ததும் உரிய முறைப்படி அதனை பரிபக்குவமாக எடுத்து வெண் துகிலால் மூடிக்கட்டி தமது தோளில் காவாகச் சுமந்து நிமிர்ந்த நேர் நடையுடன் கருவறையுட் செல்வார். ஏற்கனவே வேண்டிய யாவும் ஏற்பாட்டில் இருப்பதால்

*தன்னம்பிக்கையுடன் உழைப்பும் இருந்தால் வெற்றி நிச்சயம்.*

திருவமுதை வைத்துப் பூசித்ததும் வெளியே சந்தன மண்டபத்திற்கு வருவார். சந்தன மண்டபத்தில் கருவறையின் முன்னால் மூடிய திரையில் வள்ளி தேவயானையுடன் மயில்மீது எழுந்தருளியுள்ள ஆறுமுகப் பெருமானுக்கும் பூசைகள் நடைபெறும். தினமும் மூலவருக்கான மூன்றுநேரப் பூசை நடைபெறும். வெள்ளிக்கிழமை மதிய பூசை விநாயகருக்கும் அன்று மாலை வைரவருக்கும் அன்று அதிகாலை சூரிய உதயத்திற்கு முன் அட்டதிக்குப் பாலகர் களுக்கும் விசேட பூசை நடைபெறும். (அட்டதிக்குப் பாலகராக வள்ளியின் சகோதரர்களான எட்டு வேடுவர் வள்ளி குகை வீடுகளிலும் தினைப்புலத்திலும் இருந்த காலத்தில் வள்ளிக்குப் பாதுகாவலுக்காக இருந்தவர்கள். அவர்களை நினைவு கூர்ந்து இவ்வாலய உள்வீதியில் எட்டுத் திசையிலும் இரண்டடி உயரமான கற்கள் நாட்டப்பட்டு மடைப்பலியிட்டு பூசைகள் நடைபெறுகின்றன.)

## யாவும் அவன் செயலாகும்.
## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் அமைப்பு முறை

இறையருளின் சித்தமும் அடியார்களின் வேண்டுதலும் ஒன்றமைந்தாற் போல மண்டூர் முருகன் ஆலயம் அமைந்த முறையும் தெய்வீக நோக்காகும்.

மண்டூரின் தென் திசையில் அமைந்துள்ளது கதிர்காமத் திருக்கோயிலாகும். கதிர்காம ஆலய அமைப்பு முறை பூசை முறை விதிமுறைகள் யாவும் எவ்வாறு நடைபெறுகிறதோ அதே சகல நடைமுறைகளையும் பின்பற்றி இயங்குவதுதான் மண்டூர்க் கந்தசுவாமி கோயில் விதிமுறையாகும். இதனையொட்டியே மண்டூர்க் கந்தசுவாமி கோயில் சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படுகிறது. இவ்விரு கோயில்களிலும் பூசை நடைபெறும்போது மந்திர தந்திரம் ஏதும் சொல்வதில்லை. பூசிப்பவர் வெள்ளைச் சீலையால் வாயை மறைத்துக் கட்டிய வண்ணம் உளமார்ந்த பக்தியால் பூசிக்கின்றனர்.

பெருவிழாக் காலத்தில் சுவாமி வீதிவலம் வரும்போது எவரும் காணமுடியாதவாறு மறைக்கப்பட்டே அழைத்துச் செல்வர். மேலும் ஊர்வலத்தின்போது வள்ளி அம்மனின் வாசலில் தரித்து நின்றதும் பூசகர் சுவாமியை எவரும் காணாதவாறு மறைத்து எடுத்துச் சென்று வள்ளியம்மனின் ஆலயத்தினுட் சென்று பூசை முடிந்தபின் வெளியே எடுத்து வந்ததும் வழமையான சுவாமியின் வீதியுலா நடைபெறும்.

எவ்வளவோ நிதிவசதி இருந்தும் முருகப் பெருமானின் விருப்பின் பேரில் ஆலய மண்டபம் சிறியதாகவே அமைந்துள்ளது. மண்டூர்க் கந்தனாலயம் முதலில் வேடர்களால் கொத்துப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பிற்காலத்தில் அரசர்களால் குகைக்கோயில் வடிவில் முகப்பு அமைக்கப்பட்டது. ஏனைய கோயில்களைப் போல் சிறப்பாக அமைப்பதற்கு முருகனால் தடைகள் செய்யப்பட்டுள்ளது. இதை நோக்கினால் வள்ளி வேடுவப் பெண் குகையில் வாழ்ந்தவர். முருகனின் இச்சா சக்தியாக அமைந்ததால் சிறப்பான ஆலயப் பெருமையை விரும்பவில்லை. ஆலயங்கள் சிறிதானாலும் (கதிர்காமம், மண்டூர்) இவ்விரு ஆலயங்களும் அருளாசியால் யாவரையும் ஈர்ப்பதில் வியப்பில்லை. யாவரும் உள்ளன்போடு வழிபடுமாறே தமது திருக்காட்சியை வெளிப்படுத்தாது அருவ வழிபாட்டை நாட வைத்தது.

(தொடரும்...

*எதிலும் எப்போதும் மிகவும் கவனத்துடன் இருந்தால்தான் வெற்றி வரும்.*

# மணிவாசகரின் பக்திச்சுவை

–திரு பு. கதிரித்தம்பி அவர்கள்–

மாணிக்கவாசகர் திருவருட்சக்தி மிக்க வராகவும், இறைவனால் விரும்பி ஆட்கொள் ளப்பட்டவராகவும் விளங்குகின்றார். தூல உடம்புடன் இறைவனுக்கு பூசை செய்தவரும், தூல உடம்புடன் இறைவனுடன் சேர்ந்த வரும் இவரன்றியாருமில்லை. இதனால் இவரை மாணிக்கவாசக சுவாமிகளென அழைக்கின்றனர்.

மாணிக்கவாசக சுவாமிகளின் திரு வருட்சக்தியை உணர்ந்த சிவபெருமான், இவரை ஆட்கொள்வதற்கு குருவேடம் தாங்கி பூத கணங்களுடன் திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் எழுந்தருளி, சிவஞான போதம் என்னும் நூலின் பொருளை கற் பித்துக் கொண்டிருந்தார். கலிங்க நாட்டிற்கு குதிரை வாங்கத் திருப்பெருந்துறையால் சென்றுகொண்டிருந்த மாணிக்கவாசகருக்கு சிவன் கற்பிப்பது காதில் பட்டது. காந்தம் இழுப்பதுபோல் ஈர்க்கப்பட்டு குருவின் முன் நின்று "சுவாமி சிவம் என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? போதம் என்றால் என்ன? இதன் பொருளைக் கூறும்படி வேண்டினார். குருவின் பொருளை உணர்ந்த மாணிக்கவாச கர் தன்னை மறந்தார். குருவசப்பட்டு பொருள் முழுவதையும் செலவு செய்தார். அனைத்தை யும் மறந்து "அனைத்தும் அவன் செயலே" என்றிருந்தார். மாணிக்கவாசகர் செயலைக் கண்ணுற்ற ஏவலாட்கள் அரசனிடம் சென்று முறையிட்டனர். கொண்டு சென்ற பணம் முழுவதையும் செலவு செய்து, யாரோ ஒரு குருவுக்கு பாதபூசை செய்கிறாரெனக் கூறினர். மாணிக்கவாசகரின் பக்திச்சுவையை அறியாத மன்னன் மாணிக்கவாசகரை அழைப்பித்து துன்புறுத்தினான். சிவனிடம் அருள்பெற்றுச் சென்ற மாணிக்கவாசகர் சிவனை மனதில் இருத்தி வேண்டுதல் செய்தார். இதன் காரண மாக வைகை பெருக்கெடுக்க, அணைகட்ட ஊர் மக்களை அரசன் பணித்தான். செம் மனச் செல்வி (வந்தி)க்கும் அணைகட்ட இடம் ஒதுக்கப்பட்டது. அநாதையாகிய செல்வி வந்தி தனக்கு ஒரு கூலியாளரைத் தரும்படி ஈஸ்வரனை கண்ணீர்விட்டு வேண்டினாள். இறைவனே கூலியாக வந்தி வீடுவந்து, உதிர்ந்த பிட்டு சாப்பிட்டு மிகவும் சுவையெனக் கூறி கந்தை வஸ்திரத்தில் பிட்டையும் வாங்கிக் கட்டிக்கொண்டு அணைகட்டும் இடத்தை அடைந்து, அணை கட்டாது திருவிளையாடல் செய்து களைத்தவர்போல் உறங்கிக்கொண் டிருந்தார். அந்நேரத்தில் அரசன் வந்து பார்த்த பொழுது வந்தியின் அணை கட்டாதிருப்பதைக் கண்டு இது யாருடைய பங்கு என வினவினான். அயலில் உள்ளவர்கள் வந்தியின் கூலியாள் அணைகட்டாது உறங்கிக் கொண்டிருப்பதைக் காட்டினர். கூலியாளராக வந்தவர் சிவனென அறியாத அரசன் ஏவலாளர் கொண்டுவந்த பிரம்பை வாங்கி கூலியாளின் முதுகில் அடித் தான். அந்த அடி உலகம் எங்கும் பட்டது. அரசனுக்கும் பட்டது. அப்பொழுதுதான் அர சனுக்கு ஞானம் உதித்தது. மாணிக்கவாச கரை சிறையினின்றும் விடுவித்தும், மன்னிப் பும் கோரினான். அரசன் மாணிக்கவாசகரின் இறை பக்தியினை அறிந்துகொண்டான்.

அரசனால் சிறையினின்று விடுவிக்கப் பட்ட மணிவாசகர் ஆலயங்களுக்குச் சென்று இறைவன் புகழைப் பாட எண்ணினார். பக்திச் சுவை கொண்ட மாணிக்கவாசகர் பக்திச்

*சரியான நேரத்தில் நன்றி சொல்லக் கற்றுக்கொள். அதுவே பேரின்பம்.*

சுவைகொண்ட திருவாசகத்தைப் பாடத் தொடங்கினார். நெஞ்சக் கனகல் நீங்க மனம் நெக்கு நெக்கு என உருக மணிமணியாக திருவாசகத்தைப் பாடியருளினார். எனவேதான் திருவாசகத்தை ஓதுவோரும் மனம் நெக்குருக நின்று கண்ணீர் மல்க ஓதுவார்கள். "திருவாசகத்துக்கு உருகாதவர்கள் ஒரு வாசகத்திற்கும் உருக மாட்டார்கள்'' என்ற பழமொழி உண்டு. இவர் பெண்கள் நீராடல், மலர் கொய்தல், உந்தி அம்மானை, குயிற்பத்து, கிளிப்பத்து, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை முதலியவற்றைப் பக்திச் சுவையோடு பாடியருளினார். இவர் மொத்தமாக 658 திருப் பாடல்களைப் பாடியருளினார். எனவே திருக்குறள், மூவர் தமிழ், கோவை திருவாசகம், திருமந்திரம் இந்நான்கும் ஒருவாசகம் என்று உணர் என்பர். "ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே" திருவாசகம் எனப் போற்றப்படுகின்றது. மாணிக்கவாசகர் வாழ்வியல் தத்துவத்தை உணர்ந்தவர். மார்கழி மாதத்தில் அதிகாலையில் கன்னிப்பெண்கள் துயில் விட்டெழுந்து, தோழியர்களையும் எழுப்பி அழைத்துக்கொண்டு நீராடச் செல்வதை கண்ணுற்ற அவர் "திருவெம்பாவை" பாடியருளினார். அதிகாலையில் எழும்புவதும், நீராடச் செல்வதும் உடலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும் என்பதுடன் கன்னிப் பெண்களின் வாழ்க்கை சிறக்குமென்பதையும் திருவெம்பாவை சுட்டி நின்றது.

மாதங்களில் சிறந்த மாதம் மார்கழி மாதமாகும். இந்த மாதத்தை மாணிக்கவாசகருக்கு உரிய மாதம் என்பர். எனவே மார்கழி மாதத்தில் வேறு நாயன்மார் பாடல்கள் ஓதுதல் தவிர்க்கப்பட்டுள்ளது. வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள் கூற்றில் "வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன்கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்'' என அருளுகிறார். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு முத்திப்பேறு நெருங்குவதை உணர்ந்த சிவபெருமான், அவர் பாடிய பாடல்களை எழுதி சிதம்பரத் தில்லைக்கூத்தன் வாசற்படியில் வைத்தார். தில்லைவாழ் அந்தணர்கள் ஏடு வாசற்படியில் இருப்பதைக் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்து, ஏட்டை எடுத்துப் பார்த்ததுடன் மாணிக்கவாசகரைத் தேடி அழைத்து வந்து பொருள்கூறும் படி வேண்டி நின்றனர். அந்தணர்கள் கூறிய வாசகத்தைக்கேட்டு மெய் சிலிர்த்து கண்ணீர் மல்கி உச்சிமேற் கைவைத்து, திருவாசகத்தின் பொருள் இதுதான் எனச் சுட்டிக்காட்டி கருவறையினுள் நுழைந்து இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

மார்கழி மாதத்தில் இலங்கையிலுள்ள சைவக்கோயில்களில் திருப்பள்ளியெழுச்சி பாடிக் கதவு திறந்தபின் பூசை நடைபெற்று, திருவெம்பாவை பாடப்படுகின்றன. பிரபல்யமான யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் ஆலயம், மாவிட்டபுரம் முருகன் ஆலயம், கொக்கட்டிச் சோலை முருகன் ஆலயம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி போன்ற ஆலயங்களில் அதிகாலையில் நாலுமணியளவில் பூசை நடைபெற்று திருவெம்பாவை ஓதல் நடைபெறுகின்றதென்பதை நாம் அறிவோம். எனவே சைவ சமயத்தைக் கடைப்பிடிக்கும் மானுடர் எல்லோரும், திருவாசகத்தை ஓதினால் முத்தி கிடைக்கும் என்ற உண்மையை உணர்ந்து, மார்கழி மாதம் தெய்வீக மாதம் என எண்ணி அதிகாலையில் துயில் எழுந்து நீராடி, செல்வச்சந்நிதி ஆலயம் சென்று வழிபடுங்கள். "எந்நிதியும் தரும் செல்வச்சந்நிதியான்" ஆலயம் சென்று முருகனிடம் காதலாகிக் கண்ணீர் மல்க, பிறவி வினை ஒழிய பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் செய்து வழிபடுங்கள். அவன் அருள் கிடைக்குமென்பது திண்ணம்.

*உன்னால் முடிந்தவரை உன் பணியினை நன்றாகச் செய்.*

(கட்டுரைத்தொடர் - 43)

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## வைரவியார் சுவாமிகள், ஊதுவர்த்திச் சுவாமிகள், மூச்சம்புலவுச் சுவாமிகள்

**(01) வைரவியார் சுவாமிகள்:**

சிவனை மறவாச் சிந்தையாளர்களாகிய சிவனடியார்கள் அனைவரும் சிவமெனவே போற்றப்பட்டார்கள். "தொண்டர் குலமே தொழு குலம்" என்பதுதான் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தின் ஊடாக நமக்குத் தந்த தெளிவுரை ஆகும். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றுதான் தவயோகி திருமூலநாயனாரும் தனது தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். உண்மையான சைவனுக்கு சாதியிலும் சமயம் பெரிது. உண்மைச் சமயியாக இருப்பவனுக்கு பிறப்பு, தொழில், வறுமை எதுவுமே பாதிக்காது. நமது சமூகத்திலும் ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறுபவர்களிடமிருந்து பக்தர்கள், ஞானிகள், சித்தர்கள் தோன்றியிருக்கிறார்கள். கண்ணப்பர், நந்தனார், திருப்பாணாழ்வார் போன்றவர்கள் பூரண சரணாகதியாகிய பிரபக்தி நிலைக்கு உதாரண புருஷர்களாகத் திகழ்ந்தவர்கள். இப்படியாகச் சித்த புருஷர்களிலும் சிலர் இருந்திருக்கிறார்கள்.

சைவமும் தமிழும், கலைகளும் சிறப்பாகப் பேணப்படும் இணுவில் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் வைரவியார் சுவாமிகள். அதி தீவிரமான பக்தி நிலையில் நின்று இறைவனை வழிபடுபவர். நல்ல விவசாயியாக இருந்த இவர் இல்லற வழி நின்று துறவறம் பூண்டவர். அன்னதானக் கந்தன் என்று அழைக்கப்படுகின்ற செல்வச் சந்நிதி முருகப் பெருமான் சந்நிதி ஆலயச் சூழலில் இருந்து அருள் விளையாட்டுக்கள் பலவற்றைச் செய்த சின்னத்தம்பி சுவாமிகள், முருகுப்பிள்ளைச் சுவாமிகள் ஆகியோரின் ஜீவசமாதிக் கோயில்கள் தென்மராட்சியின் மறவன்புலவில் அமைக்கப்பட்டுள்ளது. சின்னத்தம்பிச் சுவாமிகளின் உத்தம சீடராகிய முருகுப்பிள்ளைச் சுவாமிகள் தனது குருநாதரின் குருபூசைத் தினத்தை மறவன்புலவில் நடாத்திக்கொண்டிருந்த வேளையில் வைரவியார் சுவாமிகள் இவ்வைபவத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்தார். திருவாசகச் சுவாமிகள் என்று அழைக்கப்படுகின்ற சபாரத்தினம் சுவாமிகளும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்.

வைரவியார் தூய வெள்ளை நிறமுடைய நான்குமுழ வேட்டியை அணிந்திருந்தார். ஒரு சிறிய துண்டால் உடம்பைப் போர்த்திருந்தார். புன்சிரிப்போடு கூடிய மலர்ச்சியான முகத்தை உடைய இவர் அனைவரோடும் கலகலப்பாக சம்பாஷணை செய்து கொண்டிருந்தார். முருகுப்பிள்ளைச் சுவாமிகள் இவரைக் கண்டதும் அருகிலே அழைத்து விபூதிப் பிரசாதம் கொடுத்து ஆசீர்வாதம் செய்தார். வேடதாரிகளாக இருக்கின்ற போலிச் சந்நியாசிகள் பற்றி நல்லதொரு உதாரணத்துடன் அங்கு கூடியிருந்த அடியவர்களுக்கு வைரவியார் விளக்கம் அளித்தார். வேப்பெண்ணைப் போத்தலிலே "தேன்" என்று எழுதினால் இனிக்குமோ? வைரவியார் சுவாமிகள் கூடியிருந்த அடியவர்களிடம் வினாவினார். வெளியிலே காவி உடுத்தவர்கள் எல்லாம் துறவிகளாகார் என்பது அவருடைய

கருத்தாகும். இவர் மடத்தின் வாசலிலே நின்று தான் பூசையைப் பார்த்து ஆனந்தக் களிப்பு எய்தினார். வெளியிலே இருந்து தான் சாப்பிட்டார். சாதிப் பாகுபாடு என்ற கொடிய வியாதி என்று சைவத் தமிழ் மக்களைவிட்டு முற்றாக நீங்குகிறதோ அன்றுதான் சைவமும் தமிழும் இந்த மண்ணிலே நிலைபெற்று வாழும். நமது நாட்டில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழினம் பட்ட துன்பங்களுக்கும் விடிவு கிட்டும். தெய்வத் தமிழாகிய திருமுறைகளைத் தந்த அருளாளர்களில் அப்பரும் மணிவாசகரும் இந்தச் சாதிப் பாகுபாட்டினைத் தமது பாடல்களில் நேரடியாகவே கண்டித்துள்ளார்கள்.

"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்"

என அப்பர் பெருமானும்,

"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு"

என மணிவாசகரும் குறிப்பிட்டுள்ளார்கள். திருவாசகச் சுவாமிகள் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படுகின்ற சபாரத்தினம் சுவாமிகள் பாடல்பெற்ற தலமாகிய திருக்கேதீஸ்வரத்தின் தெற்கு வீதிக்கு அருகாமையில் கௌரி அம்பாள் வாசலுக்கு நேராகச் சிறுகுடில் ஒன்று அமைத்து வாழ்ந்து வந்தார். ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு உண்டியும் உறையுளும் வழங்கி ஆதரித்து வந்தார். வைரவியார் சுவாமிகள் திருக்கேதீஸ்வரம் சென்றபொழுது சபாரத்தினம் சுவாமிகளின் குடிலிலேயே தங்கி இருந்தார். ஆத்மீக தாகம் கொண்ட வைரவியாருக்கு சபாரத்தினம் சுவாமிகள் ஓதும் திருவாசகம் தேனாக இனித்தது. வைரவியார் சபாரத்தினம் சுவாமிகளின் அணுக்கத் தொண்டனாக அங்கே சிலகாலம் தங்கியிருந்து பணியாற்றி வந்தார். திருவாசகக் குடிலைச் சுற்றித் திருமுறைப் பாடல்களைப் பாடிக் கொண்டு வைரவியார் ஆனந்தப் பரவச நிலையில் நிற்கும் காட்சி அவரின் தெய்வீக நிலைக்குச் சிறந்ததோர் சான்றாகக் காணப்பட்டது.

"சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வேறிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம்பலத்தாடும் தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் நல்காயே!"

என்ற மணிவாசகரின் தெய்வ வாசகத்திற்கு அமைவாகவே வைரவியாரின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. இவருக்கு பக்தி இலக்கியங்களில் நிறைந்த ஈடுபாடு இருந்தது. சிறப்பாகத் திருவாசகத்திலும், தாயுமானவர் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

செல்வச்சந்நிதியின் வடக்கு வீதிக்கு அருகில் தகரமடத்துக் கடை ஒன்றில் கடவுள் சுவாமிகள் வாழ்ந்து வந்தார். கடவுள் சுவாமிகளைச் சந்தித்து ஆசீர்வாதம் பெறுவதற்காகவும் முருகனை வழிபடுவதற்காகவும் வைரவியார் சந்நிதிக்கு வருகை தருவார். தகர மடத்துக்கு வெளியில் நின்று சாஷ்டாங்கமாக நிலத்தில் வீழ்ந்து கடவுள் சுவாமிகளை வணங்குவார். பின்னர் சந்நிதிக்குத் தெற்குப் பக்கமாகத் தென்னைமரச் சோலையின் நடுவே இருந்த ஆனந்தா ஆச்சிரமத்திற்குச் சென்று மயில்வாகனம் சுவாமிகளைத் தரிசிப்பார். மயில்வாகனம் சுவாமிகளும் இவரை அன்போடு உபசரிப்பார். அன்னம் அளித்து இவருடைய பசிப்பிணியைப் போக்குவார். இவருக்கு யாராவது பணம் கொடுத்தால் தனக்குத் தேவையானவற்றை

எடுத்துக்கொண்டு மீதியைத் திருப்பிக் கொடுத்து விடுவார். ஒருமுறை பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் குடைச் சுவாமிகளைக் கண்டதும் நடுவீதியில் அவரை வீழ்ந்து வணங்கினார். இதனால் போக்குவரத்து நிறைந்த பலாலி வீதியில் வாகனங்கள் எல் லாம் நின்றுவிட்டன. வைரவியார் சுவாமிகள் போல இலைமறை காயாகப் பல சித்த புருஷர்கள் நமது நாட்டில் வாழ்ந்தார்கள். இன்றும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இவர்கள் புகழைத் தேடி ஓடுவதும் இல்லை. விளம்பரங்களை நாடி அலைவதும் இல்லை. ஆனால் இவர்களின் புனிதமான வாழ்வியல் நெறிகளை ஆன்மீக சிந்தனைகளைச் சமூகத் திற்குத் தெரியவைப்பது அறிஞர்கள் ஆன் மீக சிந்தனையாளர்கள் அனைவரினதும் தார் மீகக் கடமை ஆகும்.

**(02) ஊதுவர்த்திச் சுவாமிகள் (மகாதேவ சுவாமிகள்):**

செல்வச்சந்நிதி முருகப்பெருமானின் ஆலயச் சூழலிலே வாழ்ந்த சித்த புருஷர் களிலே மகாதேவ சுவாமிகளும் முக்கியமான ஒருவராகக் கருதப்படுகின்றார். இவர் பர்மா நாட்டின் தலைநகராகிய ரங்கூனில் பிறந் தவர். பின்பு தனது மூதாதையர்களின் சொந்த இடமான வல்வெட்டித்துறைக்கு வந்து அங்கே வாழ்ந்து வந்தார். இங்கே இவர் திருமணம் செய்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டார். இளம் வயதில் இவருடைய துணைவியார் இறைபதம் அடைந்து விட்டார். மனைவி இறந்தபின்பு தனது குழந்தையை உறவின ரிடம் கையளித்துவிட்டு ஆன்மீகத் துறைக் குள் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

இவர் பாரத நாட்டில் ஆழ்வார்கள் பலரால் மங்கள சாசனம் செய்யப்பெற்ற திருப்பதி வெங்கடேஸ்வரர் சந்நிதானத்திற் குச் சென்று தரிசனம் செய்தபின்பு உணவு உண்பதற்காக அருகில் உள்ள சத்திரத்திற் குச் சென்றிருந்தார். சத்திரத்தில் உணவுப் பரிமாற்றம் முடிந்த நிலையில் கதவுகள் மூடப்பட்டு இருந்தன. உணவு கிடைக்காத நிலையில் திரும்பிய சுவாமிகள் மீண்டும் தியான நிஷ்டையில் இருந்து இறைவனை வழிபட்டார். தியானத்தில் இருந்தபொழுது உள்ளுணர்வு தூண்டியதால் இடையில் கண் விழித்துப் பார்த்தபொழுது ஒரு அன்பர் சாஷ் டாங்கமாக இவரை வீழ்ந்து வணங்கிய வண்ணம் இருந்தார். வணக்கம் செலுத்திய பின்பு தனது வீட்டிற்கு உணவு அருந்த வருமாறு இவரை அன்புடன் அழைத்தார். அடியவரின் அன்பான அழைப்பை ஏற்று சுவாமிகள் அவருடைய இல்லத்திற்குச் சென்று அறுசுவையுடனும் வழங்கப்பட்ட உணவை அருந்தினார்.

வீட்டுக் கிரியைகள், ஆலயக் கிரியை கள், மங்களமான காரியங்கள் அனைத்திலும் ஊதுவர்த்தி ஏற்றி வைப்பது நமது சமய மரபாகும். இந்த ஊதுவர்த்தி (சாம்பிராணி) தன்னை இழந்து சூழலில் இருப்பவர்களுக்கு நறுமணத்தை நுகரவைக்கும். தூய்மையான இடத்திலும் நல்ல நறுமணம் கமழும் இடத் திலும் தெய்வ சாந்நித்தியம் மிகுந்து காணப் படும். மகாதேவ சுவாமிகளின் (ஊதுவர்த்திச் சுவாமிகள்) கையில் எப்பொழுதும் ஊதுவர்த்தி காணப்படும்.

உயரமான மெலிந்த தேகம், கசங் கிய வெள்ளை வேட்டி, உடம்பிலே வெண் சட்டை, தலையிலே தலைப்பாகை, கீச்சிட்ட குரல், எவரையும் இழுக்கும் ஆளுமை மிகுந்த தோற்றம் என்பவற்றைக் கொண்டவராக ஊது வர்த்திச் சுவாமிகள் காணப்பட்டார். வல்லி புரக் கோயிலின் கீழைக் கோபுர வாயிலில் தலை உச்சியில் கூப்பிய கரங்களுடன் நீண்ட நேரம் தியானத்தில் இருப்பார். இதேபோலச் செல்லப்பா சுவாமிகள் தவமிருந்த நல்லூரத்

*எதையும் உன்னால் செய்ய முடியாது என்று மலைக்காதே.*

தேரடியிலும் தியான நிஷ்டையில் இருப்பார். பால் உணவே சாப்பிட்ட இவர் பாலுடன் மலிபன் பிஸ்கற்றையும் உண்பார். அங்கே வரும் நாய்களுக்கும் அதையே கொடுப்பார். திருக்கோணேஸ்வரத்தில் இருந்த வேளையில் அங்கே வரும் மான் கூட்டங்களுக்குப் பாண் வேண்டிவந்து போடுவார். அடியார்கள் பலரின் அன்பான வேண்டுதலை ஏற்றுப் பின்பு ஒருநேர அன்னம் புசிக்கலானார். திருக்கேதீஸ்வரம் போய் சபாரத்தினம் சுவாமிகளுடன் தங்குவார். கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்திருந்த வடிவேற் சுவாமிகளின் தபோவனத்திற்குப் போவார். கோண்டாவில் கிழக்குச் சந்திப் பிள்ளையார் கோயிலில் அமைந்திருக்கும் கந்தையாச் சுவாமிகளின் சமாதிக்குச் சென்று தியானத்தில் அமர்ந்திருப்பார். அடியார்களைப் பேணும் இயல்பு உடைய ஆசைப்பிள்ளை ஐயா இவருக்கு உண்டியும் உறையுளும் வழங்கி ஆதரிப்பார்.

வல்லிபுரகோயில் தேர்த்திருவிழாவில் கூட்டுப் பிரார்த்தனை செய்யும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் ஒழுங்குகளைச் செய்தார். பல அன்பர்கள் இதற்கு உதவியாக இருந்தார்கள். ஊதுவர்த்திச் சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வு இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அல்வாய் நாவலடி சரவணமுத்து ஐயாவின் வீட்டில் சிலகாலம் தங்கியிருந்தார். தலயாத்திரை செய்வதற்காக தமிழ்நாடு செல்ல விரும்பிய இவருக்கு சரவணமுத்து கடவுச்சீட்டு என்பன எடுத்துக்கொடுத்து ஆவன செய்தார். தமிழ் நாட்டிற்குச் சென்ற இவர் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகப் போற்றப்படும் முருகப்பெருமானின் திவ்விய ஷேத்திரமாகிய திருச்செந்தூரில் தங்கியிருந்தார்.

வைணவர்களின் புனித திருத்தலமாகிய திருப்பதி வெங்கடேஸ்வர ஆலயத்திற்குச் சென்ற இவர் அங்கே தியானத்தில் நீண்டநேரம் அமர்ந்திருந்தார். தியான நிஷ்டையில் இருப்பவர்களின் முகத்திலே தெய்வீக ஒளி பிரகாசிக்கும். ஆழ்நிலைத் தியான நிஷ்டையில் இருப்பவர்களுக்கு கள்ளப் புலன்களாக இருந்து வஞ்சனையைச் செய்யும் ஐம்புலன்களும் ஞானப் புலன்களாக மாறிவிடும்.

"கள்ளப் புலன் ஐந்தும் காளா மணி விளக்கே" எனத் திருமந்திரம் இதனைக் குறிப்பிடுகிறது.

சுவாமிகள் திருச்செந்தூரில் தங்கி இருந்தபொழுது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்த அன்பர் முருகுப்பிள்ளை என்பவருக்கு உடனடியாகப் புறப்பட்டுத் திருச்செந்தூர் வரும்படி கடிதம் எழுதியிருந்தார். முருகுப்பிள்ளை அவர்களுக்கு அது சாத்தியப்படவில்லை. சுவாமிகள் திருச்செந்தூரிலேயே தேகவியோகம் எய்தினார் என்ற செய்தி அன்பர் ஒருவர்மூலம் அவருக்குக் கிடைத்தது.

## (03) மூச்சம்புலவுச் சுவாமிகள்:

சித்தர்கள் பாவ புண்ணியம் என்ற இரு வினைகளுக்கு அப்பாற்பட்டவர்கள். பக்தர்கள் தீவிர பக்தியினால் தமது பாவ புண்ணியங்களைக் கரைப்பவர்கள். பக்தர்கள் இறைவனைக் காண முயல்பவர்கள். சித்தர்கள் இறைவனை நேரிலே கண்டு வாழ்பவர்கள் எனத் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கலைக்களஞ்சியத்தில் சித்தர்கள் பற்றிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

வடமராட்சியின் புலோலி தெற்கும், வல்லிபுரக் குறிச்சியும் கைகோர்க்கும் பகுதியில் மூச்சம்புலவுச் சிவன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் தலவிருட்சமாக மிகப்பெரிய ஆலமரம் ஒன்று காணப்படுகிறது. நெடுந்தூரத்துக்கு கொப்பும் கிளையுமாய்ப் பரவி பாரிய விழுதுகள் ஊன்றிய மரமாக

*நாம் உண்மைகளை அறிந்திருந்தால் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை.*

நிழல் தரும் மரமாக இந்த ஆலமரம் காணப் படுகிறது. ஆலயத்திற்கு கிழக்குப் பக்கத் தில் பெரிய குளம் உண்டு. குளத்திற்கு அருகில் ஆல், அரசு, வேம்பு, கொன்றை மரங்கள் எனப் பல மரங்கள் காணப்படுகின் றன. இச்சூழல் ஒரு சோலை வனமாகவே காட்சியளிக்கும். இக்குளத்தில் நிறைய ஆமைகள் உள்ளன. கருவறையில் காட்சி அளிக்கும் சிவலிங்கப் பெருமானை எல்லோ ரும் ஆதிமூலம் என்றே அழைப்பார்கள்.

தென் இந்தியாவின் கேரள மாநிலத் திலிருந்து கொழும்பு வந்து பல தலங்களைத் தரிசித்த பின்பு மூச்சம்புலவுச் சுவாமிகள் இவ்விடத்திற்கு வருகை தந்தார். வந்தவரு டைய பெயர் தெரியாமையால் இவரை ஊரின் பெயரால் மூச்சம்புலவுச் சுவாமிகள் எனப் பொதுமக்கள் அனைவரும் அழைத்தனர். பெரிய சாமி என்றும் சிலர் அழைப்பார்கள். மலையாளமும் தமிழும் கலந்த மணிப்பிர வாள நடையிலே மக்களுடன் பேசுவார். கறுப்பு நிறமுடைய இவருடைய காதுகள் பெரிதாக அமைந்திருந்தன. இந்த ஆலயத் திற்கு வந்த பின்பு இவர் பல சித்துக்கள் அற்புதங்கள் செய்தார். இவருடைய அற்புதங் களால் மக்கள் கூட்டம் பெருகியது. பலரது தீரா நோய்களை மாற்றினார். மனக்குழப்பத் துடன் இவரை நாடிவந்த பலருடைய துன்பங் களையும் நீக்கியளிருனார். வரணியில் இருந்து வந்த ஓர் இளம் ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார். ஊமைப் பெண்ணைப் பேச வைக்கும் முன்பு ஒரு மண்டலம் யோக நிஷ்டையில் தியானத்தில் இருந்தார். தியா னம் முடிந்ததும் ஓர் இளநீரை வெட்டி அப் பிள்ளைக்குக் கொடுத்தார். அதைக் குடித்து முடித்ததும் அப்பிள்ளை வாய் திறந்து பேச ஆரம்பித்தது.

1930ஆம் ஆண்டளவில் இவர் இங்கே வருகை தந்திருந்தார். பாத யாத்திரையாக கதிர்காமம் செல்லும் கோஷ்டியுடன் இணைந்து சென்று முருகப் பெருமானைத் தரிசிப்பார். சுவாமிகளைச் சுற்றி அடியார் கூட்டம் எப் பொழுதும் சூழ்ந்திருக்கும். முதுமையும் நோயும் இவரைப் பாதித்ததும் இவர் வல்லி புரக் கோயிலின் தெற்குப் பக்கத்தில் இருக் கும் அம்பிகை வளவில் புதிய ஆச்சிரமம் அமைத்து அங்கே வாழ்ந்து வந்தார். இவர் நோய்வாய்ப்பட்டு இருந்த காலத்தில் முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த அம்மையார் ஒருவர் இவருக்குப் பல தொண்டு கள் செய்து உதவினார். இவருடைய ஆச்சிர மத்தில் பூச்செடிகள் வளர்க்கப்பட்டன. இவர் பூக்களைப் பறித்து ஆச்சிரமத்தில் பூசை வழிபாடுகளையும் செய்வார். சுவாமிகளின் உயிர் பிரிந்த பின்பு அவருடைய பூதவுடலை ஆனைவிழுந்தான் சுடலைக்குக் கிழக்குப் பக்கத்திலே சமாதி வைத்துச் சிறிய சமாதிக் கோயிலையும் அடியார்கள் அமைத்துள்ளார் கள்.

(தொடரும்...

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ. இல – 0213219599, 0212263406

**காசோலை**

செ. மோகனதாஸ்
க. இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.


*தலைசிறந்த சாதனைகள் பெரும்பாலும் இளைமையின் சாதனையே.*

# பசுவின் பெருமை

- திருமதி பொ. செல்வக்காந்திமதி அவர்கள் -

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் "பசுக்கள் வாழ்க" எனப் பாடியருளியவர். பசு சாதுவான பிராணி. அது பால் சுரந்து எம்மை வளர்ப்பது. பெற்ற தாய் பால் ஊட்டிய பின் பசுவே பால் சுரந்து ஊட்டுவதால் அது கோமாதா. சைவ சமயிகள் பசுவைத் தெய்வமாகப் பூசிப்பர். தமிழ் வீரர் பசுவுக்குத் தீமையுண்டாகாமல் போர் செய்வர்.

பசுக்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொடுப்பதிற் பகை அரசரும் உடன்பாடு தெரிவிப்பர். பசுவின் பால், தயிர், நெய், அதன் சாணம், கோசலம் என்னும் ஐந்தும் பஞ்ச கௌவியம் எனப்படும். இவை அபிடேகத்திற்குரிய புனிதமான திரவியங்கள். பசு காத்தல் பெரிய அறம். பசு இனத்தில் பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பன தெய்வாம்சமானவை. பசுவைத் தானமாகக் கொடுத்தல் "கோதானம்" எனப் பெருமை பெற்றது.



பசுவின் உயர்வு கருதியே சைவ சித்தாந்தம் ஆன்மாக்களைப் பசு என்று கூறுகிறது. பசுக்களுக்கு தலைவர் என்ற முறையில் சிவபெருமான் பசுபதி எனத் திருநாமம் பெற்றார். சைவ சமயத்தின் முதல் நூலாகிய வேதத்திற்கும் "பசு" என்னும் பெயரும் உண்டு.

"பசுக்களுக்குத் துன்பம் வராமல் காத்தருள்" விசாரசருமர் என்னும் சண்டேசுரர் நாயனார், ஆனாயனார், திருமூல நாயனார் முதலானோர் மிகப் பெரியவர்கள். சைவநெறியில் விதிக்கப்பெற்ற எண் வகையான ஸ்தானங்களுள் "மாருதஸ்நானம்" என்பதும் ஒன்று. பசுவின் காலில் பட்ட தூசியில் இலட்சுமி கடாட்சம் உண்டு. திருநீற்றை நிறையப் பூசுதல், ஆக்கிநேயஸ் ஞானம் எனப்படும். திருக்கோயிலில் கிடைக்கும் பெரும் பிரசாதமாய் "திருநீறு பூசுதல் பார்த்தியஸ் ஞானம்" என்பதாகும்.

பசுவை "மாடு" என்றும் "ஆ" என்றும் "கோ" என்றும் "தேனு" என்றும் தமிழர் போற்றி வளர்ப்பர். தாங்கள் வளர்க்கும் பசுக்களுக்குப் பாதுகாப்பான தொழுவம் அமைத்துச் செல்லப் பெயரிட்டு அழைப்பர். கறுப்பி, சிவப்பி, வெள்ளச்சி, மறைச்சி, நரைச்சி என்பன எல்லாம் சாதாரணமாக வழங்கும் பெயர்கள். பசு இல்லா வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்சம், கீர்த்தி இல்லாவாம் என்றும். பசு இல்லா வீட்டில் இலட்சுமி தரித்து

நிற்கமாட்டாள் என்றும், பசு இல்லாத நாடு காட்டிற்குச் சமமாகும் என்றும் பாடுவர்.

"ஆவிலா மனைஅகம் அழகு குன்றுமே"
"ஆவிலா மனைஅகம் ஆக்கம் இல்லையாம்"
"ஆவிலா மனைஅகம் அமலை, நீங்குவாள்"
"ஆவிலா நாடெலாம் அடவி ஆகுமே"

இச்செய்திகளை ஈழத்துச் சிதம்பர புராணமுடையார், நவாலியூர் சோ. இளமுருகனார் அண்மையில் அழகாகக் கூறியுள்ளார்.

ஆவினைப் பிள்ளைபோல் அருந்திப் பேணுவர்
ஆவினைப் பெயர் குறித்தழைப்பராத் தரு
சேவினைச் சிறப்புற வளர்ப்பர்
நெய்களில் மேவிய பணியெலாம் விரும்பிச் செய்யவே.

பசுவின் உறுப்புக்கள் எங்கும், தேவர்கள் முதலான பெரியவர்கள் உறைகிறார்கள் என்பதால், பசு புண்ணியப்பிறவி என்பதோடு, புனிதமானதும், வழிபாட்டுக்குரியதுமாம் என்னும் கருத்தையும் அழகுறப் பாடுவார்.

ஆக்களினுறுப்பெலாம் அமரர் வைகுவார்
ஆக்களே இம்மையில் அமுத தேனுமாம்
ஆக்களே இறைவனுக்கு ஐந்து நல்குமற்(று)
ஆக்கமே பூதியம் அளிக்கும் அன்பினால்"

பசுவின் தலை உச்சியில் சிவனும் நெற்றியில் சக்தியும் மூக்கு நுனியில் முருகனும், கொம்புகளிற் பிரமாவும் விஷ்ணுவும், கண்களில் சூரியனும் சந்திரனும் இன்னும் இன்னும் இதர உறுப்புக்களில் ஏனைய தெய்வ மூர்த்திகளும் இருப்பர் என்பதாகும்.

இங்ஙனமாக எங்கள் வாழ்வில் பசுமைப் புரட்சிக்கான வழியில் உதவியாக நிலவிவரும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தைப்பொங்கல் பொங்குகிறோம்.

அடுத்தநாள் மாட்டுப் பொங்கல் செய்து வெண்மைப் புரட்சிக்கு வழியாகவுள்ள பசுவையும் மாட்டையும் போற்றுகிறோம். இன்னும் சைவ சமயத்தின் பிரமாண நூல்களுள் ஒன்றாகிய வேதத்தின் முதற் பகுதியாயுள்ள இருக்குவேதத்தில் பசுவைப் பற்றிப் பாடிய முனிவர், அதற்கு ஒருவரும் தீங்கு செய்தல் ஆகாது என்றும், அது உருத்திரனின் அன்னை, வசுக்களின் பிள்ளை, அமுதத்தின் மையம், ஆதித்தியனின் சகோதரி அனைவருக்கும் அதிதி, பாவம் அறியாத பிராணி என்றெல்லாம் அறியத் தருவர்.

இனி சாம பேத சுலோகங்கள் பரிசுத்தமான பசு இனத்தைப் போற்றுகின்றன. நீவிர் புண்ணியமானவர்கள், நீங்கள் நன்றாக வாழுங்கள். நன்றாகப் பாலைப் பொழியுங்கள். காலையும் மாலையும் பால் தரும் நீவிர் கன்றுகளுடனும் காளைகளுடனும் இன்னும் பொலிவீராக. இங்கேயுள்ள நீர் நிலைகள் உமக்கு வற்றாத ஊற்றாகுக. நீவிர் இங்கே மகிழ்ச்சியாய் வாழ்வீராக. வளம் பெருக்குவீராக.

இன் புடைத்தைம்திப் பிறப்பிலேழ் பரி
வன்புடைத் தேரவற் போற்றி மற்றை நாள்
பொன் பெறு புதல்வரிற் புரியு புரியு மாக்களுக்
அன்பினால் பொங்கலும் அமையச் செய்வரால்

இப்பசுவினைக் கொன்று தின்னும் பரதேசப் பழக்கம் வெளிநாட்டு வனாந்தர வாசிகளினாலும், பறங்கியராலும் இங்கே ஒரு காலத்தில் வந்ததென்றும் அது புனிதமான சைவநெறிக்கு ஒவ்வாத செயல் என்றும், அதனை உண்ணாதவர் தேவராவர் என்றும் பாடுவார். ஆவினைக் கொல்லுதல் அவ்வூண் உண்ணுதல் பாவிகள் தொழில் அவை சைவப் பண்பல்ல.

மேவிய விரயத்து வீழ்த்தி மாய்க்குமத்
தீவினை யொழித்தவர் தேவ ராவரே

மத்திய காலச் சிங்கள மக்கள் வரலாற்றில் பசுமாடு பெருமதிப்பைப் பெற்றிருந்தது. ஜெயவர்த்தனபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு வீற்றிருந்த மாமன்னன் ஆறாம் பராக்கிரமபாகு என்பானின் காலத்தில் அரண்மனை வாசலில் காலை வேளையில் சாணித் தண்ணீர் தெளிக்கும் கலாச்சாரம் தமிழ்க் கலாச்சாரம் நிலவியது. பசுமாடு புனிதமான பிராணியாக கருதப்பெற்று வந்தது. அதனை எவரும் துன்புறுத்துதல் ஆகாது என்னும் எழுதா விதி நிலவியது மட்டுமன்றி, பசுமாடு நோய்வாய்ப்பட்டு இறந்தால் அதைப் பக்தியுடன் நிலத்தில் புதைக்கும் பழக்கமும் நிலவியது.

சிங்கள மக்கள் எவ்வாறாயினும் மாட்டிறைச்சி உண்பதில்லை என்று மஹாவன் என்பார் 1413ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். பிற்காலத்தில் பறங்கியர் இலங்கைக் கரைநாடுகளில் செல்வாக்குற்று மாட்டிறைச்சி உண்டு வந்ததைக் கண்ட சிங்கள மக்கள் அப்பறங்கியரை அடிமைப் பறங்கியர் என அழைத்தார்கள் என்று ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் எழுதியுள்ளார்கள்.

தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் பட்டிப்பொங்கல் விமரிசையாகப் பசுவை வளர்ப்பவர்கள் கொண்டாடுவார்கள்.

வீட்டில் இருப்போர் அதிகாலையில் எழுந்து வீடு வளவு பசுமாடு இருக்கும் இடம் என்பவற்றைச் சுத்தப்படுத்தி சாண நீர் தெளித்து பசு மாட்டுக்கு மஞ்சள் நீரால் குளிப்பாட்டி, ஈரம் உலர்த்தி, திருநீறு அணிந்து குங்குமம், சந்தனம் பூசி, பூமாலை சூட்டி, பட்டு அணிந்து கொம்புகளுக்கு பூமாலை போட்டு, பசுமாடு இருந்த இடத்தை சாணத்தால் மெழுகி அழகாய் வைத்திருப்பார்கள். அதன் வெண்ணிறப் பால் பொங்கி பசுவுக்குப் படைத்து கற்பூர தீபம் காட்டி சாம்பிராணி வாசம் காட்டிப் பொங்கலை வாழை இலையில் படைத்து பசுத்தெய்வத்துக்குக் கொடுத்து "கோமாதா" உண்டபின் வீட்டில் உள்ளோர் கோமாதாவை வணங்கிப் பொங்கலை உண்பார்கள். சந்தோஷம் அடைவார்கள்.

## உண்மையான துறவிகள்

ஒருமுறை அரசன் ஒருவன் துறவிகளுக்கு ஏதேனும் உதவி செய்ய நினைத்து, தன் அமைச்சரை அழைத்து "நான் தரும் பத்தாயிரம் பொற்காசுகளை நம்நாட்டில் உள்ள உண்மையான துறவிகளுக்குப் பங்கிட்டுக் கொடு!" என்று கூறினான். ஒருவாரம் சென்றபின் அமைச்சரை அழைத்து, "என்ன? நான் சொன்ன காரியத்தைச் செய்து முடித்துவிட்டீர்களா?" என்று வினவினான். அதற்கு அமைச்சர், "மன்னா! அந்தப் பொற்காசுகள் என்வசம்தான் உள்ளன" என்றார். வியப்படைந்த மன்னன், "துறவிகளுக்குப் பொற்காசுகளைக் கொடுப்பது என்பது அவ்வளவு கடினமான செயலா? எனக் கேட்டான். "ஆமாம் மன்னா! உண்மையான துறவிகள் பொன்னை விரும்பமாட்டார்கள். பொன்னைப் பெறுபவர்கள் உண்மையான துறவிகள் அல்லர். அதனால்த்தான் பொற்காசுகள் தாங்கள் கூறியபடி கொடுக்கமுடியவில்லை!" என்றார் அமைச்சர். -இந்து ஒளி-

*துன்பம் மனிதனது தன்மையை விளக்கிக்காட்டும் உரைக்கல்.*

# இறைவனும் மெய்யடியார்களும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

அப்பர் சுவாமிகள் தமது உடம்பைக் கோவிலாக்கி சித்தத்தைச் சிவமாக்கி இறைவனை அக்கோயிலில் எழுந்தருளச் செய்து சிவபூசை செய்து அக வழிபாடு செய்து வந்தவர். அவர் ஒரு நடமாடும் கோயிலாகவே திகழ்ந்தார். இறைவனோடு இறைவியும் அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தாள். சிவன் தன் சிந்தையுள் குடிகொண்டிருந்த அழகை நாவரசர் சித்தரிக்கும் சிறப்பைப் பாருங்கள்.

முடி கொண்ட மத்தமும் முக்கண்ணின்
நோக்கும் முறுவலிப்பும்
துடி கொண்டகையும் துதைந்த வெண்
நீறும், கரி குழலாள்
படி கொண்ட பாகமும் பாயும் புலித்
தோலும், என் பாவி நெஞ்சில்
குடி கொண்டவா தில்லை அம்பலக்
கூத்தன் குரை கழலே.

என்கிறது அவரது பாடல்.

சிவஞானச் செல்வராகிய சிவப்பிரகாச சுவாமிகள் சமயக் குரவர்களது மேன்மையை நன்கு போற்றியவர். இவர் அப்பர் சுவாமிகள் ஒரு நடமாடும் கோவிலாக எவ்வாறு திகழ்ந்தார் என்பதை வர்ணிக்கும் அழகைப் பாருங்கள்.

திருமறைக்காட்டிலே திருக்கோவில் கதவினைத் திறப்பித்து, நீண்டகாலத்தின் பின் எம்பெருமானை நேர் வாயிலாக எல்லோரும் தரிசித்ததுபோல அப்பர் சுவாமிகள் தன் உடம்பாகிய கோயிலின் வாயிலை அடைத்து வைத்திருக்கும் ஆணவ மலமாகிய கதவினை திறக்க வைத்து தாயிலியாகி சிவனை யாவர்க்கும் காட்டி வைத்தார் என்னும் பொருள்பட சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ளதையும் கேட்டுப் பாருங்கள்.

"தாயிலியாகும் சிவபெருமான் தன் தான் எனும்
ஓர் கோயிலின் ஆறறிவாகிய நாமமும் கொண்டிருந்த
வாயிலின் ஆணவமாகும் கபாடமும் மன் திறந்து
நோய் இலியாகிய சொல் இறை காட்டுவன் நோபாக்குதற்கே"

தனக்கு ஒரு மூலம் இல்லாத சிவனைத் "தாயிலி" என்றழைப்பதுண்டு. உயிருக்குயிராய் உள்நின்று உணர்த்துவார் ஈசன் ஆதலால், உயிர் அனைத்தும் இறைக்கு ஆலயம் என்றார்.

பதி- இறைவன், பசு- ஆன்மா, இவை இரண்டும் அநாதி ஆதலால் இவ்விரண்டையும் முற்றாக அழித்தல் முடியாது. அதுபோலவே பாசமும் அநாதி; எனவே அதனை முற்றாக அழித்து விடுதல் முடியாது. அதனை மறைத்து அதன் வலிமையை மங்கச் செய்தலே சாத்தியம். அதனால்தான் கபாடம் களைந்து என்னாமல் கபாடம் திறந்து என்று பாடினார் சுவாமிகள்.

*உறுதியில்லாத மனிதன்தான் அதிஷ்டத்தில் நம்பிக்கை வைக்கிறான்.*

சிவனை எமது உள்ளத்தே எடுத்துக்கொள்ளல் எளிதான காரியமல்ல. உடம்பைக் கோயிலாக்க எத்தனை முன் ஆயத்தங்கள் செய்தாக வேண்டும்.

ஒரு வீட்டிற்கு குடிபோவதென்றால் உடனே போய்விட முடியுமா? அதுவும் நெடு நாளாகப் பூட்டிக் கிடந்த வீடென்றால் கேட்க வேண்டுமா?

முதலில் அவ்வீட்டைச் செப்பனிட்டாக வேண்டும். கதவுகளைத் திறந்து இருள்போக்கி வெளிச்சம் உள்ளேவர விடவேண்டும். குப்பை கூளங்களைப் பெருக்கி நிலத்தைக் கழுவி தூய்மையாக்க வேண்டும். சுவருக்கு வெள்ளை அடித்து அழகுபடுத்த வேண்டும். வீட்டுக்கு வருவோர் அமர ஆசனங்கள் அமைத்தாக வேண்டும்.

இதேபோன்றே இறைவனை எம் சிந்தையுள் குடிபுக வைக்க நாம் எத்தனை பக்குவம் பெற்றாக வேண்டும். இதனை மணிவாசகர் எத்தனை அழகாய்ப் பாடியுள்ளார்.

"இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும் துன்பம் தொடர்பு அறுத்து சோதியாய் அன்பு அமைத்து சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே ஊராகக் கொண்டான் உவந்து"

வீட்டுக் கதவைத் திறந்தால் ஒளி உள்ளே வரும். எம் அக இருளைப் போக்க இறைவன் சோதியாய் வருவான். இவ்வாறு இறையை வரவிடாது, எமது வஞ்சப் புலன்கள் ஐந்தும் தடுக்க முனையும். இதற்காகவே இறைவன் அருள் புரிந்து அடியவர்களின் வஞ்சப் புலன் ஐந்தின் வழி அடைக்க வைக்கின்றான் என்பதை மணிவாசகர், "மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்புலன் ஐந்தின் வழி அடைத்து அமுதே ஊறி நின்று என்னுள் எழு பரம் சோதி" என்றார்.

ஐம்புலன்களே எம்மை மயக்கி அறியாமையை உள்ளெடுக்கும் வாயில்களாக எமது உடம்புக்கு அமைந்துள்ளன என அறியக்கிடக்கின்றது. துன்பம் தொடர்பு அறுத்து பாசம் நீக்கி எமது அகம் சுத்தமாக்கப்பட வேண்டும். துன்பம் தொடர்பு அறுக்க இன்பம் பெருக்கி அருள்புரிய இறைவன் எம் அகத்தே எழுந்தருள்வார். அவர், அமர எம்மிடம் உள்ள மெய் அன்பே ஆசனம் ஆக அமையும்.

இந்த வகையில் அடியார்கள் உள்ளத்தில் இறைவன் அமரும்போது உடல் கோயிலாக அமைகின்றது. இந்த நிலையில் இவ்வுடம்பு பெறும் பேறுகள் அளப்பரியவை. கூற்றை உதைத்த குழகன் உள்ளே உறையும்போது கூற்றுவன் உள்ளே வரான். தீவினைகள் அகலும், காமம், வெகுளி, மயக்கம் ஆகியவை தாமாகவே நீங்கும். துன்பம் அறுத்த மெய்யின்பத்தில் இவ்வுடல் கொண்டோர் வாழ்வர். இந்த உயர் நிலையை அப்பர் சுவாமிகள் பாடியுள்ளவற்றைப் பாருங்கள்.

*பாடல்*

வெம்ப வருகிற்பதன்று கூற்றம் தம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவு தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கு எழில் ஞாயிறு எளியோ மல்லோம்
அம்பவள செஞ்சடை மேல் ஆறு சூடி
அனல் ஆடி ஆன அஞ்சும் ஆடுகந்த
செம்பவள வண்ணச்செங்குன்ற வண்ணர்
செவ்வான வண்ணர் என் சிந்தையுள்ளே.

*கல்வியின் சிறந்த நோக்கம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுவது.*

சிவனாரின் செம்பவள மேனி வண்ணத்திற்கு நாவுக்கரசர் இப்பாடலில் 3 உவமைகள் கூறியுள்ளார்.

முதலில் செங்குன்றவண்ணர் என்றார். சிவந்த நிறம் குன்று முழுவதும் கலவாதிருத் தலால், அது இறைவன் உலகத்தினின்றும் பேதமாய் தோன்றுகின்ற அத்துவித நிலையைக் குறிக்கின்றது. அடுத்து செம்பவளவண்ணர் என வர்ணிப்பது சிவப்பு நிறம் பவளத்தின் உள்ளும் புறமும் கலந்திருத்தலால் ஆகும்.

இது உலகம் உயிர்கள் அனைத்திலும் கலப்புற்று அபேதமாய் தோன்றும் இறையின் அத்துவித நிலையைக் குறித்து நிற்கிறது. மூன்றாவதாக செவ்வண்ணர் என்னும்போது செந்நிற ஞாயிறின் சிவந்த ஒளிக்கதிர்கள் அந்தி வானில் பட்டு சிவந்து தோன்றும் நிலை யாகிய வர்ணனையில் இறைவன் எவற்றிலும் கலந்து நிற்கும். அவற்றில் பற்றில்லாதவனாய் நிற்கும் பேதாபேத அத்து வித நிலை குறித்து நிற்கின்றது. இந்த நிலைகளில் எம்பெருமான் மெய்ஞானிகளின் சிந்தையுள் இருப்பதன் சிந்தையாரே என்கிறார் அப்பர் சுவாமிகள்.

அடிகளார் மேல் கூற்றுவன் வரும்போது தடுக்கும் இறையின் நிலை பேரருள் உடைமையையும், வெய்ய வினைகள் நைதல் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கும் நிலையையும் எம்பரிவு தீர்த்தோம் என்பதானால் முடிவில் ஆற்றல் உடைமையையும், இடுக் கண் இல்லோம் என்பதால் இறையின் பேராற்றலையும் கருணையையும் அப்பர் சுவாமிகள் தன் அனுபவம்மூலம் பாடி வைத்துள்ளார். அவரது வாக்கில்,

1) இயற்கை உணர்வினனாதல்.
2) இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்குதல்.
3) தூய உடம்பினராதல்.
4) பேரருள் உடைமை.

ஆகிய குணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இத்தகைய இறைவனின் பூரண அருளைப்பெற்ற மெய்ஞ்ஞானிகளின் நிலை சூரியன் கிழக்கே உதித்தால் என்ன, வடக்கே உதித்தால் என்ன. வடகோடு உயர்ந்தால் என்ன! தென்கோடு சாய்ந்தால் என்ன எமக்கேது குறை என்று அமைதிபெறும் நிலையாகும்.

இக்கருத்தை மணிவாசகப்பெருமானும் "எங்கெழில் என் ஞாயிறு எமக்கு" என்று பாடியிருப்பதை இங்கு தொடர்புபடுத்திப் பார்ப்போம்.

"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழம் சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எம்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்கெழில் என்! ஞாயிறு எமக்கேல் ஓர் எம்பாவாய்!"

*முன்னேற்றம் என்பது இன்றைய செயலாக்கம், நாளைய உறுதிநிலை.*

(தொடர் -09)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

சைவசமயம் எதிர்மறைக் கோட்பாடுகளை வலியுறுத்துகின்ற மதம் என்கிற ஒரு தவறான கருத்து சிலரிடையே நிலவி வருகிறது. பெரும்பாலும் எமது சமயத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாத மேல்நாட்டினர் வெளியிட்ட கருத்தாகத்தான் இது இருக்கிறது. யானையைத் தடவிப் பார்த்த குருடர்கள் செய்த விமர்சனம்போல சைவ சமயம் பற்றிய மேல் நாட்டினர் பலரின் விமர்சனங்கள் அமைந்து இருப்பதையும் பார்க்க முடிகிறது.

கட்டுரைத் தொடரில் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப்போல நமது சமயம் எந்த ஒருவராலும் தோற்றுவிக்கப்பட்ட சமயம் அல்ல. பல்வேறு ஞானிகளின், சிந்தனையாளர்களின், மகான்களின், பக்தர்களின் கோட்பாடுகளும் வாழ்க்கை உபதேசங்களும் கொண்டதுதான் நமது சமயம், தவிர பல ஆயிரம் ஆண்டுகளாக ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பில் வாழ்ந்த மக்கள் கண்டு தெளிந்த வாழ்க்கை உண்மைகளும் சைவ சமயத்தில் அடங்கும்.

ஆகவே யாரோ ஒருவர் சொன்னதோ, அல்லது ஏதோ ஒரு கூட்டத்தினர் கடைப்பிடித்த வாழ்க்கை முறையோ மட்டும் சமயம் ஆகிவிடாது. ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டியதை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, இதுதான் சைவம் என்று விமர்சிக்கத் தொடங்கும்போது பல்வேறு குழப்பங்கள் தோன்றுகின்றன. சில தவறான எண்ணங்களும் உருவாகின்றன. தனிமனிதன் சமுதாயத்தில் இருந்து ஒதுங்கி தன்னுடைய ஆத்ம விடுதலைக்காக என்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் சமயம் சொல்லிக்கொடுக்கிறது. அதே சமயம் குடும்ப வாழ்க்கையை ஒருவன் செம்மையாக நடத்தி இறைவனின் அருளை எப்படிப் பெறுவது என்பதற்கும் நமது சமயம் வழிகாட்டுகின்றது. அதே சமயம் ஆத்ம விசாரணையில் ஈடுபட்டவர்கள் சமுதாயத் தலைவர்களாக விளங்கி, வழிகாட்ட விரும்பினால், அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதற்கும் நமது சமயத்தில் நெறிமுறைகள் இருக்கின்றன.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் மறைவுக்குப் பிறகு அவருடைய சீடர்கள் தனித் தனியாகப் பிரிந்து போய் தங்கள் தங்கள் ஆத்ம விடுதலைக்கான முயற்சியில் ஈடுபட விரும்பினார்கள். இதை சுவாமி விவேகானந்தர் ஏற்கவில்லை. "அது ஆன்மீக சுயநலம்" எனக் கண்டித்த அவர், "ராமகிருஷ்ணரின் சீடர்கள் ஒருங்கிணைந்து ஓர் அமைப்பை உருவாக்கி, சமூக நலனுக்காக ராமகிருஷ்ணரின் உபதேசங்களை மக்களிடையே பரப்பி பணி செய்ய வேண்டும்" என வற்புறுத்தினார். அதன் விளைவாகத்தான் ராமகிருஷ்ண மடமும், ராமகிருஷ்ண மிஷனும் உருவாயின. அந்த அமைப்புக்கள் செய்து வருகின்ற மகத்தான சமுதாயப் பணிகளை நாம் அறிவோம்.

ஆகவே நமது சமயம், உலகை வெறுத்து அனைவரையும் துறவு மேற்கொள்ளச் சொல்லுகிறது என்கிற கருத்து தவறானதாகும். வாழ்க்கையை வெறுக்குமாறு எந்த இடத்திலும் நமது சமயம் கூறவில்லை. பற்றற்று வாழவேண்டும் என்பது வாழ்க்கையை

*மனிதனுடைய வலிமையை அழிப்பவை மூன்று. அவை அச்சம், கவலை, நோய்.*

வெறுப்பது ஆகாது. "தாமரை இலைத் தண்ணீர் போன்ற வாழ்க்கை" எனச் சொன்னார்கள். தாமரை இலையில் தண்ணீர் நின்றாலும் அது இலையுடன் ஒட்டாது. இதை இன்னொரு விதமாகவும் பார்க்கலாம். தண்ணீரை ஆதாரமாகக் கொண்டுதான் தாமரைக் கொடி வளர்கிறது. என்றாலும், தண்ணீரைத் தன்மீது ஒட்ட அது விடுவதில்லை.

பந்த பாசத்தை ஆதாரமாக வைத்துத்தான் நாம் வாழ்க்கை நடத்த வேண்டி இருக்கிறது. என்றாலும், அது நம்மை ஆட்டிப் படைக்கின்ற சக்தியாகி விடக்கூடாது என்பதை மட்டும்தான் சமயம் வலியுறுத்துகிறது. மற்றும்படி வாழ்க்கையை வெறுக்கச் சொல்லவில்லை. வாழ்க்கையை நேசிக்கச் சொல்லுகிறது. இன்பங்களை அனுபவிக்கச் சொல்லுகிறது. அதேசமயம் இன்பத்திற்கு அடிமைப்பட்டு, செய்ய வேண்டிய வாழ்க்கைக் கடமைகளை மறந்துவிடாதே என்றும் எச்சரிக்கிறது. இந்த எச்சரிக்கை எதிர்மறையானதல்ல. வாழ்க்கையை செம்மையாக வாழவேண்டும் என்றால், அதற்குப் பொருள் தேவை. பொருள் தேடாமல் வாழ்க்கைக் கடமைகளை நிறைவேற்றுவது சாத்தியமில்லை.

பணம் சம்பாதிப்பது தவறு என்று சைவசமயம் எந்த இடத்திலும் சொல்லவில்லை. தவறான வழிகளில் பணம் திரட்டுவது குற்றம் என்று எச்சரிக்கிறது. சரியான வழிகளில் சம்பாதித்த பணத்தை முறையாகச் செலவிடு என்று உபதேசிக்கிறது.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று சொன்னவர்கள் நாம். செல்வம் என்பது ஒரு மகத்தான சக்தி என்பதை இந்துக்கள் தெளிவாகவே அறிந்திருந்தார்கள். செல்வத்துக்கு ஒரு கடவுளையே உருவாக்கினார்கள். அந்தக் கடவுளையும் பெண் கடவுளாகச் சித்தரித்தார்கள். அந்தப் பெண் கடவுள் திருமாலின் மனைவி என்று வர்ணிக்கப்பட்டாள். மும்மூர்த்திகளில் ஒருவரான திருமாலின் வேலை என்ன? காக்கும் கடவுள் அவர். காக்கும் கடவுளின் மனைவி லட்சுமி. அவள் செல்வத்திற்கு அதிபதி. இந்தக் கற்பனையில் உள்ள நயத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

படைக்கின்ற கடவுள் பிரம்மா. அவர் மனைவி சரஸ்வதி. அவள் கல்விக்கும் கலைகளுக்கும் அதிபதி. கல்வி படைக்கிறது. செல்வம் காக்கிறது. காக்கும் கடவுளின் மனைவியே செல்வத்துக்குக் கடவுள். ஒருவன் தன் வாழ்க்கையைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் அவனுக்குச் செல்வம் அவசியம் என்பதை இதைவிட வேறு எப்படித் தெளிவாகச் சொல்ல முடியும்?

வள்ளுவப் பெருமான் அழகாகச் சொன்னார்,

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

அருள் இல்லாதவர்களுக்கு சமூக வாழ்வு இல்லை. பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகச் சுகங்கள் இல்லை என்பது இதன் பொருளாகும். "அவ்வுலகம்" என வள்ளுவர் குறிப்பிட்டதை மேலுலகம் என்பதைவிட சமூகத்தில் வாழ்தல் எனக் குறிப்பிட்டால் நன்றாக இருக்குமென்று அடியேன் கருத்தாகும். வள்ளுவர் வீடுபேறு பற்றி நேரடியாகப் பேசாதவர். அப்படியிருக்க மேல் உலகம் பற்றிய சிந்தனையை சமூகம் எனக் கொள்வது சிறப்பானது. ஏனெனில் அருள் இல்லாதவர்கள் சமூகத்தில் சாதிக்க முடியாது.

லட்சுமியை பூசை செய்தால் செல்வம் பெருகும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. அதனாலேயே சில லட்சுமி படங்களில் அவளது வலது கரத்திலிருந்து நாணயங்கள் வெள்ளம்போல பாய்வதாகச் சித்தரித்திருப்பார்கள். அந்தப் படத்தைப் பார்த்து பூசை செய்கின்றபோதெல்லாம் பணம்தான் மனதில்

*தீய எண்ணங்கள் உள்ளத்தைக் கெடுப்பதுபோலவே உடலையும் கெடுக்கின்றன.*

நீக்கமற நிறைந்திருக்கும். எதைப்பற்றி ஆழமாக நாம் சிந்தித்துக்கொண்டிருக்கிறோமோ, அதைப் பெறுவதற்கான முயற்சியில் நம் மனம் ஈடுபடும் என்பது ஒரு மனோ தத்துவ நம்பிக்கை.

பணத்தை வெறுப்பதை ஒரு நோக்கமாக எந்த மதமும் உபதேசிக்க முடியாது. இந்து மதமும் அப்படிச் செய்யவில்லை. ஆனால் இந்து மகான்கள் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார்கள். செல்வந்தர்களாக இருக்கின்றவர்கள் தங்கள் செல்வத்தை தர்ம காரியங்களுக்குப் பெரும் அளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுவேயாகும்.

"செல்வந்தர்கள் ஏழைகளின் தர்ம கர்த்தாக்களாகச் செயற்படவேண்டும்" என மகாத்மா காந்தி கூறினார்.

"செல்வத்துக்குப் பயன் ஈதலே" என்று தமிழர்கள் கூறினர். பணக்காரர்களின் செல்வம் எப்படிப் பயன்படவேண்டும் என்பதை வள்ளுவர் வெகு அழகாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்.

"ஊருணி நீர் நிறைந் தற்றே உலக வாம்
பேரறி வாளன் திரு"

"பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான் கண் படின்"

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான் கண் படின்"

முதல் குறளில் செல்வந்தரிடமுள்ள செல்வம் ஊரார் நீர் எடுக்கும் குளம் நீரால் நிரம்பியிருப்பதைப் போலப் பயன் தரவேண்டும் எனச் சொல்லுகிறது. இது எப்போது சாத்தியமாகும் என்றால் வாரி வழங்குகின்ற வள்ளல் தன்மை கொண்டவன் அந்தச் செல்வத்திற்கு அதிபதியாக இருக்கும்போது.

அடுத்த குறளில், வேறொரு உவமையை வள்ளுவர் கூறுகிறார். வள்ளல் குணம் கொண்டவனிடம் செல்வம் மிகுந்திருப்பது, ஊரின் நடுவிலுள்ள பயன்தரும் மரம் பழங்களால் நிறைந்து பழுத்திருப்பதைப் போன்றதாகும். ஊரின் நடுவிலுள்ள மரம் பழுத்தால் விருப்பப்பட்டவர்கள் எப்போது வேண்டுமானாலும் அந்தப் பழங்களைப் பறித்துச் சாப்பிடலாம். அதைப்போல கொடையாளியிடம் செல்வம் மிகுந்திருந்தால், வேண்டிய பொழுது பெற்று அனுபவிக்கலாம்.

மூன்றாவது குறளில் வேறொரு உவமையைச் சொல்லுகிறார். சில மரங்கள் நோய் தீர்க்கும் மூலிகைகளாகவும் விளங்குகின்றன. இப்படிப்பட்ட மரம் ஊரின் எல்லாப் பகுதிகளிலும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். நோய்வாய்ப்பட்ட எவரும் அந்த மரத்தின் மூலிகைக் குணத்தைப் பயன்படுத்தி நோயைப் போக்கிக்கொள்ள முடியும். பிறருக்கு உதவும் ஈகை குணம் கொண்டவனுடைய செல்வம் "மூலிகை மரத்துக்கு" இணையானது என்கிறது மூன்றாவது குறள்.

ஒரே விடயத்தை விளக்கத் திருவள்ளுவர் மூன்று உவமைகளை மூன்று குறள்களில் எதற்காகச் சொல்ல வேண்டும்? இந்த மூன்று குறள்களும் மேலே அமைந்துள்ள வரிசைப்படியே அடுத்தடுத்து வருகின்றன.

ஊரில் பொதுவான குளம் நீர் நிறைந்ததைப் போன்றதாம் கொடையாளியின் செல்வம். பொதுக்குளத்தில் நீர் நிரம்பியிருந்தால் அதில் நீர் எடுக்க யாருடைய அனுமதியும் தேவையில்லை. எவர் வேண்டுமானாலும் வேண்டிய அளவு நீரைப் பெற்று பயன் பெறலாம்.

செல்வந்தனின் செல்வம் எல்லோருக்கும் பொதுவாகப் பயன்படும் தன்மையில் இருக்க வேண்டும். செல்வம் சம்பாதித்தது அவனே தவிர அந்தச் செல்வம் தனக்கு மட்டுமே பயன்பட வேண்டும் என அவன் எண்ணுவதில்லை. எல்லோருக்கும் பயன்படும்

*அடுத்தவரது வாதத்தை வெல்வது வெற்றியல்ல; அவரது மனதை வெல்வதுதான் வெற்றி.*

படியாகச் செல்வத்தை பொதுவாக்கி விடுகிறான்.

மரம் பழுக்கும்போது அதனுடைய பழங்கள் அனைவருக்கும் பயன்படுகிறது. மரம் பழுக்கும் வரையில் காத்திருக்க வேண்டும். முயற்சியினால்தான் பழத்தைப் பறித்து உண்ணவேண்டும். கொடையுள்ளம் கொண்ட செல்வந்தனின் செல்வம் கிடைக்கிறதே என்பதற்காக தேவையில்லாத பொழுதெல்லாம் அதைப் பெற்று விரயம் செய்துவிடக்கூடாது. இந்த உவமையில் கொடையாளியின் பணம் பயன்படும் என்றாலும், அதைக் காலமறிந்து, அதன் சுவையறிந்து பயன்படுத்த வேண்டும் என்பது எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

மூன்றாவது குறளில் கொடையாளியின் செல்வம் மூலிகை மரத்துக்கு ஒப்பிடப்படுகிறது. நோய் கண்டவன்தான் மூலிகை மரத்தை நாடிச்செல்ல வேண்டும். நோயைத் தீர்த்துக்கொள்வதற்கு மட்டும்தான் அந்த மரத்தைப் பயன்படுத்த வேண்டும். அதைப் போல் செல்வந்தர் கொடையாளியாக இருக்கிறானே என்பதற்காக நோய் இல்லாதவர்களும், அதாவது சமூகத்தில் உழைக்கும் ஆற்றல் உடையவர்களும், அவனுடைய உதவியை நாடிச் செல்லக்கூடாது. செல்வம் எப்படிப் பயன்படவேண்டும் என்கிற மூன்று நிலைகள் மூன்று குறள்களில் அருமையாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. செல்வந்தர்கள் மக்கள் நல உணர்ச்சியுடன் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதும் விளக்கப்பட்டிருக்கிறது. ஒரு குறள், செல்வந்தரின் செல்வம் எல்லோருக்கும் பயன்படத்தக்க வகையில் இருக்கவேண்டும் எனச் சொல்லுகிறது. இன்னொரு குறள் செல்வந்தரின் செல்வம், செல்வத்தைப் பயன்படுத்தத் தெரிந்தவர்களுக்குச் சென்று உதவ வேண்டும் என்கிறது. மூன்றாவது குறள் செல்வந்தரின் செல்வம், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குப் பயன்படும் தன்மையில் இருக்க வேண்டும் என்கிறது. செல்வம் சமூக நலனுக்குப் பயன்படும் மூன்று வழிகளை மூன்று குறள்கள் எடுத்துக் காட்டுகின்றன.

பொருள் சேர்ப்பது பாவம் என்று இந்துமதம் சொல்லவே இல்லை. பாவ வழிகளில் பொருள் சேர்க்காதீர்கள் என்று மட்டும்தான் சொல்கிறது. நல்ல வழியில் சேர்த்து செல்வத்தை அனைவரும் பயனடையும் படி செலவழியுங்கள் என்று சொல்லுகிறது.

பலர் பணத்துக்கு அடிமைகளாகி விடுகின்றனர். ஆனால் பணத்தை தனக்கு அடிமையாய் வைத்திருப்பவனே நல்ல மனிதனாகிறான். பணத்தைப் பயன்படுத்த தெரியாதவன் மனிதன் அல்ல; அவன் விலங்குக்கு ஒப்பானவன்.

அறத்தின் தன்மை கூறப்பட்ட பிறகு பொருளின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. பொருள் சேர்த்து அறவாழ்க்கை வாழ்ந்தால், இன்பம் தானாகவே வருமல்லவா?

(தொடரும்...

*துப்பாக்கி சுடக் கற்றுக்கொள்ள விருப்பமுடைய ஒருவன் முதலில் பெரிய பொருள்களைக் குறியாக வைத்துச் சுடக் கற்றுக்கொள்கிறான். சுடுவதில் அவன் பழகப் பழக, சிறு குறிகளைத் தூர வைத்துச் சுடுவதில் தேர்ந்து நாளடைவில் மிகத்திறமை பெற்றவன் ஆகிறான். இதுபோலவே உருவுள்ள விக்கிரகங்களின் மேல் மனத்தை நிலைக்கச் செய்யப் பழகினபிறகு உருவில்லாத பொருள்களின்மேல் நிலைத்திருக்கச் செய்வது எளிதில் முடிகிறது.*

-ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்-

*அறிவை உணர்ச்சி வெல்வது இயல்பு, அறிவால் உணர்ச்சியை வெல்வது உயர்வு.*

# வைகாசிப் பெருவிழா - 2018


– தொகுப்பு: வல்வையூர் அப்பாண்ணா –

1993 முதல் ஆண்டுதோறும் வைகாசி விசாகத்தை முன்பின்னதாக வைத்து நடைபெற்றுவரும் வைகாசிப் பெருவிழா இவ்வாண்டு 29.05.2018 செவ்வாய்க்கிழமை காலையில் ஆச்சிரம மண்டபத்தில் கோலாகலமாக நடந்தேறியது. அன்றையநாள் ஒரு பொதுவிடுமுறை நாளாக இருந்ததனால், பலரும் கலந்துகொள்ள நல்ல வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

வழமையான அம்சங்களுடன் இரண்டு சிறப்பு நிகழ்ச்சிகளினால் இவ்வருட விழா சிறப்புப் பெற்றது. தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் சிறப்புச் சித்திபெற்ற மாண வர்களதும், அந்த மாணவர்கள் சார்ந்த கல்லூரி அதிபர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரதும் எண்ணங்கள்- அபிப்பிராயங்கள்- ஆலோசனைகள் என அனைத்தும் உள்ளடக்கிய "வித்தகச் செழுமை" எனும் நூல் வெளியீடு வைகாசிப் பெருவிழாவின் முதல் சிறப்பம்சமாக அமைந்தது.

அடுத்து அண்மையில் மணிவிழாக் கண்டவரும், சந்நிதியான் ஆச்சிரமத்துடனும், சைவ கலை பண்பாட்டுப் பேரவையுடனும் மிகுந்த ஈடுபாடும்- ஒத்துழைப்பும் நல்கிவரும் ஓய்வு பெற்ற அதிபர் ஆறுமுகம் சிவநாதன் அவர்களுக்கு ஆச்சிரமம் சார்பாக "ஞான பண்டித ஆன்மீக வித்தகர்" எனும் கௌரவ விருது வழங்கப்பட்ட நிகழ்வும் வைகாசிப் பெருவிழாவின் இரண்டாவது சிறப்பம்சமாகும்.

"வித்தகச் செழுமை" நூலில் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்ட பல மாணவர்களும், ஓய்வுபெற்ற அதிபர் ஆ. சிவநாதன் அவர்களும், விழாவிற்கு வருகை தந்த ஏனையவர்களும் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை நிகழ்வுகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாயின.





சந்நிதியான் ஆச்சிரம வாசலும்- பூவரச மரத்தடியும்- மண்டபமும் வாழை தோரணங் களால் அலங்கரிக்கப்பட்டு அலங்காரம் சேர்க்க, நமது சைவ சமய கலாசார நிகழ்வுகளின் சின்னமான நந்திக் கொடிகள் நெருக்கமாகப் பறந்துகொண்டிருக்க விழா நிகழ்வுகள் ஆரம்பமாயின.

*கவலைகளிலிருந்து விடுபட ஒரேவழி இறைவன்மீது நம்பிக்கை வைப்பதே ஆகும்.*

திரு தங்கராசா அவர்களினால் பஞ்சபுராணம் ஓதப்பட்டதும், பேரவை உறுப்பினர் திரு கு. அருணகிரிநாதன் அவர்களின் வரவேற்புரையினைத் தொடர்ந்து, பேரவையின் போஷகரான தண்டபாணிக தேசிகரின் வாழ்த்துரை இடம்பெற்றது. தமது வாழ்த்துரையுடன்



"தம்மைப்போன்ற குருமார்கள் கலந்து கொள்ளும் 'வாழ்த்துரை' நிகழ்வுகளை இனிவரும் காலங்களில் 'அருளுரை' எனத் தெரியப் படுத்துவது சிறப்பானது" எனத் தேசிகர் கூறிய கருத்து கவனத்தில் எடுக்கப்படவேண்டியதே.

விரிவுரையாளர் திரு அ. குமாரவேல் அவர்களது தலைமையுரையில், ஆச்சிரமத்து



நிகழ்வுகள் அத்தனையும் பட்டியலிடப்பட்டுப் பாராட்டுத் தெரிவித்ததுடன், 17.02.2018இல் நடைபெற்ற மாணவர் கௌரவிப்பும்- அந்நிகழ்வுக்கு அதிபர், ஆசிரியர்களையும் அழைத்துப் பாராட்டியது தனிச் சிறப்பான அம்சம் எனவும் பெரிதும் பாராட்டினார். "ஆன்மீகக் கலப்பின்றி கல்வியே இல்லை" எனும் ஆழமான கருத்தினை அழுத்திக் கூறித் தமது தலைமை உரையை நிறைவு செய்தார் திரு அ. குமாரவேல் அவர்கள்.

அடுத்து இடம்பெற்ற ஆச்சிரம சுவாமிகளின் சிறப்புரையில், அன்று விருதுபெற அழைக்கப்பட்டிருந்த திரு ஆறுமுகம் சிவநாதன் அவர்களுக்கும் ஆச்சிரமத்திற்குமான தொடர்புகளை எடுத்து விளக்கியதுடன்



*நீ மற்றவருக்குக் கொடுக்காததை மற்றவரிடமிருந்து எதிர்பார்க்காதே.*

"ஞான பண்டித ஆன்மீக வித்தகர்" என்னும் விருதினை விழாவுக்கு அருளுரை வழங்குவதற்கு வருகை புரிந்த நல்லை ஆதீன முதல்வருடன் இணைந்து வழங்கிச் சிறப்பித்தார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப்பெறும் "வைகாசிப் பெருவிழா நன்னாளில் சமயச் சான்றோர்கள், பல்கலை வித்தகர்கள், வைத்திய கலாநிதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரையும் "ஞான பண்டித....." எனும் முருகன் திருநாமத்தை முன் நிறுத்திய விருதுகள் வழங்கப்படுவது வழமையானது. இந்த வரிசையில் இன்றைய விழாவில், ஆச்சிரம சுவாமிகளால் திரு ஆ. சிவநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்ட "ஞான பண்டித ஆன்மீக வித்தகர்" எனும் சிறப்பு விருதானது, அவர் ஆன்மீக ரீதியாக ஆற்றிவரும் சேவைக்குக் கிடைத்த மிகப்பெரிய விருதாகும். சுவாமிகளின் பாராட்டும் - விருது வழங்கலும் நிறைவுபெற்றபின், பலரும் திரு ஆ. சிவநாதன் தம்பதியருக்கு மாலையணிவித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

அண்மையில் ஆச்சிரம சுவாமிகளுக்கு சந்நிதியான் ஆச்சிரம ஆர்வலர்களால், ஆச்சிரம வரலாறு காணாத பெருவிழாவாக முன்னெடுக்கப்பட்ட சுவாமிகளின் கௌரவிப்பு நிகழ்வினை முழுமைபெறச் செய்யும் நோக்கில் அமைக்கப்பட்ட "கௌரவிப்பு விழாக் குழுவின்" செயலாளராகக் கடமையாற்றி, அன்றைய விழாவை சிறப்புறச் செய்த பணியில் திரு ஆ. சிவநாதன் அவர்களின் பங்கு மிகப்பெரியது.



அடுத்து மேடையில் கண்கவர் கலைநிகழ்வு இடம்பெற்றது. ஒட்டிசுட்டான் சம்மளந்துளாய் அறநெறிப் பாடசாலை மாணவ - மாணவியின் நாட்டிய நிகழ்வு கண்ணுக்கு விருந்தாக அமைந்தது.

யான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று "வித்தகச் செழுமை" புத்தக வெளியீடு இன்றைய வைகாசிப் பெருவிழாவின் பிரதான அம்சமாக அமைந்திருந்தது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் சிறப்புப்பெறுபேறு பெற்று 17.02.2018இல் ஆச்சிரமத்தினால் கௌரவிக்கப்பட்ட எல்லா மாணவர்களதும் மன எழுச்சியினை நூலுருவாக "வித்தகச் செழுமை"




எனும் பெயர் தாங்கி, பால முருகன்- மயில்வாகனம் சுவாமிகள்- பேரவையின் இலச்சினை ஆகியவற்றுடன் மாணவர்களின் புகைப்படங்களுடன் நூலின் முகப்பு அட்டை அலங்காரம் பெற, 44 பக்கங்களுடன் நூலானது விரிந்து செல்கின்றது.

மாவட்ட கல்விப் பணிப்பாளர், வவுனியா பிரதேச செயலர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், கிராமிய ஆயுள்வேத மருத்துவ அதிகாரி எனப் பலரதும் எண்ணக் கருத்துக்களுடனும், மாணவர்களின் பலதரப்பட்ட அபிப்பிராயங்களும் அலங்கரிக்கின்றன. மாணவர்களுக்குப் பயன்படும்படியான வள்ளுவனின் குறள்கள்

முப்பத்து நான்கு பக்கங்களின் இடைவெளிகளை பகிர்ந்து கொண்டுள்ளன. "வித்தகச் செழுமை" நூலுக்கு அணிசெய்த அத்தனைபேரும் (மாணவர்கள் உட்பட) விழாவிற்கு அழைக்கப்பட்டு புத்தகப் பிரதிகள் வழங்கப்பட்டன.







"ஞான பண்டித ஆன்மீக வித்தகர்" விருது பெற்ற திரு ஆ. சிவநாதன் அவர்களின் ஏற்புரையினைத் தொடர்ந்து, திரு சி. நாகலிங்கம் அவர்களின் நன்றியுரையுடன் 2018- வைகாசிப் பெருவிழா நிறைவெய்தியது.

இந்நேரத்தில் விழா சிறப்புற அமைவதற்கு வருடா வருடம் நிதிஉதவி வழங்கிவரும் ஆச்சிரம ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவது ஏற்புடையதே. அவ்வகையில் அவர்களை வாழ்த்தி வழுத்துகின்றோம்.

## 2018ஆம் ஆண்டு வைகாசிப் பெருவிழாவிற்கு நிதியுதவி வழங்கியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| த. கணேசமூர்த்தி | இலங்கை வங்கி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வை. துரைராசா | ஓஸ்காலேன் | உரும்பராய் | 2500. 00 |
| செ. நவரத்தினராசா | (கப்பூது) | குப்பிளான் | 5000. 00 |
| பாக்கியரெட்ணம் இரும்பகம் | | சங்கானை | 5000. 00 |
| இ. இராசநாயகம் | துர்க்கா மரக்காலை | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| M.S.K. மகேஸ்வரன் | | தாவடி வடக்கு | 2000. 00 |
| S. சுந்தரலிங்கம் (செல்வம்ஸ்) | சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 5500. 00 |


| | | | |
|---|---|---|---|
| மகாராணி புடவையகம் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வ. இராசையா c/o. இ. இராஜேஸ்வரன் | கேணியடி | திருநெல்வேலி | 2000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | | நீர்வேலி | 1100. 00 |
| Dr சி. இராசலிங்கம் இளை. வைத்திய பொறுப்பதிகாரி | | அச்சுவேலி | 1000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் | மாலிசந்தி | அல்வாய் | 2000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் | | கரணவாய் தெற்கு | 2000. 00 |
| சி. சரவணப்பெருமாள் | | கரணவாய் தெற்கு | 2000. 00 |
| செல்வி சண்முகப்பிரியா வைத்தியநாதக் குருக்கள் | | பொலிகண்டி | 2000. 00 |
| Dr E. கனகரெத்தினம் | கொற்றாவத்தை | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | மயிலியதனை | தொண்டைமானாறு | 2000. 00 |
| சுந்தர்சன்ஸ் | | மானிப்பாய் | 3000. 00 |
| சி. நாகலிங்கம் | லிங்கம்ஸ் | கரணவாய் தெற்கு | 2000. 00 |
| வ. ஆறுமுகம் அதிபர் | | ஆவரங்கால் | 2000. 00 |
| த. சிவகுருநாதன் | துவாரகா வெதுப்பகம் | கரணவாய் | 3000. 00 |
| லிங்கம் கூல்பார் | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| க. கைலநாதன் | | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| திருமதி ஜெகதீஸ்வரன் தர்மவதனி | | குப்பிளான் | 5000. 00 |
| E.S.P. நாகரெத்தினம் | | யாழ்ப்பாணம் | 10000. 00 |

## கடவுளுக்குச் சமம்

அன்பான அந்த முதியவருக்கு ஒரு பேரன் இருந்தான். பெயர் எழிலன். ஒருநாள் நண்பர்களுடன் விளையாடுவதற்காக வீட்டுக்குப் பின்புறம் உள்ள தோட்டத்துக்குச் சென்றான். நண்பர்கள் கூடினர். ஒளிந்திருப்பவரைக் கண்டுபிடிக்கும் விளையாட்டைத் தேர்ந்தெடுத்தனர். அதன்படி எழிலன் ஓரிடத்தில் மறைந்துகொள்ள மற்றவர்கள் அவனைத் தேடுவது எனத் தீர்மானித்தனர். எழிலன் மறைந்துகொண்டான். ஆனால் நண்பர்கள் அவனைத் தேடவே இல்லை. எழிலனை அவர்கள் ஏமாற்ற நினைத்தனர். அவர்கள் வேறு விளையாட்டை ஆடுவதற்காக வேறு எங்கோ சென்றுவிட்டனர். வெகுநேரம் தன்னைத் தேடிக் கண்டுபிடிப்பார்கள் என நினைத்த எழிலன் ஏமாற்றத்துக்குள்ளானான். அவனுக்குச் சலித்துவிட்டது. தான் மறைந்திருந்த இடத்தைவிட்டு வெளிவந்தான். யாரையும் காணவில்லை. அவனுக்கு அழுகையாக வந்தது. யாரும் தன்னைத் தேடுவதில் அக்கறை காட்டவில்லை என்று மிக வருத்தப்பட்டவாறு நின்றிருந்தான். அந்த வழியே தாத்தா வந்தார். அவரிடம் "தாத்தா, என் நண்பர்கள் என்னை ஏமாத்திட்டாங்க..." என்று நடந்ததைக் கூறினான். அதற்குத் தாத்தா, "இப்போது நீ கடவுளுக்குச் சமமாகிவிட்டாய்... அவரும் இப்படித்தான் ஒளிந்துகொண்டிருக்கிறார். தன்னை யாரும் உண்மையாகத் தேடுவதில்லை என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்... வா... போகலாம்!" என்றார்.

*இந்தப் பிறப்பில் நீ செய்யும் நன்மைகளை மறு பிறப்பிலே அனுபவிப்பாய்.*

# படங்கள் தரும் பதிவுகள்



வைகாசி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...




*பொய் சொல்லிப் போலி வாழ்க்கை வாழ்பவர்களுக்கு மனநிம்மதி இல்லை.*



வைகாசி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



இடைவிடாது சிவத்தியானம் செய்பவர்களுக்கு ஒரு காலத்திலும் அபாயம் ஏற்படாது.



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வைகாசிப் பெருவிழா நிகழ்வின்போது வழங்கப்பட்டது.




சந்நிதியான் ஆச்சிரமத்தால் கதிர்காம பாதயாத்திரையில் பங்குபற்றும் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் குறிப்பாக உகந்தை முருகன் ஆலயத்திலிருந்து காட்டுப் பாதையூடாக பயணிக்கும் யாத்திரிகர்கள் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் தம்பிலுவில் சிவதொண்டர் அணியினர் கேட்டுக்கொண்டதற்கமைவாக சுமார் ஆறு இலட்சம் பெறுமதி வாய்ந்த 5000 லீற்றர் நீர் கொள்வனவு செய்யக்கூடிய நீர்த்தாங்கி ஒன்று சிவதொண்டர் அணியிடம் கையளிக்கப்பட்டது.

# வட இந்திய யாத்திரை - 05

(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

அகோரிகளைக் காணவேண்டும் எனும் முனைப்போடு செயற்பட்ட எமக்கு ஏமாற்றமே மிஞ்சியது என்றே கூறலாம். நாம் போன சமயம் குடிசை நிசப்தமாக இருந்ததோடு இரவு கூடியிருந்த அகோரிகளில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் வெளியேறி காட்டுக்குள் சென்றுவிட்டார்கள். குடிசையில் இருந்தவர்கூட ஒருவித தியான நிலையில் இருந்தமையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆனாலும் குடிசையின் உட்புறத்தில் இருந்து வந்தவரைக் கண்டதும் மனதுக்கு ஒரு ஆறுதலாக இருந்தது. அதுவும் அவர் தமிழில் எம்மோடு உரையாடியது எமக்கு வியப்பை ஏற்படுத்தியது. அவ்வகையில் அவரோடு உரையாடுவோம் எனும் எண்ணத்துடன் அவரை அணுக முற்பட்டவேளை உடனடியாக இவ்விடத்தை விட்டு போய்விடுங்கள் என்று கூறியதும் இவ்வகைச் செயற்பாட்டை எதிர்பார்த்து வந்திருந்த எமது குழுவினரின் மனதில் அயர்ச்சி தோன்றியது. அதிகாலை அகோரிகளைக் காண்போம் எனும் சிந்தனையுடன் வந்த நேரத்தில் குடிசையில் இருந்த இரண்டு பேருடன்கூட கலந்துரையாட முடியாத நிலை நமக்கு. ஆனாலும் எம்மை நிற்கவேண்டாம் போங்கள் என்று கூறியபடி உள்ளே செல்ல முற்பட்ட அந்த இளைஞனைப் பார்த்து நாம் இலங்கையில் இருந்து வந்துள்ளோம். அதிலும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறோம் என்று சொன்னதும் உள் நுழையவிருந்த அந்த இளைஞன் யாழ்ப்பாணத்திலிருந்தா? என்ற ஆச்சரியம் கலந்த குரலில் கேட்டபடி எமை நோக்கித் திரும்பி வந்தார்.

அப்போதுதான் அந்த இளைஞனை உற்று நோக்கினோம். சுமார் முப்பது வயது இருக்கும். இடையில் ஒரு சிறு துண்டுடன் கழுத்தில் ஒருசில மாலைகளும் அணிந்தபடி குடிசையைத் துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்ட அவர் எம்மைக் கண்டதும் அக்கோலத்துடன் குடிசையை விட்டு வெளியில் வந்து எம்மோடு தனது உரையாடலைத் தொடங்கினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வளவு தூரம் வந்துள்ளீர்கள். உங்களைப் பார்த்தபொழுது தமிழ்நாட்டில் இருப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது. எனது உறவினர்களைச் சந்திப்பது போன்ற மகிழ்ச்சி. எனது இடம் தமிழ்நாட்டில் சேலம். சேலத்திலிருந்த காரணத்தால் ஈழத் தமிழர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக உங்கள் பழக்க வழக்கங்கள் எல்லாம் எனக்கு நன்கு தெரியும் என்று கூறியதோடு தான் கடந்த பதினைந்து வருடகாலம் ஆகின்றது காசிக்கு வந்து. வந்த காலங்களில் மிகவும் சிரமப்பட்டேன். காசியில் தங்கவேண்டும் எனும் நோக்கில் வந்த எனக்கு இவர்களது அறிமுகம் கிடைத்தது. சிறுவனாக இருந்த காரணத்தால் இவர்களது கூட்டத்தில் என்னையும் இணைத்துக் கொண்டார்கள். அன்றுமுதல் அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் பங்காற்றி வருகின்றேன். அதன் பயனாக ஒருவிதமான அமைதி கிடைக்கின்றது என்று தனது நிலைப் பாட்டை எமக்கு விளக்கினார். அது சரி, இப்போது அவர்கள் எல்லாம் எங்கே என்று கேட்டபொழுது மனிதர்களின் கண்ணில் தாம் படக்கூடாதென்ற கட்டுப்பாட்டைக் கடுமையாக

நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். அதிகாலை காட்டுக்குள் சென்றால் இரவு பத்து மணியளவில்தான் ஒருவர் பின் ஒருவராக வருவார்கள். அவர்களைக் காணும்பொழுது புதியவர்களுக்கு ஒரு பயம் தொற்றிக்கொள்ளும். வருகிறவர் ஒவ்வொருவரும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. வித்தியாசமான கோலத்துடன் வருவார்கள். சிலர் பிறந்தமேனியுடனும், சிலர் இடையில் ஒரு சிறு துண்டுடனும், சிலர் முழு வேட்டி சால்வையுடனும் வருவார்கள். ஆனாலும் ஒருவரோடு ஒருவர் கதைப்பது குறைவு அமைதியாக வருவார்கள். ஆனால் யாகம் செய்யும்பொழுது அவர்களது நிலையில் பெரும் மாற்றம் தெரியும். நான்கூட அந் நேரத்தில் அவர்களை அணுகமாட்டேன். அவர்கள் தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட் டும் நின்றுவிடுவேன். யாகம் தொடங்கி முடியும் வரை யாக குண்டத்தை சுற்றி அமர்ந்து பலவித செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். அதை நான் சொல்லக்கூடாது என்று கூறி எம்மை வழி அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார்.

யாகத்திற்குரிய பொருட்கள் எங்கேயிருந்து கிடைக்கின்றது என்ற வினாவுக்கு காசியில் எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய ஒரு சிலர் இருக்கின்றார்கள். அவர்கள்மூலம் அப்பொருட்கள் எமது கைகளுக்குக் கிடைத்துவிடும் என்று கூறியதன் பின் தனது கடமைகளைச் செய்வதற்கு ஆயத்தமானார்.

மறுமுறை காசிக்கு வரச் சந்தர்ப்பம் கிடைத்தால் எமது முழுநோக்கமும் அகோரி களோடு ஓர் இரவு இருந்து அவர்களது நடவடிக்கைகளை கவனிக்கவேண்டும் என்னும் எண்ணத்தோடு அவ்விடத்தை விட்டு அகன்று காசி விஸ்வநாதர் ஆலயத்தை பகல் 11 மணியளவில் அடைந்தோம். காசி விஸ்வநாதரைத் தரிசித்தபின் எமது இருப்பிடத்தை அடைந்து அன்று இடம்பெற்ற சம்பவத்தை எமது குழுவினருடன் பகிர்ந்து கொண்டோம். எமது பிர யாண ஒழுங்கின்படி மறுநாள்...

(தொடரும்...

## தத்துவம் பொய்யாகாது

ஏமாற்றும் பொய்யும் எத்தனை நாளைக்கு
எல்லாமே ஒருநாள் வெளிவந் தேயாகும்
பூமாலை புகழோ நிலையா னதொன்றல்ல
புரிந்திட்டால் வாழ்வினில் வெற்றிதான் எல்லாமே
தாமாக முழங்குவார் மேடையில் தத்துவங்கள்
தாராளம் அல்லவோ காட்டுவர் வினோதங்கள்
நாமாக நாய்போல் அலைந்து சலித்திட்டு
நாளும்பொழு தும்நாம் கண்டதோ ஒன்றுமில்லை.

-வ. யோகானந்தசிவம்-

பார்த்தவுடன் ஞானி புரிந்துகொள்வான், ஏமாளி பழகினாலும் புரிந்துகொள்ளமாட்டான்.

# ஆடி மாத வாராந்த நிகழ்வுகள்

06.07.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :– "பக்திப்பாடல்"

வழங்குபவர் :– வில்லிசைக் கலைஞர் திரு க. சத்தியதாஸ் அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

13.07.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

20.07.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகள் குருபூசை**

சொற்பொழிவு :– "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :– திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

27.07.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் ஆடி மாத வெளியீடு**

வெளியீட்டுரை :– செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள்

(பல்கலைக்கழகம் – பேராதனை)

247ஆவது மலர்

மதிப்பீட்டுரை :– திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

(சைவப்புலவர், ஆசிரியர்)

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

